
இந்திய மணிகள்



முகவுரை

சரித்திரகாலம் முதற்கொண்டு இந்தியா உலகிற்குப் பல வகைகளில் உதவியிருக்கின்றது. இந்தியாவின் பெருமையை உலகிற்கு அறிவித்த பெரியார் பலர் இந்நாட்டில் தோன்றி விளங்கினர். கடந்த ஒன்றரை நூற்றாண்டுகளாக நம்நாடு அடிமைத் தளைப்பட்டு வந்ததன் காரணமாக இங்கே பழம் பெரும் வழக்கங்கள், கலைகள் முதலாயின மங்கிப்போயின. இந்தியா நீர்ப்பெருக்கற்ற ஆறெனலாயிற்று. பெருக்கற்ற ஆறும் ஊற்றுப் பெருக்கினால் உலகூட்டு மன்றோ! அங்ஙனமே அடிமைப்பட்ட இந்தியாவும் இந்த நூற்றைம்பதாண்டுகளில் சில அரும் பெறல் பெரியார்களை உலகிற்கு அளித்துள்ளது. இப்புத்தகத்தின் நோக்கம் இதனை விளக்குவதேயாகும்.

தம் வாழ்நாளிலேயே ஒருவர் பெறும் புகழைத் தமிழ் நூல்கள் ஒளி என்று கூறும். ஒளியுடன் விளங்கிய பெரியார் பலரைப் படைத்தது நம் நாடு. அவர்களின் ஒளி இந்தியப் பரப்பையும் கடந்து 'சேண் விளங்கு அவிரொளி' யாயிற்று. அதன் கதிர்கள் உலகம் முழுவதும் செவ்வனே ஒளி வீசி விளங்கியது; விளங்குகின்றது. எனவே, ஒளியுடன் கூடிய பெரியோர்களையே இந்நூலுள் **மணிகள்** என்று குறித்துள்ளோம்.

சமயம், கல்வி, இலக்கியம், விஞ்ஞானம், கலை, சமூகத் தொண்டு, தொழில்முன்னேற்றம், வீரம், அரசியல் ஆகிய இத்துறைகள் ஒவ்வொன்றிலும் சிறந்த மணிகளாக இந்த நூற்றைம்பது ஆண்டுகளில் விளங்கியவர் பலராவர். அவர்கள் யாவரையும் குறிப்பிட்டு, அவர் தம் வரலாறுகளை எல்லாம் கூறுவது இந்நாலின் நோக்கம் அன்று. வகைக்கு ஒருவரை எடுத்துக் கொண்டு, அவருடைய வரலாற்றைச் சுருக்கமாகக்

கூறி, அன்னூர் உலகுக்கு அளித்த செல்வம் இதுவே என்பது மட்டும் இப்புத்தகத்தில் ஓரளவில் காட்டப்பட்டிருக்கிறது.


மாணவர் குழுவில் இளமை மணக்கிறது. அறிவு அரும்பும் பருவம் இளமை. இப்புத்தகத்தைப் படிக்கும் மாணவரில் எவர் இந்திய மணிகளாக நாளையுலகில் திகழ இருக்கின்றனரோ! அதனை நாம் இன்று அறியோம். சிறிய ஆலம் வித்தில் பெரிய மரம் பொதிந்து கிடப்பதை நாம் காணல் இல்லாதன்றே! நம் நாட்டில் வருங்காலத்தில் எத்தனை மணிகள் தோன்றுதல் கூடுமோ! அதனை யாரே உரைக்க வல்லார்! இந்திய சமூகம் உலகிற்கு வருங்காலத்தில் நல்ல துணையாக நின்று பலதுறைகளில் வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை.

இவ்வளவும் கூறியது மாணவர் இந்நூலைக் கருத்துடன் படித்துத் தாமும் இதிற் கூறிய தீரர்கள் ஒன்றிலோ பல வற்றிலோ மேம்பட்டு வருதல் கூடுமென்ற திண்மையை உடையவர்களாக முயலுவதற்கேயாம். ஆசிரியரும் அவர்களை அங்ஙனமே எண்ணத் தூண்டுக. இத் தூண்டுதலும் எண்ண மும் நற்பயனை அளித்தல் உறுதி.

வாழ்க பாரத நாடு, வாழ்க நம் மக்கள்!

பதிப்பாசிரியர்.

பொருளடக்கம்



விவேகானந்தர்

இந்திய மணிகள்

1. விவேகானந்தர்

பாரதநாடு பண்டைக்கால முதற்கொண்டு பல துறைகளில் உலகிற்கு அறிவுச் செல்வத்தை வழங்கி வந்திருக்கிறது. பழங்காலக் கிரேக்கர், பண்டைய ரோமர், மூத்த பாபிலோனியர், முதுகுடிச் சீனர் முதலியவர்கள் இந்தியா தமக்கு வழங்கிய பேற்றைக் குறித்துப் பெரிதும் பாராட்டியுள்ளார்கள். இடைக்காலத்தில் சில நூற்றுண்டுகள்வரை இந்தியவொளி வெளிநாட்டவர்க்குப் புலனுகா வண்ணம் உள்நாட்டுக் குழப்பங்களாலும் சமூகக் கொடுமைகளாலும் மறைபட்டிருந்தது. அப் பழம்பெரும் ஒளியை, சென்ற கி. பி. பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் மேல்நாடுகளுக்கே அன்றி உலகமுழுமைக்கும் புலப்படுத்தி, நம் நாட்டின் பெருமையை மீண்டும் உன்னத நிலைக்குக் கொணர்ந்தவர் விவேகானந்தராவர்.

இந்தியாவின் ஆன்ம சக்தியை, விழுமிய வேதாந்த உயர்வை வெளிநாடுகளுக்கு அறிவித்தவர் விவேகானந்தர். இந்து தர்மத்தைத் தற்கால வாழ்க்கைக்குப் பொருத்திக்காட்டி விளக்கிய பெருமை இவரையே சாரும். இவர் அளப்பரும் அறிவினர்; அருங்கலை விநோதர்; அண்டிக் கேட்போர் உள்ளங்களை இனிய சொற்பொழிவால் இறுகப் பிணிக்கும் பேராற்றல் பெற்றவர்; சிறந்த போதகர்; தீவிர சமூகச் சீர்திருத்தக்காரர்; நாட்டன்பில் விறுகொண்ட இந்து வீரர்.

இங்ஙனம் பலர் இவரை வெவ்வேறு கண்கொண்டு நோக்குவர். எனினும் விவேகானந்தர் இவ்வருங் குணங்களனைத்தும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற பெரியார். இம்மட்டுமா! மதபோதகர் என்ற முறையில், இந்து மதத்தின் மேன்மையை மேல் நாடுகளுக்கு ஈடு இணையில்லாத விதமாய் எடுத்தோதி வந்த பெருமையின் காரணமாக உலகம் போற்றும் உத்தமருள் ஒருவராக இவர் எண்ணப்பெறுவர். இந்து மதத்தின் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்து அதை ஊற்றுப் பெருக்காக்கி உலகோர் உண்ணும் வகையில் ஆங்காங்கே மடங்கள் நிறுவி அவற்றின் வாயிலாக ஏழைகளுக்கும், இடுக்கண் உற்றவர்களுக்கும், துன்பத்தில் தோய்ந்தவர்களுக்கும் ஊழியஞ்செய்தலை நம் நாட்டில் நிலை நாட்டியவர் விவேகானந்தரே.

இளமைப் பருவம்

விவேகானந்தர் கி. பி. 1863-ம் ஆண்டில் ஜனவரி மாதம் 12-ம் தேதி கல்கத்தா நகரில் அவதரித்தார். இவருடைய தந்தையார் விஸ்வநாததத்தர்: தாயார் புவனேஸ்வரி தேவி. விவேகானந்தருக்கு அவர் பெற்றோர்களால் இடப்பட்ட பெயர் **நரேந்திரர்** என்பதாகும்.

இவர் தம் துடுக்கும், மிடுக்கும், குறும்பும் குடும்பத்தினருக்கு ஓயாத அல்லலை உண்டு பண்ணின, குழந்தைப் பருவத்திலே எந்நேரமும் ஏதேனும் ஒரு சிறு குறும்பு செய்துகொண்டே யிருப்பார். தாம் நினைந்த ஒன்றில் தீவிரமாக ஈடுபடுவது இவர்பால் அப்பருவத்திலேயே இருந்தது. குறும்புக்கேற்ற அறிவும், கூரிய அறிவுக்கேற்பப் புத்தம் புதியவற்றை அறிந்துகொள்வதில் ஆர்வமும் வேட்கையுமுடையவராய் இவர்

விளங்கினார். குறும்பு விளையாட்டின் காரணமாக இவர் ஒரு முறை மேல்மாடியிலிருந்து படிகளின் வழியாக உருண்டு கீழே விழுந்துவிட்டார். அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியில் இவரது உடலில் நிலையான கோளாறு ஏதோ ஒன்று ஏற்பட்டுவிட்டதாகச் சிலர் கூறுவர். குறும்பை அடக்குவதற்கு இவருடைய தாய் இவரை நீர்க்குழாயண்டையிட்டுச்சென்று நீர் விரைந்து இவர் தலையில் விழுமாறு செய்வாராம். அச்சமயங்களில் இவர் பிடிவாதத்தோடு அசையாமல் குழாயடியில் கற்சிலைபோல் அமர்ந்திருப்பாராம்.

நரேந்திரரின் கல்வி வீட்டிலேயே தொடங்கப் பெற்றது. சிறு வயதில் தாயார் இவருக்கு இராமாயணம், பாரதம் இவைகளிலிருந்து பற்பல கதைகளைக் கூறிவந்தார். அதனால் இவர்பால் தெய்வ பக்தி குடிகொண்டது. இராமர் விஷயத்தில் இவரது உள்ளம் அதிகம் ஓடிற்று. இராம விக்ரகம் ஒன்று இவருக்குக் கிடைத்தது. அதை இவர் அழகுபடுத்திப் பூஜை செய்து வந்தார். பூஜையின் முடிவில் தியானத்தில் அமர்ந்திருப்பார். பிள்ளைப் பருவத்தில் இவர் மேற்கொண்ட நடிப்பு நாளடைவில் உண்மைப் பக்தியாக உருக்கொண்டது.

இவர் பள்ளிக்குச் சென்று, படித்த வகுப்பில் மறு வருடம் தங்காமல் படிப்படியாகக் கற்றுத்தேர்ந்து, பி. ஏ. பட்டதாரி ஆனார். வங்கம் ஆரியம் இவ்விரண்டிலும் இவருக்கு நிரம்பிய புலமை இருந்தது.

சின்னஞ் சிறு வயதில் நரேந்திரர் கடவுளிடம் அன்பு பூண்டவராக இருந்தபோதிலும் அவ்வன்பு

உள்ளத்தோடு ஒன்றுவதாயிருந்தது. ஆகவே நாளடைவில் இவர் தெய்வ சிந்தனையை மறந்தார். அதன் உண்மையிலும் இவருக்கு ஐயம் தோன்றலாயிற்று. துறவிகளிடத்தும் குருமார்களிடத்தும் இவருக்கிருந்த பற்றெல்லாம் எங்கோ பறந்தோடிப் போயிற்று. ஆயினும் தெய்வத்தின் உண்மையைப்பற்றி அறிஞர்களைக் கண்டபோதெல்லாம் உசாவுவதை இவர் தம் வாலிபப் பருவத்தின் தொழிலாகக் கொண்டொழுகலானார்.

இராமகிருஷ்ண பரமஹம்சர்

பால நரேந்திரரைப் பண்புபடுத்தி ஞானச்சுடரில் வாட்டி வேதாந்த வித்தகச் சித்தராக்கி, வெளி உலகுக்குத் தந்தவர் இராமகிருஷ்ண பரமஹம்சர் என்ற பெரியார் ஆவர். இப்பெரியாரைப்பற்றி அறியாதார் ஒருவருமிலர். 'வங்கத்தில் உதயமான ஞான சூரியன்' என்று இவரைக் கூற வேண்டும். ஆத்மிகத் துறையில் நவ இந்தியாவில் புத்துணர்ச்சி பரவியதற்குப் பெரிதும் காரணமானவர் இவரே. இவருடைய உபதேசங்கள் மக்களைக் கவர்ந்தன. அவை எளிய நடையில் பல உதாரணங்களோடு கூடியிருந்தன. வேத சாத்திர உபநிடதங்களின் அரிய பொருள்களையே இராமகிருஷ்ண பரமஹம்சர் பிறிதொரு வடிவில் உபதேச மொழிகளாக நமக்கு வழங்கியுள்ளார்.

கல்கத்தாவுக்கு அருகில் தட்சிணேசுவரம் என்ற ஊரில் காளிக்கு ஓர் ஆலயம் உண்டு. அக்கோவிலில் இராமகிருஷ்ணர் அர்ச்சகராக இருந்துவந்தார். பள்ளிக்கூடம் போய் இவர் ஒன்றும் படிக்கவில்லை. வயிற்றுப்



இராமகிருஷ்ண பரமஹம்சர்

பிழைப்புக்காகப் படிக்கும் கல்வியில் இவருக்கு விருப்பம் ஓடவில்லை. அதனால் தம் 19-ம் பிராயத்திலிருந்து காளி கோவில் அர்ச்சகராக இருந்து வந்தார். காளி தேவியின் பக்கத்தில் முதிர்ந்து இவர் பித்தேறியவர் போலானார். பைத்தியக்காரர் என்றே பலர் இவரைக் கருதி வந்தனர்.

நாளடைவில் இராமகிருஷ்ணருக்கு 'எல்லாத் தெய்வமும் ஒன்றே, பல சமயங்களும் கூறுகின்ற பொருளும் ஒன்றே என்ற சமய சமரச ஞானம் தோன்றியது. ஜாதி மத பேதங்கள் இவரை விட்டு அகன்றன. காளி தேவி இவருக்குப் பிரத்தியட்சமாய் அருள் புரிந்தாள்.

சந்திப்பு

நரேந்திரர் காலத்தில் வங்காளத்தில் பெரியார் பலர் இருந்தனர். பிரமசமாஜத்தின் தலைவராகக் **கேசவ சந்திரசேனர்** என்பவர் விளங்கினார். வேத விதிப்படித் துறவு பூண்டார் பலரும் அக்காலத்தில் இருந்தனர். நரேந்திரர் அவர்களிடம் சென்று கடவுள் உண்மையைப் பற்றி உசாவினர். அவர்கள் கூறியவை இவருக்கு ஏற்கவில்லை.

நரேந்திரருடைய உறவினர் பலர். இவர் ஆஸ்திக வழியைப் பின்பற்றவேண்டுமென்று கவலை கொண்டு அதற்காவன தேடிவந்தனர். அவர்களுள் ஒருவர் இவரை இராமகிருஷ்ண பரமஹம்சரிடம் அழைத்துச் சென்றனர். முதலில் நரேந்திரர் அங்கே செல்ல விருப்பம் கொள்ளவில்லை. தம் உறவினரின் வற்புறுத்தலின் மேல் இராமகிருஷ்ணரிடம் செல்ல உடன்பட்டார்.

நரேந்திரர் செல்லும் சமயம் இராமகிருஷ்ணர் சில அன்பர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார். நரேந்திரரைக் கண்டதும், "அப்பா, நான் உன்னைத்தான் நெடுநாளாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். வா!" என்று மகிழ்ச்சியுடன் வரவேற்றார். இவ்வித வரவேற்பு நரேந்திரருக்கு வியப்பைத் தந்தது. ஆனாலும் குருதேவரின் வார்த்தைகளில் நம்பிக்கை ஏற்படவில்லை. அவைகள் சூதும் வாதும் கலந்தவையோ என்று கருதினார். இராமகிருஷ்ணர் தம்மை ஏதேனும் செய்யக் கூடுமோ என்ற ஐயமும் இவர்பால் முகிழ்த்தது.

நரேந்திரர் பேரானமை

இராமகிருஷ்ணர் நரேந்திரரைப் பாடச்சொன்னார். இவரும் அங்ஙனமே பாடினார். இவருக்கு இசைப் பயிற்சி இல்லையாயினும் குரல் இனிமையாக இருந்தது. இவருடைய பாட்டுக்கள் கேட்போருக்கு மகிழ்ச்சியைத் தரும்வண்ணம் இருந்தன. இராமகிருஷ்ணர் அவற்றைக் கேட்டு ஆனந்தம்கொண்டார். "உலகத்தை ஆட்டுவிக்கும் ஓர் ஆன்மா இங்கே இன்று வந்திருக்கிறது" என்று அங்கே இருந்தாரிடம் அவர் கூறினார். நரேந்திரர் இவற்றைக் கேட்டுத் திகைப்படைந்தார்.

பிறகு நரேந்திரர் வந்த காரணத்தை இவருடைய உறவினர் குருதேவருக்கு அறிவித்தனர். நரேந்திரரும் "ஈசனைக் கண்டவர் நீர் தாமோ? அந்த ஈசனை யிங்குக் காட்டுவீரோ?" என்றார்.

குருதேவர் புன்னகைபூத்து அது சாத்தியமே என்றும், இரண்டொரு பகலில் நரேந்திரருக்குக் கடவுளைத் தரிசனம் செய்விக்க முடியும் என்றும் கூறினார்.

இதன்பின் இருவரும் பிரிந்து போயினர். முதல்நாள் நடந்த சம்பவம் இது.

இராமகிருஷ்ணரைக் கண்ட காட்சி நரேந்திரரின் மனத்தை விட்டு அகன்றிலது. ஏதோ ஒரு சக்தி தம்மைப் பிடித்தாட்டுவதாக இவர் உணர்ந்தார். இரண்டொருநாள் இவர் தாமாகவே இராமகிருஷ்ணரிடம் சென்று வந்தார். ஒவ்வொரு நாளும் குருதேவர் இவரைப் பாடச் செய்தார். இறுதியில் ஒரு நாள் அவர் நரேந்திரரைக் கோவிலின் ஒருபால் தனிமையில் இட்டுச் சென்று இவருடைய நெஞ்சைத் தொட்டு, "அப்பா! நீ நெடுங்காலமாகக் காண விரும்புகிற தெய்வத்தைக் காண்கிறாயா?" என்றார். நரேந்திரருக்கு ஞான ஒளி உதயமாயிற்று. குருதேவர் இவருக்குச் செய்த உபதேசம் இதுவே. இச்சம்பவத்தின் பின் குருதேவர் இவருக்கு **விவேகானந்தர்** என்ற பெயரைச் சூட்டினார். நரேந்திரர் விவேகானந்தர் என்ற பெயரோடு துறவியானார்.

குரு சீடரின் தொடர்பு

ஒரு குருவுக்கு நல்ல சீடர் கிடைப்பதாயின் விவேகானந்தரைப் போல் கிடைக்கவேண்டும். ஒரு மாணவருக்கும் குரு ஒருவர் கிடைப்பதாயின் இராமகிருஷ்ணரைப் போல் வாய்க்கவேண்டும். விவேகானந்தர் வேறு, இராமகிருஷ்ணர் வேறு என்று நாம் பிரித்துக் காண்டல் ஒல்லாது. இருவரும் சேர்ந்த கூட்டமே இன்று உலகம் ஆன்மத்துறையில் பெற்றுள்ள புதிய செல்வத்துக்குக் காரணமாகும்.

இராமகிருஷ்ணர் ஓர் ஆசிரியர்; விவேகானந்தர் அவர் உபதேசங்களை உலகிற்களித்த பெரும் போதகர். முதல்வர் உள்ளொளி கண்டு ஆனந்தித்தார்; அவர் மாணவர் அதனைக்கொண்டு பல விளக்கங்களை ஏற்றினர். சுருங்கக் கூறுமிடத்து இராமகிருஷ்ண பரமஹம்சர் பிறந்தபயிர். அதன் விளைவு விவேகானந்தர். அந்த விளைவைத் துய்த்தவர், துய்க்கிறவர், இனியும் துய்ப்பவர் ஆன்ம நோக்கமுள்ள பிற மக்களாவார்.

இக்கூட்டத்திற்பின் விவேகானந்தரின் வடிவமும் துறவுக் கோலமும் வீர மொழிகளும் கண்டோரையும் கேட்டோரையும் பிணித்தன. ஆயிரக்கணக்கான மக்கள் இவரைப் பாராட்டினர்; போற்றினர்; அவதார புருஷராகக் கருதி வந்தனர். குருநாதரால் ஆட்கொள்ளப்பெற்றது 1880 நவம்பர் மாதம் ஆகும். விவேகானந்தரின் பொதுநல வாழ்க்கையின் தொடக்கம் இதுவே.

விவேகானந்தர் தம் குருதேவரிடம் தொண்டு புரிந்து வாழ்ந்து வருங்காலையில் இவரது மனம் மிகுதியாகப் பண்பட்டது. இவர் அறிந்துகொண்டவை பல. இருவரும் பழகிவந்த முறை தனிச் சிறப்புடையதாகும். தாய்ப்பசுவுக்கும் கன்றுக்குமிடையிலுள்ள அன்பை எடுத்துக்காட்டாகக் கூறலாமெனின் கன்றினிடம் வணக்கமோ, தாய்க்குச் செய்யும் தொண்டோ காணப்படாது. இராமகிருஷ்ணர் ஒரு நாள் விவேகானந்தரைத் தனிமையில் அழைத்துச் சென்று தம் ஆத்ம ஒளியை அவரிடம் ஒப்புவித்தார் என்று சொல்லுவார்கள். விவேகானந்தர் உத்தேசமாக ஐந்தாண்டுகள் தம் குருவுக்குச் சேவை செய்து வந்தார். இதன்பின் இராமகிருஷ்ணர் தம் பரு உடலை நீத்துப் பேரொளியில்

இரண்டறக் கலந்தனர். அதற்குச் சற்று முன்னர் அவர் விவேகானந்தரிடம் ஒரு மடத்தை ஏற்படுத்தி இவர் செய்யவேண்டிய ஆன்ம சேவைகளைப்பற்றிக் கூறிச் சென்றார் என்று தெரிகிறது.

குருவுக்குப் பின்

கல்கத்தாவை அடுத்துள்ள **வாரநகர்** என்னுமிடத்தில் விவேகானந்தர் தம் குருவின் பெயரால் ஒரு மடத்தை நிறுவினார். இராமகிருஷ்ணரின் சீடர் பலர் அங்கே தங்கலானார்கள். இதன்பின் விவேகானந்தர் 1891-ம் ஆண்டு இந்தியா முழுவதிலும் கால் நடையாகவே சஞ்சாரம் செய்து ஆங்காங்குள்ள நிலையைக் கண்டுவர ஆர்வங்கொண்டார்.

முதலில் இவர் வடக்கே இமயமலை வட்டாரத்திலுள்ள பல தலங்களுக்குச் சென்றார். பிறகு வட இந்தியாவிலுள்ள பலவிடங்களுக்குச் சென்று வந்தார். பிறகு மத்திய இந்தியா வழியாகத் தென்னாட்டிற்கு வந்து பல இடங்களைச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

அமெரிக்கா விஜயம்

அந்தச் சமயம் அமெரிக்காவில் **சிகாகோ** என்னும் நகரத்தில் சர்வ சமய மகாநாடொன்றைக் கூட்ட ஏற்பாடாகியிருந்தது. உலகிலுள்ள பற்பல மதங்களின் பிரதிநிதிகளும் அந்த மகா நாட்டிற்குச் சென்றார்கள். இந்து மதத்தின் பிரதிநிதியாகச் சென்றுவருமாறு விவேகானந்த சுவாமிகளைத் தென்னாட்டுப் பிரமுகர்கள் வேண்டிக்கொண்டனர். அங்கே சென்று வருவதற்

குரிய செலவுத் தொகையையும் கொடுத்தார்கள். சுவாமிகள் இது தெய்வத்தின் கட்டளை என்று எண்ணி அமெரிக்காவுக்குப் பிரயாணமானார்.

சிகாகோ நகரில் சர்வசமய மகாநாடு 1893 செப்டம்பர் முதற் பகுதியில் தொடங்கியது. விவேகானந்தர் அதில் பேசுவதற்கு முன்னதாகவே செய்துகொள்ள வேண்டிய முறையைச் செய்துகொண்டவர் அல்லர்; பெரிய மனிதரிடமிருந்து அறிமுகக் கடிதம் ஏதேனும் பெற்றவரும் அல்லர். இவருக்கு அங்கே பேச இடம் இராதது போல் தோன்றியது. அச்சமயம் தற்செயலாய் இவருக்குச் சில புதியவர் பழக்கமானார்கள். அவர்களுள் ஒருவரின் அறிமுகக் கடிதம் பெற்றுச் சுவாமிகள் மகாநாட்டில் சில நிமிஷங்கள் பேசும் உரிமை அளிக்கப் பெற்றார்.

இந்து மதத்தின் தொன்மையும், பெருமையும் அஃது எல்லா மதங்களையும் அணைத்து நிற்கும் பண்பும், உலகத்திற்கு அது காட்டியுள்ள உண்மைகள் முதலியனவுமே விவேகானந்தரின் பேச்சுக்குப் பொருளாக அமைந்தன. அவர் பேசியதெல்லாம் சில நிமிஷங்களே. முதல் நாள் நிகழ்ச்சியிலேயே அவர் பெருமை பலருக்குப் புலனாயிற்று. அக்காரணத்தால் நட்பினர் தோன்றலாயினர். மகாநாடும் முடிந்தது. அதற்குள் உலகின் பலவேறு பாகங்களிலிருந்து அறிஞர்களின் பாராட்டுதல் இவருக்குக் கிடைத்தது. சிறப்பாக அமெரிக்காவில் சிலர் இவருக்குச் சீடர்களானார்கள். இவர் அந்நாட்டில் பல இடங்களில் விரிவுரை நிகழ்த்தினார். பத்திரிகையின் வாயிலாக இவர் பெயர்

ஐரோப்பாவிலுள்ள நாடுகளுக்கும் பரவியது. அங்கங்கேயிருந்து இவருக்கு அழைப்புக் கடிதங்கள் வந்தன.

அமெரிக்காவிலிருந்து இவர் இங்கிலாந்து சென்று, அங்கே சில மாதங்கள் தங்கிவிட்டு, 1897-ம் ஆண்டு தொடக்கத்தில் சென்னை வந்து சேர்ந்தார்.

உள்நாட்டில் சிறப்பு

விவேகானந்தர் அமெரிக்காவுக்குச் சென்று இந்து மதத்தைக் குறித்துப் பேசி வந்ததன் பயனாக வெளி நாடுகளில் இந்தியாவின் புகழ் பரவியது. சென்ற இடங்கள்தோறும் மதத்தைப் பற்றியன்றி இந்தியாவின் பெருமைக்கு ஏதுவான பல விஷயங்களைப்பற்றியும் இவர் விரிவுரை நிகழ்த்தி வந்ததனால், இந்தியாவின் கலைகளிடத்தும் பழமையினிடத்தும் மேல்நாட்டாருக்கு அளவற்ற மதிப்பு ஏற்பட்டது. இங்ஙனம் விவேகானந்தரென்னும் பேரொளி வாயிலாக உலகம் இந்தியாவின் பெருமையைக் கண்டுகொண்டது பற்றிச் சென்னையில் வந்திறங்கியதும் இவருக்கு உபசாரம் மிகுதியாக நடந்தது. கொழும்பு முதல் சென்னை வரையிலும் அப்பால் வங்காளத்திலும் சென்றவிடமெல்லாம் மக்கள் இவரை அவதார புருஷராகக் கருதி வரவேற்று உபசரித்தார்கள்.

நிலையான ஏற்பாடுகள்

பிறகு 1898-ம் ஆண்டில் விவேகானந்தர் வார நகரிலிருந்து இராமகிருஷ்ண மடத்தை, அதற்கு மேற்கில் சிறிது தூரத்திலுள்ள பேலூர் என்ற இடத்துக்கு

மாற்றினர். இப்புதிய இடத்தில் சிறந்த கட்டிடத்தையும் கட்ட ஏற்பாடு செய்தார். தம் குருநாதர் பேரில் ஒரு சங்கமும் நிறுவினர். இச் சங்கத்தின் கிளைகள் இக்காலத்தில் இந்தியாவின் பலவேறு பாகங்களிலுள்ளன. ஜாதி மத நிற பேதமின்றி இச்சங்கத்தார் செய்து வரும் சமூகச்சேவை பாராட்டத் தக்கதாகும்.

மடம் நிறுவியபின் விவேகானந்தர் அதனைப் பலப்படுத்தும் பொருட்டு நிதி தேடவும் ஆங்காங்குள்ள அனுபவங்களைக் கண்டறியவும் இரண்டாம் முறையாக இந்தியா முழுவதையும் சுற்றி வந்தார். அமெரிக்கா ஐரோப்பாக் கண்டங்களிலுள்ள பல நாடுகளுக்கும் விஜயம் செய்து வந்தார். இராமகிருஷ்ண மடத்துக்கு அமெரிக்காவிலிருந்து மிகுதியான பொருளுதவியும் கிடைத்தது. இந்த மடத்தின் அபிமானிகள் இன்றும் வெளிநாடுகளிலிருந்து வருகிறார்கள். கலிபோர்னியாவில் "சாந்தி ஆச்சிரமம்" ஒன்று விவேகானந்தரால் நிறுவப் பெற்றுள்ளது.

இறுதி

இவ்வளவையும் ஒழுங்காக நிறைவேற்றி முடித்து விட்டுச் சுவாமிகள் 1902 ஜுலை 4-ம் தேதியில் தம் நாற்பதாம் பிராயத்தில் நிர்விகற்ப சமாதி கைகூடப் பெற்றுத் தம் பருவுடலை நீத்து இறைவனது திருவடி நிழலை எய்தினர்.



கோபால கிருஷ்ண கோகலே

2. கோபால கிருஷ்ண கோகலே

ஒரு சமயம் அறிஞர் சிலர் குழுமியிருந்த கூட்டத்தில் கோகலேயைப்பற்றிய பேச்சு வந்தது. அவரது புலமை எத்துறையில் அதிகமாக வீறு கொண்டிருந்தது என்ற கேள்வி எழுந்தது. ஒருவர் ஆசிரியத் தன்மையை எடுத்துக் கூறினர்; மற்றொருவர் அரசியல் ஞானமே அதிகமென்றுர்; வேருெருவர் கோகலேயின் பொருள் நூலறிவை மெச்சினர். அறிஞர் குழுவில் அன்று எவரும் ஒரு முடிவுக்கு வரவில்லை. இவ்வாறு அறிஞர்களே துணிந்து கூறமுடியாத வகையில் கோகலே இம் மூன்று துறைகளிலும் ஆய்ந்தோய்ந்து அனுபவசித்தி பெற்றிருந்தார். இத்துறைகளில் அவரோடு ஒத்தார் இந்நாட்டில் இரண்டொருவர் இருந்திருக்கலாம்; ஆனல் மிக்கார் ஒருவருமிலர். இனி நான்காவதாகப் பிறிதொரு துறையை அவர் மேற்கொண்டாலும் அதிலும் முதன்மைபெற்று விளங்கியிருப்பாரென்று திண்ணமாகச் சொல்லலாம்.

கோகலே ஒரு எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர்; தாமாக வருந்தியுழைத்து முன்னேறியவர். பொருள் குவிக்க விரும்பியிருப்பாரேயானல் செல்வச் சீமான் என்ற பெயர் பெற்றிருப்பார். ஆனல் அவர் பொருளைத் துரும்பாக எண்ணினர். சேவையே கடவுள் வழிபாடென்று கொண்டார். சேவையிலேயே வாழ்நாளைக் கடத்தினர். இந்தியாவுக்கு ஊழியஞ் செய்ய 'இந்திய ஊழியர் சங்கம்' என்ற அமைப்பை நிறுவி வளர்த்து நல்ல நிலையில் வைத்துச் சென்றுர். உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ!

இத்தகைய பெரியாரைப்பற்றி மாணவர் அறிதல் வேண்டும். அவரிடம் இலங்கிய மேன்மைக் குணங் களை அவர்கள் மேற்கொள்ளல் வேண்டும். சேவை உள்ளத்தை வளர்க்கவேண்டும்.

பிறப்பு

ஆங்கிலேயர் இந்தியாவை ஆளத்தொடங்கு வதற்குச் சற்று முன்பு நம் தேசத்தில் பெரிய அளவில் வியாபித்திருந்த அரசு மகாராஷ்டிரமே. சிவாஜி ஊட்டிச் சென்ற வீரம் மகாராஷ்டிர மக்கள்பால் குடி கொண்டது; அவர்கள் ஒரு சாம்ராஜ்யத்தை ஏற்படுத் தும் ஆற்றலைப் பெற்று விளங்கினார்கள். அன்னாரு டைய அறிவும் ஆற்றலும் அவர்தம் சந்ததியாரிடம் இன்றும் இலங்குகின்றன. அத்தகைய மகாராஷ்டிரருள் நம் கோபால கிருஷ்ண கோகலே ஒருவர்.

இவர் கி. பி. 1866-ம் ஆண்டு பம்பாய் மாகாணத் தில் கோலாப்பூர் என்னுமிடத்தில் பிறந்தார். இவர் தந்தையாரின் பெயர் கிருஷ்ண ராவ் கோகலே. அவர் அதிகம் கற்றவரல்லர். ஏதோ ஒரு சிறிய சமஸ்தானத் தில் சொற்பச் சம்பளம் பெறும் உத்தியோகத்திலிருந் தார். கோகலேயின் தாயும் கல்வி யறிவில்லாதவரே. ஒருவருக்குப் படிப்பதற்கு வாய்ப்பில்லாமல் போதல் கூடும். அதுபற்றி அவர் மதிப்பை இழந்தவரல்லர். ஆகவே, எவரையும் அவர்தம் கல்வியறிவைக்கொண்டு மட்டும் மதித்தலைவிட அன்றாது ஒழுக்கத்தைக் கொண்டு அளவிட முயல்வது ஏற்புடையதாகும். பரம்பரையாக ஒழுக்கநெறி நின்றுவந்த குடியைச் சேர்ந்தவர்கள் கோகலேயின் தாய் தந்தையர் என்பது

ஒன்றே அவர்களின் சிறப்புக்குச் சான்ருகும். அந்தக் குடிப்பிறப்புத்தான் நம் கோகலேயை மேதாவியாகச் செய்தது.

பள்ளிப் படிப்பு

கோகலேயின் தந்தையார் காலமானபோது கோகலேக்கு வயது பன்னிரண்டு. இவரைக் காப்பாற்றும் பொறுப்பு இவருடைய தமயனுரைச் சார்ந்தது. தந்தை இறந்தபின் தமையனுர் தம் படிப்பை நடுத்தர வகுப்போடு நிறுத்திவிட்டு அற்ப உத்தியோகம் ஒன்றை ஏற்றுக்கொண்டார். அதில் அவருக்கு ரூ. 15/- மாத ஊதியம் கிடைத்து வந்தது. அந்தத் தொகையைக் கொண்டு அவர் குடும்பத்தைக் காப்பாற்றவும் வேண்டும்; கோகலேயைப் படிப்பிக்கவும் வேண்டும். இந்த இரண்டில் பின்னதில் அவருக்கு அதிக ஆர்வம் இருந்தது. கோகலேயின் படிப்புக்காகத் தம் சம்பளத்தில் அவர் மாதம் எட்டு ரூபாய் அனுப்பி வந்தார்.

அந்தப் பணத்திலே கோகலே சாப்பாட்டையும், பள்ளிக்கூடச் சம்பளத்தையும், புத்தகம் முதலிய உபகரணங்களையும் பிறவற்றையும் சரிசெய்துகொள்ள வேண்டியவரானுர். ஆகவே, அவர் செட்டு மட்டாக வாழ்ந்தார். ஒருவேளை ஆகாரத்தை விட்டொழித்தார். இரவில் படிப்பதற்கு எண்ணெய் வாங்கப் பணமில்லாமல் தெருவிளக்கு வெளிச்சத்தில் படித்து வந்தார். இப்படி இவர் மூன்ருண்டுகள் வருந்திக் கற்று பதினைந்தாம் பிராயத்தில் மெட்ரிக்குலேஷன் சோதனையில் வெற்றி பெற்ருர்.

கல்லூரிப் படிப்பு

இக்கனமாக மூன்றாண்டுகள் வாழ்ந்து மெட்ரிகுலேஷன் தேறிய கோகலேக்கு எப்படியாயினும் கலாசாலைப் படிப்பையும் மேற்கொள்ளவேண்டும் என்ற விருப்பம் இருந்தது. அதற்கேற்ற துணிவும் தோன்றியது. அவர் கல்லூரியில் சேர்ந்து படிக்கலானார். ஆங்கிலப் பள்ளிக் கூடம் ஒன்றில் மத்தியதர வகுப்புகளுக்குக் குறித்த சில மணி நேரம் ஆங்கிலம் கற்பிக்க ஏற்பாடு செய்து கொண்டார். அவ்வகையில் மாதந்தோறும் இவருக்கு ரூ. 35/- கிடைத்தது. சிறிது காலத்துக்குப் பிறகு இவருக்கு உபகாரச் சம்பளம் கிடைத்தது. இவ்வளவும் வந்ததனால் கோகலே தம் தமையனாரைப் பணம் அனுப்பவேண்டாமென்று சொல்லிவிட்டார். அரிதில் முயன்று தம் பதினெட்டாம் பிராயத்தில் 1884-ல் பி. ஏ. பரீட்சையில் தேறிப் பட்டதாரி ஆனார்.

மாணவராக இருந்தகாலையில் கோகலே தம் காலத்தை ஒழுங்குபடுத்திக்கொண்டார். இன்னநேரத்தில் இன்னவேலை யென்ற ஒழுங்கை மேற்கொண்டவருக்கு எந்த வேலை செய்வதற்கும் காலங் கிடைக்கும். அவர் தம் வாழ்க்கையில் பலவற்றைச் சாதித்துக்கொள்ளவும் கூடும். கால ஒழுங்கினாலேயே கோகலே கல்லூரியில் படித்துக்கொண்டே வருவாய் தரத்தக்க வேறு அலுவலையும் கவனித்தல் எளிதாயிற்று.

உயர்தரப் படிப்பிலும் கல்லூரிப் படிப்பிலும் இவர் ஒவ்வொரு பாடத்திலும் சாதாரணமான அம் சங்களையே பெற்று வந்தார். விஷய அறிவில் இவரைச் சிறந்த மாணவர் என்று சொல்வதற்கில்லை. ஆங்கிலம்

அவ்வளவாகப் பேசவராது. எழுதுவதிலும் அத்துணைச் சமர்த்தரல்லர். ஆனால் கல்லூரியைவிட்டு வெளியேறிய சில நாளில் எங்ஙனமோ சிறந்த மேதாவி ஆகிவிட்டார். வகுப்புகளில் முதலிடம் பெற்று விளங்கி வந்தவர்கள் வாழ்க்கையில் பின்னணியில் நிற்பதும், ஒரு வகுப்பிலாவது நல்ல அம்சம்பெருமல் தேறிவந்தவர்கள் வாழ்க்கையில் சிறந்த இடத்தை வகித்து விளங்குவதும் உண்டு. "உருவத்திலுயர்ந்த மரங்களாயினும் பருவத்திலே தான் பழுக்கும்: அதுபோல ஒரு சிலருக்குப் பருவம் வந்த பிறகே நாள் ஓட ஓட அறிவு முதிர்ச்சி ஏற்படுகிறது" என்று சாம்வேல் ஸ்மைல்ஸ் (Samuel Smiles) என்பவர் கூறுகிருர். கிளைவ் (Clive) ஆலிவர் கிராம்வெல் (Oliver Cromwel), அட்மிரல்ப்ளேக் (Admiral Blake) முதலிய ஒரு சிலரை அவர் எடுத்துக்காட்டாக மொழிவார். கோகலேயும் இவர்களைப்போல் வாழ்க்கையின் இடையில் மலர்ச்சியுற்றவரே. கோகலேக்கு மலர்ச்சி வந்ததெல்லாம் அவருடைய பேருழைப்பினுலேயே.

உத்தியோகம்

பி. ஏ. பட்டம் பெற்றவர்கள் உத்தியோகத்தின் பொருட்டுப் பயில்வதற்குப் பல துறைகள் உள. கோபாலகிருஷ்ண கோகலே பி. ஏ. வகுப்பில் தேர்ச்சி பெற்றதும் இஞ்சினீயராகவோ, வழக்கறிஞராகவோ வரவேண்டுமென்று ஆசைப்பட்டார். அவைகளுக் கேற்ற துறைகளில் உத்தியோகக் கல்வியை கற்க முயன்று கொண்டிருந்தார். சிலர் ஐ. ஸி. எஸ். பொருட்டு இங்கிலாந்து சென்று வருமாறு இவரைத் தூண்டினர். இவர் தமையனுர் வறுமையில் ஆழ்ந்திருந்தார். குடும்பச்

சுமையை அவரால் தாங்க இயலவில்லை. கோகலே விரைவில் கல்விகற்றுப் பரீட்சைகளில் தேர்ச்சி பெற்றுப் பெரிய உத்தியோகத்தை மேற்கொண்டவுடனே தம் முடைய பளு குறைந்துவிடலாமென்று எதிர்பார்த்திருந் தார். ஆதலால் கோகலே பி. ஏ. தேறியவுடன் நிறைய வருவாய் வரக்கூடிய ஒரு வேலைக்குரிய உத்தியோகக் கல்வியைப் பயிலுமாறு தூண்டினர்.

கோகலேயின் விருப்பமும் இவருடைய சகோதர ரின் தூண்டுதலும் ஒருமுகமாகவே இருந்தனவேனும் ஆட்டிவைக்கும் சக்தி இவரை வேறு வழியில் திருப்பி யது. தொடக்கத்தில் இம்மாறுதல் கோகலேக்குத் திருமகளின் அருளைத் தராவிடினும் புகழ்மகளின் கண்ணோட்டம் முற்றிலும் கிடைத்தது. பிற்காலத்தில் இவர் புகழுற்று விளங்கியதற்கு இவர் மேற்கொண்ட உத்தியோகமே காரணமாகும். அதுதான் சாதாரண மென்று பலர் நினைக்கும் ஆசிரியர் பதவி. ஆசிரியர் பதவி புகழ்பெறுவதற்கோ சேவை செய்வதற்கோ சிறந்ததோர் ஏணியென்பது கோகலேயின் வரலாற்றால் விளங்குகிறது. அப்பதவியை அவர் பெற்ற வரலாறு பின்வருமாறு:

பம்பாய் மாகாணத்திலிருந்த பால கங்காதர திலகரைப் போன்ற சில அறிஞர்கள் 'தட்சிணக் கல்விச் சங்கம்' (Deccan Education Society) என்ற ஸ்தா பனத்தை நிறுவி நாட்டன்போடு ஆங்கிலக் கல்வியை மாணவரிடைப் பரப்ப முன் வந்தனர். அச்சங்கத்தின் முயற்சியினால் பூனா நகரில் பெர்கூஸன் கல்லூரி என்று ஒரு கலாசாலை தோன்றியது. ஊழியமே தம் வாழ்க் கையின் குறிக்கோளாகக் கொண்டுள்ளவர்கள் ஆசிரிய

ராக இருந்து அதில் பணியாற்ற வேண்டுமென்பது அச்சங்கத்தாரின் நோக்கமாகும். ஆசிரியராகவுள்ள வருக்கு மாத ஊதியம் எழுபது ரூபாயே. அவர் இருப தாண்டு ஆசிரியராக இந்தச் சம்பளத்தில் வேலை செய் வதாக உறுதிமொழி தரவேண்டும். இங்ஙனம் உறுதி மொழி தந்து ஆசிரியரானவருள் திலகரும் ஒருவர்.

தட்சிணைக் கல்விச் சங்கத்தின் நோக்கம் கோக லேக்கு மகிழ்ச்சியளித்தது. அச்சங்கத்திற் சேர்ந்து தொண்டாற்ற இவர் விருப்பங்கொண்டார். சேருவத னால் அதன் காரணமாக வறுமை நீடித்திருப்பினும் சங்கத்தில் சேவையே முதல் நோக்கமாக இருப்பதை நினைத்துத் தம் தமையனார் சொல்லையும் கேளாது சங்கத்தில் சேர்ந்து பெர்கூஸன் கல்லூரியில் ஆசிரியர் பதவியை ஏற்றுக்கொண்டார். இருபதாண்டுகள் உழைப்பதாகவும் உறுதி கூறினார்.

நல்லாசிரியர்

கோகலே கணிதத்தை இஷ்டபாடமாகக்கொண்டு பி. ஏ. தேர்ச்சி பெற்றவர். ஆசிரியராக அமர்ந்தபோது ஆங்கிலம் கற்பித்தலை மேற்கொண்டார். சிறந்த போத காசிரியர் என்ற பெயர் சில நாளில் இவருக்கு கிடைத் தது. ஆங்கிலத்தில் இவர் பேச்சும் எழுத்தும் சிறந் திருந்தன. கல்லூரியில், கணிதத்தைப் புகட்டிவந்த ஆசிரியர் ஒருவர் நீங்கிவிடவே, அந்தப் பதவிக்குக் கோகலே நியமிக்கப் பெற்றார். தம் இஷ்டபாடமாகை யால் கணிதத் துறையில் இவருக்குப் புகழ் அதிகரித் தது. மாணவர்களுக் கென்று இவர் ஒரு கணித நூலை யும் எழுதியுள்ளார். இன்றும் அது சிறந்ததாக மதிக் கப்படுகிறது.

கோகலே நீண்டகாலம் கணிதப் போதகராக இருக்கவில்லை. இவர் விருப்பமெல்லாம் சரித்திரத்திலும் பொருளாதாரத்திலும் ஓடியது. அந்த இரண்டு துறைகளிலும் இவர் விரைவில் மேதாவியானார். இவர் காலத்திலிருந்த பொருளாதார நிபுணர்களில் இவரே சாலச் சிறந்தவரென்பது சில நாளில் விளங்கியது. கல்லூரியில் பொருளாதாரத்தைப் புகட்டும் நிபுணராக இவர் மாற்றப் பெற்றார்.

ஆசிரியராக இருப்போர் தம் வாழ்நாளில் இடைவிடாது பயின்று வருதல் வேண்டும். அவர் அவ்வப் போது தோன்றும் புதிய புதிய விஷயங்களை அறிந்து கொள்ளல் இன்றியமையாததாகும். கல்வியை மேலும் மேலும் கற்பதற்கு, ஆசிரியர்களுக்குரிய வாய்ப்பு அதிகமாகவுள்ளது. கோபால கிருஷ்ண கோகலே சிறந்த அறிவாளியானமை இந்த வாய்ப்பினாலேயே. ஆசிரியரின் இயல்பைக் கூறுங்கால் இலக்கண நூல்,

"குலன் அருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலைபயில்தெளிவு கட்டுரை வன்மை
நிலம்மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோ டுயர்குண மினையவும்
அமைபவன் நூலுரை ஆசிரியன்னே."

என்று குறிக்கின்றது. இங்கே குறிக்கப் பெற்ற எல்லா இயல்புகளும் கோகலேயின்பால் அமைந்திருந்தன.

பத்திரிகாசிரியர்

பெர்கூஸன் கல்லூரியில் சிலகாலம் ஆசிரியராக இருந்து, பிறகு இவர் கல்லூரியின் தலைவர் (பிரின்ஸிபால்) ஆனார். காலத்தை ஒழுங்கு படுத்திக்கொண்டு

உழைத்து வந்த இவருக்குக் கல்லூரி வேலைமட்டும் அல்லாமல், பிற அலுவல்களைச் செய்யவும் நேரம் கிடைத்தது. தொடர்ச்சியாகப் பல நூல்களைப் படித்து வந்ததோடு இவர் பத்திரிகைத் தொழிலிலும் ஈடு பட்டார்.

அக்காலத்தில் மகாராஷ்டிரத்தின் தலைவர்கள் பால் இருவிதக் கொள்கை வேறுபாடுகள் காணப்பட்டன. வேறுபாட்டின் காரணமாக இரண்டு கட்சிகள் இருந்து வந்தன. சமூக விஷயங்களில் சீர்திருத்தங்களைப் பின்பற்றுவோர் ஒரு கட்சியினர்; மாறுதல் வேண்டாத வைதிகக் கொள்கையினர் வேறு கட்சியினர். திலகர் பின்.வகையைச் சார்ந்தவர். எனவே, இருவரும் தேசத் தொண்டையே நோக்கமாக உடையவரேனும் ஒருவருக்கொருவர் ஜன்ம விரோதிகளாக இருந்தனர். இவர் காலத்தில் மகாதேவகோவிந்தரானடே என்ற மகாராஷ்டிரப் பெரியார் பெயர் பெற்று விளங்கி வந்தார். இவர் சாதாரண ஆசிரியராக இருந்து பம்பாய் உயர்தர நீதி மன்றத்தின் நியாயாதிபதியாக உயர்ந்தவர்; சமூகச் சீர்திருத்தக்காரர்; மாதர் மறு மணத்தையும், சமபந்தி போஜனத்தையும் ஆதரித்தவர்; பொருளாதாரத் துறையில் சிறந்த அறிவு படைத்தவர். கோகலே ஆசிரியராக இருந்த காலத்தில் ரானடேயுடன் பழகி அவருக்குச் சீடரானார். அவரால் இவர் அரசியல் சமூகத் துறைகளில் நிரம்பிய புலமை பெற்றார்.

அக்காலத்தில் பூனாவில் 'சர்வ ஜனிக் சபா' என்ற சங்கம் ஒன்று இருந்தது. அரசியல் சமூகத் துறைகளில் அச்சங்கம் பாடுபட்டுவந்தது. ரானடே சுமார்

20 ஆண்டுகள் அச்சங்கத்தில் சேவை புரிந்துவந்தார். கோகலே சங்கக் காரியதரிசியாக இருந்து பணியாற்றி வந்தார். அச்சங்கம் அரசியல் துறையிலும் பிரசாரம் செய்ய ஒரு பத்திரிகையை நடத்தி வந்தது. கோகலே அதற்கு ஆசிரியராக இருந்துகொண்டு அருந்தொண் டாற்றி வந்தார்.

தட்சிணக் கல்விச் சங்கம் தொடக்கத்தில் **கேசரி மராட்டா** என்ற இரண்டு பத்திரிகைகளை நடத்தி வந்தது இச்சங்கத்தில் வைதிகர்களுக்கும் சீர்திருத்தக்காரர் களுக்கும் இடையில் பிளவேற்பட்டதனால் இப் பத்திரி கைகள் வைதிகர் வசமாயின. அவர்கள் சங்கத்தி னின்றும் பிரிந்து போய் விட்டனர். பிறகு சங்கத்தார் தம் கொள்கைகளைப் பரவச் செய்வதன் பொருட்டுச் **சுதாரக்** (புதிய வழிகள்) என்ற ஒரு பத்திரிகையை நடத் தத் தொடங்கினார்கள். இது ஆங்கிலத்திலும் மராத்தி மொழியிலும் நடைபெற்று வந்தது. ஆங்கிலப் பகு திக்கு நம் கோகலே ஆசிரியராக நியமிக்கப்பெற்றார். பத்திரிகாசிரியராக இருந்து கோகலே செய்துவந்த தொண்டு பாராட்டத்தக்கதாகும்.

அரசியல் துறையில் அரிய சேவை

1897-ல் இந்தியாவின் செலவுகளை விசாரித்து ஒழுங்குபடுத்த அரசாங்கத்தார் **வெல்வி** என்ற பெரியா ரின் தலைமையில் ஒரு கமிஷனை நிறுவினர். இது **வெல்பி கமிஷன்** எனப்படும். இதில் சாட்சியங் கூறுவதற்கு ஐந்து இந்தியர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுள் கோபால கிருஷ்ண கோகலேயும் ஒருவர். இங்கிலாந்தில் இக்கமிஷன் முன்பு, இவர் எடுத்துரைத்த விஷயத்

தினால் இவரது பொருளாதாரப் புலமை வெளிநாட்டாருக்கு நன்கு புலனாயிற்று.

அதன் காரணமாக இவருக்குப் பம்பாய்ச் சட்ட சபையின் அங்கத்தினர் பதவி 1900–1901ல் கிடைத்தது. அடுத்த வருடம் இந்திய சட்டசபை அங்கத்தினரானார். இந்தச் சபையில் இவர் நீண்டகாலம் பதவி வகித்து வந்தார். சபையில் வரவு செலவுத் திட்டம் விவாதத்துக்கு வரும் சமயம் கோகலே இந்தியரின் பணத்தின் பெரும் பகுதியை இராணுவத்தின் பொருட்டு அரசாங்கம் செலவிடுவதைக் கண்டித்துப் பேசி வந்தார். இராணுவத்தை இந்தியமயமாக்குதல் வேண்டுமென்று வற்புறுத்தினார். செலவினங்களை நாட்டின் நன்மைக்காக வகைப்படுத்தும் அவசியத்தை எடுத்து வாதித்தார். இவருடைய வாதம் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தமை பற்றி அரசியலார் மறுத்துக்கூற இயலாது திகைத்தனர்; ஆயினும் தம் சார்பில் அதிகமாக வாக்குகள் இருக்கும் காரணமாகப் பல தடவைகளில் வரவு செலவுத் திட்டத்தைத் தம் விருப்பம் போலவே நிறைவேற்றி வந்தனர். என்றாலும், பொது மக்களின் கொள்கை கோகலேயின் எதிர் வாதத்தினால் துரைத்தனத்தாரின் கொள்கைக்கு மாறாக மாறியது.

இந்தியா எந்தத் துறையிலும் முன்னேற்றம் பெற வேண்டுமானால் இந்நாட்டுக்கு ஆரம்பக் கல்வி இன்றியமையாததாகுமென்றும், அது தானும் கட்டாயமாகவும் இலவசமாகவும் அமையவேண்டுமென்றும், இவர் சட்ட சபைகளில் வாதாடி வந்தார். இது சம்பந்தமாக புள்ளி விவரங்களைச் சேகரித்து ஒரு திட்டத்தையும் கொண்டுவந்தார். ஆனால் துரைத்தனத்தார் அதனை

ஏற்றுக்கொள்ளவில்லை. இவருடைய முயற்சி தம் வாழ்நாளில் பலனளிக்காமற் போயினும் மக்கள் அப்போதே ஆரம்பக் கல்வியின் அவசியத்தை உணர்ந்து கொண்டனர். இவருக்குப் பின் வந்த தலைவர்கள் அதனைப் புகுத்த முயன்று பல விடங்களில் வெற்றி பெற்றனர். இப்பொழுது இந்தியா சுதந்திரம் பெற்றிருக்கிறது. இன்னும் சில நாளில் ஆரம்பக் கல்வி, கட்டாயக் கல்வியாதல் கூடும். கோகலேயின் முயற்சி வீண் போகவில்லை.

இந்தியப் பல்கலைக் கழக விஷயங்களில் அரசாங்கத்தார் சில திருத்தங்கள் அடங்கிய சட்டத்தை நிறைவேற்ற இருந்தனர்; கோகலே தம் அறிவின் திறமையினால் அச்சட்டத்தின் சாதக பாதகங்களை உணர்ந்து கொண்டு இந்திய இளைஞருக்கு அது இடையூறாகாமல் வாதாடினார். இவர் வாதம் தோற்றதேனும் பிற்காலத்தில் அது பயனை விளைவித்திருக்கிறது.

தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர் நிலங்களைச் சீர்படுத்த இந்தியாவிலிருந்து பலர் அங்கே ஒப்பந்தக் கூலிகளாகச் சென்றிருந்தனர். ஒப்பந்தக் காலம் முடிந்த பின் அவர்கள் அங்கேயே தங்கி வாழலாமென்று தென்னாப்பிரிக்க அரசாங்கம் கூறியிருந்தது. ஆயினும் தென்னாப்பிரிக்காவில் இந்தியருக்கு அந்நாட்டு அரசாங்கம் ஆதரவு தரவில்லை. அதற்கு முரணாகப் பல இன்னல்களை விளைவித்து வந்தது. தென்னாப்பிரிக்கா இந்தியருக்கு நன்மை ஏற்படும் துறைகளிற் காந்தியார் அந்நாட்டில் பாடுபட்டு வந்தார். கோகலேயும் அங்கு வருவிக்கப்பெற்றார். இவர் தென்னாப்பிரிக்க இந்தியரின் அழைப்புக்கு இசைந்து அங்கே சென்று வெள்ளையர் தம் அநீதியை உணரும்படி செய்து வந்தார்.

இந்தியச் சட்டசபை அங்கத்தினராக இருக்கையில் இவர் பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் அங்கத்தினராகவும் நியமிக்கப் பெற்ருர். அத் துறையில் பொருளாதார அறிவோடு இவர் செய்துவந்த சேவை போற்றத் தக்கதாகும். இங்கே ஒரு விஷயம் கவனிக்கப்படவேண்டும். கோகலே செல்வர் இனத்தைச் சேர்ந்தாரல்லர். இவருக்கு மாத ஊதியமோ எழுபது ரூபாயே. பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் அங்கத்தினருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளம் கொடுத்து வந்தார்கள். ஆனுல் அச் சம்பளம் பெறும் அங்கத்தினர் இந்திய சட்டசபையின் அங்கத்தினராக இருத்தல் கூடாது. கோகலே ஆயிரம் ரூபாயை மாத ஊதியமாகப் பெறவேண்டுமாஞல் சட்டசபையிலிருந்து விலகி விடவேண்டும். ஆனுல் இவர் அங்ஙனம் சொந்த வருவாயைக் கருதி சட்டசபையை விட்டு விலகினுரல்லர். சட்டசபையில் தாம் செய்துவரும் தொண்டு இன்றியமையாததென இவர் கருதியதே இதற்குக் காரணம். சட்டசபை அங்கத்தினராக இருந்து கொண்டே இவர் பப்ளிக் ஸர்விஸ் கமிஷனிலும் கௌரவமாக வேலையாற்றி வந்தார். இச்செயல் பாராட்டத்தக்கதாகும்.

இந்திய ஊழியர் சங்கம்

இந்தியாவின் பொதுநலத்துக்காக வருவாயை எதிர்பாராமல் உழைப்பவர்களைத் தயார்செய்யக் கோபாலகிருஷ்ண கோகலே ‘இந்திய ஊழியர் சங்கம்’ என்ற பெயரால் 1905-ல் ஓர் சங்கத்தை நிறுவினுர். அங்கத்தினராக இருக்க விழைகின்றவர்கள் அதில் பிழைப்புக்கு அவசியமான சிறிய தொகை மாத ஊதியமாகப் பெற்றுக்கொண்டு இந்தியாவுக்கு உழைப்ப

தாகவும், வறுமையை மகிழ்ச்சியுடன் தழுவி வாழ்வ தாகவும் உறுதி கூறவேண்டும். அந்த அங்கத்தின ருக்குச் சங்கம் சில ஆண்டுகள் பயிற்சி அளிக்கும். பயிற்சிபெற்ற உறுப்பினர் பொது நலச் சேவைக்குத் தகுதி வாய்ந்தவராவர். அண்மையில் காலஞ்சென்ற **ரைட் ஆனரபிள் ஸ்ரீநிவாச சாஸ்திரியார்** முதலிய மேதாவிகள் அச் சங்க ஊழியர்களாகி, அரசியல் உலகத்தில் நுழைந்து அரிய தொண்டாற்றி யுள்ளார்கள். இந்திய ஊழியர் சங்கத்தின் கிளைகள் இந்தியாவின் பல பாகங் களில் உள்ளன. சேவையில் காங்கிரஸ் வீறுகொண்டு முன்னணிக்கு வந்துவிடவே இச்சங்கம் கோகலேக்குப் பிறகு எதிர்பார்த்த அளவில் விளக்கமுறவில்லை.

இறுதிக்காலம்

கோகலே இடைவிடாத உழைப்பை மேற்கொண் டவர். மேற்கொண்ட பணிகளில் பெரிதும் ஈடுபட்டு அவற்றைச் சிறிய முறையில் இவர் செய்துவந்தார். வேலை மிகுதியின் காரணமாகப் பல சமயங்களில் இவர் நோய்வாய்ப்பட்டார். காசநோய் இவரைப் பற்றிக் கொண்டது. நோய்வாய்ப்பட்ட நாளில்கூட இவர் முக்கியமான வேலைகளை நிறுத்திவைப்பதில்லை. இவ் விதம் தொண்டின்மேல் தொண்டு செய்யவேண்டிய அவசியத்தினுல் இவர் உடல் தளர்ச்சியுற்றது. 1915-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19-ம் தேதியில் காசநோய் மிகுந்து கோபால கிருஷ்ண கோகலே இவ்வுலகத்தை நீத்தார்.

கோகலே மறைந்த செய்தி அதிவிரைவில் உல கெங்கும் பரவியது. அருமைத் தொண்டர் ஒரு வரை இழந்ததனுல் இந்தியா முழுவதும் சோகத்தில்


ஆழ்ந்தது. அரசியலறிஞர் ஒருவரை இழந்ததனுல் உலகமே இவரது மரணத்துக்குத் தன் அனுதாபத்தைக் காட்டியது. சிறப்பாக இவர் கல்வித்துறையில் செய்து வந்த பணிக்காக இந்தியா முழுவதிலும் பல பள்ளிகள் இவர் மறைவுக்கு அனுதாபங் காட்டும் பொருட்டு ஒரு நாள் விடுமுறைபெற்றன. இவரது மரணத்தைக் கேள்வியுற்று இவருடன் மாறுபட்டிருந்த பால கங்காதர திலகரும் பிரேத ஊர்வலத்திற் கலந்துகொண்டு கோகலேயின் சேவையைப் பாராட்டினர்.

சட்டசபையில் அரசியல் திட்டங்களை இந்தியாவின் நன்மையைக்கருதாது இங்கிலாந்தின் நன்மையைமட்டும் கருதிக்கொண்டுவந்த சுயநலவாதிகள் சிலருக்கு, இனி அத்தகைய திட்டங்களை எதிர்ப்போர் இல்லை என்ற எண்ணத்தினுல், கோகலேயின் மறைவு மகிழ்ச்சியை யளித்திருத்தல் கூடும். ஆயினும் என்? கோகலே பருவுடலை நீத்துச் சென்றனரேனும் சேவையின் தத்துவத்தையும், இந்தியாவுக்குப் பணியாற்றும் வகையினையும், அதற்கேற்ற ஆற்றலையும் நம்மிடை ஒப்புவித்துச் சென்முர் என்றல் மிகையாகாது.

3. ரவீந்திரர்

சர்வதேச மக்களும் பாராட்டும் ஒரு புலவரை இந்தியா உலகிற்கு அளித்திருக்கிறதென்று சொல்லிக் கொள்வதில் நமக்குப் பெருமை ஏற்பட்டுள்ளது. இந்தப் பெருமை நமக்கு மட்டுமன்று. ஆங்கில இலக்கிய உலகும், அப்புலவரால் புதிய செல்வத்தைப் பெற்றுள்ளது. கீழ்நாட்டு இலக்கிய மரபை ஒட்டிய கருத்துக்களோடு கூடிய இலக்கியப் புதையலை ஆங்கில மக்கள் இப்புலவர் வாயிலாகப் பெற்றுள்ளார்கள். ஆகையால் அப்பெருமையில் அவர்களுக்கும் பங்குண்டு. இப்புலவரே நம் **கவியரசு ரவீந்திர நாத தாகூர்** என்பவர்.

தாகூர் வங்கமொழி, ஆங்கிலம் என்னும் இரண்டு மொழிகளையும் கற்றுத் துறைபோகிய முற்றறிவாளர். இருமொழியிலும் ஒருங்கே புலமை வாய்ந்தோரைக் காண்டல் அரிது. இவ்விருமொழிகளுடன் தாகூருக்கு வடமொழி முதலிய வேறு மொழிகளின் நுணுக்கங்களும் தெரியும். இவருடைய புலமையின் சிறப்புக்கு வேறு காரணமும் உண்டு. சிறந்த கவியாக இருந்து ஒருவர் புலவரெனப்படலாம்; தொடர்கதை, சிறுகதை, கட்டுரை முதலியவற்றிற் கைதேர்ந்தாரும் புலவர்களே. புலமைக்கு எல்லை கோல இயலாது. நமது தாகூரோ ஒரு துறையில்மட்டும் புலமைபெற்றவ ரென்பதில்லை. இவர் சிறந்த கவிக்கட்டுரை, தொடர்கதை, சிறுகதை, நாடகம் முதலியவற்றை எழுதும் திறத்திலும் பேரறிஞராவர். இவற்றில் மட்டுமா! கனிந்த பாடகர், உருக்கமான நடிகர், திறன்கைவரப்பெற்ற ஓவிய மணி,



ரவீந்திரர்

வேதாந்தி, ஆசிரியர், சிறந்த பேச்சாளர்-முற்றிய புலமைக்கு இவை போதாவோ! இப்புலமையை அளவு கோலாகக்கொண்டு நோக்குங்கால் இவரது மேன்மை நன்கு புலனாகும். உலகமே தாகூரின் பெயரைப்போற்று வதற்கு இதுவே காரணம். இதனாலேயே நாம் இவரை இந்திய மக்களில் ஒருவராகக் கொள்கிறோம். இவர் பருவுடலோடு இன்று நம் கண்ணுக்குப் புலனாகாமற் போயினும் தம்முடைய நூல்கள் வாயிலாகச் சேவை யளித்து வருகிறார்.

பிறப்பு

நமது தேசத்தில் தாகூரை ஈன்றெடுத்த பேறு வங்கத்துக்கே கிடைத்துள்ளது. ஒருவர் இருவரோ டமையாது பல மேதாவிகளைத் தோற்றுவித்த பெருமை வங்காளத்துக்குண்டு. பல துறைகளில் இந்தியாவின் மறுமலர்ச்சி முதலில் வங்கத்திலேயே அரும்பி மலர்ந்து மற்ற இடங்களுக்குப் பரவியுள்ளது.

தாகூர் செல்வச் சீமானகப் பிறந்தார். இவர் குலத்தார் பரம்பரை ஜமீன்தார்கள். மூன்று தலை முறைகளாகக் கலைமகளும் திருமகளும் இக் குடும்பத் தாரைக் கடைக்கணித்து வந்தனர். தாகூரின் தந்தை யார் தேவேந்திர நாத தாகூர். மிகுந்த செல்வாக்குள்ள வராக இருந்தார். இராஜாராம் மோகன்ராய் ஏற்படுத்திய பிரமசமாஜத்தைக் கேசவசந்திர சேனர் பொறுப்பேற்று நடத்தும் வரையில் போற்றி வளர்த்தவர் இவரே. பரந்த நோக்கமுடையவர். தேவேந்திர நாத தாகூருக்கு ரவீந்திரர் ஐந்தாவது மகனக 1861-ல் பிறந்தார்.

இளமைப் பருவம்

ரவிந்திரர் வசித்துவந்த வீடு ஓர் அரண்மனை போன்றது. குடும்பமோ பெரியது. தேவேந்திர நாதருடைய மனைவி நம் தாகூர் பிறந்த சில நாளில் இறந்து விட்டபடியால் தேவேந்திர நாதர் குடும்பப் பற்றுதல் அதிகமின்றித் தனிமையான வாழ்க்கையை மேற்கொண்டு வந்தார். எல்லோரும் அவரை மகரிஷி என்று அழைக்கலாயினர். குடும்பநிர்வாகத்தை மூத்த மகனார் கவனிக்கலானார். ரவிந்திரர் செவிலித் தாயாரின் கையில் வளர்ந்து வந்தார்.

பள்ளியில் வெறுப்பு

சிறுவயதில் ரவிந்திரரைப் பள்ளிக்கு அனுப்பினார்கள். பள்ளிக்கூடத்தில் பல பிள்ளைகள் அழுக்குத் துணிகளை உடுத்திக் கொண்டு காட்சி யளித்தார்கள். அவர்களுடைய நடத்தையும் பழக்க வழக்கங்களும் மோசமாக இருந்தன. தாகூருக்கு ஆசிரியராக அமைந்தவர் வகுப்பில் சொல்லத்தகாத சொற்களை உபயோகித்துவந்தார். தாகூருக்கு அவரிடம் இயற்கையில் வெறுப்பேற்பட்டிருந்தது. அதனால் வகுப்பில் அவர் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் இவர் பதில் கூறுமல் மௌனமாக இருந்துவிடுவது வழக்கம். அவ்வாசிரியரும் இவரை 'ஒன்றும் தெரியாத, அறிவில் பிற்போக்கான பையன்' என்று எண்ணி வெறுத்து ஒதுக்கி வைத்திருந்தார். தாகூரும் வேலை ஒழிந்த இடை நேரங்களில் மற்றமாணவருடன் கலந்து விளையாடாமல் மேல்மாடிக்குச் சென்று தனிமையாகக் காலங் கழித்து வரலானார்.

இக்காலத்தில் பள்ளியில் நிகழ்ந்த ஒரு சம்பவம் குறிப்பிடத் தக்கது. ஆண்டு முடிவில் வேறு வகுப்பு உபாத்தியாயர் தாகூர் படித்து வந்த வகுப்பைப் பரீட்சிக்க ஏற்படுத்தப் பட்டார். அப்பொழுது வங்காள மொழியில் தாகூர் முதல்வராகத் தேர்ச்சி பெற்ருர். வகுப்பாசிரியருக்கு இது வெறுப்பை அளித்தது. தாகூர் முதல் அம்சம் பெற நியாயமில்லையென்றும், சோதனை செய்தவர் தாகூர்பால் தமக்கிருந்த அபிமானங் காரண மாக அதிக அம்சங்களை வழங்கியிருக்கிருரென்றும் மேலதிகாரிகளிடம் புகார் கூறினர். மேலதிகாரிகள் மறு முறை தாகூரைச் சோதனை செய்யும்படி ஏற்பாடுகள் செய்தார்கள். அச்சோதனையில் தாகூர் முதல் அம்சம் பெறும் தகுதி வாய்ந்தவரே என்பது வெளியாயிற்று.

வீட்டிற் கல்வி

இயல்பிலேயே தாகூருக்கு அப்பள்ளியின் மீது வெறுப்பாக இருந்ததனுல் பள்ளிக்குச் செல்லாமல் இருக்கும் வழிகளைத் தேடினர். ஆகவே, தேவேந்திர நாதர் இவரைப் பள்ளிக்கு அனுப்பாமல் வீட்டிலேயே கல்விபுகட்ட ஏற்பாடு செய்தார்.

வீட்டில் போதிப்பதற்கு ஒருவர் இருவர் அல்ல; பல ஆசிரியர்கள் நியமிக்கப் பெற்றனர். ஓவியம், உடற் பயிற்சி, வடமொழி, வங்கமொழி, ஆங்கிலம், பொது அறிவு முதலிய வேறு வேறு பாடங்களுக்கு, வேறு வேறு ஆசிரியர்கள் ஏற்படுத்தப்பட்டார்கள். விளையாடு வதற்குரிய மாலை நேரத்தில், மாணவரின் மூளை வேலை செய்ய வெறுத்து ஓய்வை விரும்புங் காலத்தில் ஆங் கிலம் போதிக்கப்பட்டு வந்தது. தாகூர் அப்பாடத்தை

வெறுத்தார். ஆங்கிலேயமே கடுமையானதென்ற எண்ணம் இவர்பால் குடிகொண்டது. வீட்டிலேயும் தாகூருக்குப் பாடங்களில் கருத்து ஊன்றவில்லை என்பதைத் தேவேந்திரர் அறிந்து கொண்டார். சில மலர்கள் நாள்பட்டு அகாலத்தில் மலர்வதை யாரே கண்டனர்! தாகூர் பெரிய மலராவாரென்று அந்நாளில் ஒருவரும் நினைக்கவில்லை.

இயற்கைக் காட்சிகளை வியத்தல்

இளமையிலிருந்து தாகூருக்கு இயற்கையின்பால் வேட்கை ஓடிற்று. காலையில் கதிரவன் தோன்றுவதையும் மாலையில் மறைவதையுங்காண இவர் விழைவதுண்டு. அக்காட்சிகளைத் தம் மன உலகில் பல பல வாறாக இவர் சிந்திப்பார். கங்கையில் படகு வழியாக பிரயாணம் செய்த காலங்களில் வழிநெடுகத் தாம் கண்ட இயற்கைக் காட்சிகளை வர்ணிப்பதில் இவர் வேட்கை கொண்டார். ஒருமுறை தேவேந்திரர் இவரைத் தம்முடன் இமயமலைப் பிரதேசத்துக்கு அழைத்துச் சென்று அங்கே சில மாதங்கள் தங்கியிருந்தார். அக்காலத்திலெல்லாம் - தாகூர் கண்ட காட்சிகள் பல. இக்காட்சிகள் அனைத்தும் இவர் எழுதிய நூல்களுள் படிப்போர் கண்முன் அங்ஙனமே தோன்றுகின்றன.

எழுதத் தொடங்குதல்

தாகூரின் தமையனார் "பாரதி" என்ற பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தார். அச்சமயம் தாகூர் சில கவிகளையியற்றி அப்பத்திரிகைக்கு அனுப்பி வந்தார். அப்பாடல்களை எல்லோரும் படித்து இன்புற்றார்கள்.

இப்பாடல்களைப் படித்தவர்கள் தாகூர் கவியாக வருதல் கூடுமென்று நினைத்தபோதிலும் தேவேந்திர நாத தாகூர் மட்டும் நம் புதல்வர் கலாசாலைப்பட்டம் பெற்று விளங்க வேண்டுமென்று எண்ணினர்.

கற்பதற்கு இங்கிலாந்து சென்று மீளல்

இந்த விருப்பத்துடன் அவர் இவரை இங்கிலாந்துக்குப் படிப்பதற்கு அனுப்பிவைத்தார்.

தாகூர் இங்கிலாந்தில் ஓராண்டு தங்கிப் படிக்கலானர். பள்ளிப்படிப்பில் இவருக்கு விருப்பம் தோன்றவில்லை. இங்கிலாந்தில் இவர் கண்டனவும் கேட்டனவும் பல. இவர் மனம் சிந்தனையிலேயே சதா ஆழ்ந்திருந்தது. அதனால் ஓராண்டின் முடிவில் பரிட்சையில் தவறி இவர் இந்தியா திரும்பினர்.

எழுத்து வன்மை

இந்தியா வந்தபின் பழையபடி இவர் பாடல், கட்டுரை, தொடர்கதை, சிறுகதை முதலியவற்றை எழுதிச் சில பத்திரிகைகள் வாயிலாக வெளியிட்டு வந்தார். 'ஐரோப்பாக் கண்டத்தில் பிரயாணம் செய்து வந்தவரின் கடிதங்கள்' என்ற நூலை இவர் வெளியிட்டார். 'இயற்கையின் பழிவாங்குகை' (Nature's Revenge) என்ற நூல் பலரால் பாராட்டப் பெற்றது. 'ஒருவர் துறவறத்தில் முழு நம்பிக்கை கொண்டு, இயற்கைக்கு மாறாக இல்லறத்தை வெறுத்துப் பற்றுக்களைத் துறந்து வாழ முற்படுகிறார். இயற்கை, அழகிய மங்கை வடிவாகி அவரை உலக நீதிக்குக் கொண்டுவர முயல்கிறது.' இப்பொருள் பற்றியதே இந்நூல். அன்பின் மாட்சி, அதன்

இன்றியமையாமை முதலியவற்றை இந்நூல் மாசுமறுவின்றி விளக்குகிறது. 'ரகுவின் காதல்'(Love of Rahu) என்ற நூலைச் செய்யுள் வடிவில் இவர் யாத்தார். அதில் பல படங்களைத் தாமாகவே வரைந்து சேர்த்து அதனை அழகுபடுத்தினார். 'மாலைக்கவிகள்', 'காலைக்கவிகள்' என்ற பெயரால் இவர் வெளியிட்டவை மிகச் சிறந்தவையாகும்.

மனை வாழ்க்கை

சிறு பிராயத்திலேயே (1883) இவருக்கு விவாகம் நிறைவேறியது. மனைவியும் இவரும் நெருங்கிய அன்பு பூண்டு வாழ்ந்து வந்தனர். சிற்றுண்டி வகைகளிலும் பலவித உணவு வகைகளிலும் இவருக்கு ஆர்வம் மிகுதி. சில சமயங்களில் இவர் தம் மனைவியுடன் சமையலறையில் இருந்துகொண்டு 'பலகாரங்களை அப்படிச் செய்யவேண்டும், இப்படிச் செய்யவேண்டும்' என்று தம் மனைவியாருக்கு உதவி செய்வாராம். கலை உள்ளம் எதைத்தான் செய்யாது!

கசப்புள்ள காலம்

அன்போத்த இல்லாளுடன் நெடுங்காலம் வாழும் பேறு இவருக்குக் கிடைக்கவில்லை. 1902-ல் மனைவியார் காலமானார். இந் நிகழ்ச்சியின் பின்னுள்ள சிலவாண்டுகள் தாகூருக்கு வருத்தம் தருவனவாயின. இவருடைய மகள் ஒருத்தி க்ஷயரோகத்தினால் பிடிக்கப்பெற்று 1904-ல் இறந்துவிட்டாள். அவளைத் தொடர்ந்து 1905–ல் தாகூரின் தந்தையார் மறைந்தார். 1907–ல் தாகூரின் மூத்த புதல்வன் காலமானான். மூத்த மகன் பிரிவு ரவீந்திரரை அதிகமாக வருத்தியது. இக்காலத்

திற்குப் பின் இவர் வேதாந்தியாய் விட்டார். மூத்த மகன் பிரிவுக்குப்பின் எழுதிய நூல்களில் மரணத்தின் கொடுமை வர்ணிக்கப்படுகிறது. நிலையாமையைப்பற்றி செய்தி உருக்கமாக இவருடைய பிற்காலத்து நூல்களில் காணப்படுகிறது.

கிராம வாழ்க்கையில் விருப்பு

ரவீந்திரருக்கு கிராம வாழ்க்கையில் ஈடுபாடு அதிகம். இவர் சில வருடம் தம் தந்தையார் நிலங்களை கிராமத்தில் இருந்துகொண்டு கவனித்து வந்திருக்கிறார். அந்த அனுபவத்தினால் இவர் நூல்களில் எளிய வாழ்க்கை, கிராம வாழ்க்கை, இயற்கை வாழ்க்கை முதலியன புலப்படும்.

சாந்திநிகேதனம்

சிறு வயதில் தாம் பெற்றுவந்த கல்வி முறை சரியானதன்றென்று இவர் உணர்ந்திருந்தார் அல்லவா? கல்வி முறையில் நம் நாட்டில் இருந்துவரும் குறை பாடு நீங்கவேண்டி இவர் 1901-ல் **சாந்திநிகேதனம்** என்ற கலாநிலையத்தை நிறுவினார். இது பிற்பாடு விரிவடைந்தது. **விசுவபாரதி** என்ற பல்கலைக் கழகமும் இங்கே நிறுவப்பெற்றது. இயற்கையை யொட்டிய கல்வி, சாந்திநிகேதனத்தில் அமையலாயிற்று. கிராம வாழ்க்கைப் பிரசாரமும், தொண்டும் இவரால் அங்கே மேற்கொள்ளப்பட்டன.

நோபெல் பரிசு

1912 முதல் ரவீந்திரர் மேல்நாடுகளுக்குச் சென்று வந்தார். இங்கிலாந்தில் இவர் தங்கியிருந்த சமயம் இவருடைய நூல்கள் சில மாக் மில்லன் கம்பெனி

யாரால் வெளியிடப்பெற்றன. அவைகளை ஆங்கில ஆசிரியர்கள் பெரிதும் பாராட்டினர்கள். இவர் புகழ் வெளிநாடுகளில் பரவத்தொடங்கிய காலம் இதுவே. இவர் இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்குச் சென்று அங்கே சில நாள் இருந்துவிட்டு இந்தியா திரும்பினர். இப்பிரயாணம் இவருக்கு மிகுதியான புகழை ஈட்டித் தந்தது. இவர் இந்தியாவுக்குத் திரும்பிய சில நாளில் 1913-ம் ஆண்டு **நோபெல் பரிசு**, இலக்கியத்துக்காக இவருக்கு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள செய்தி வெளிவந்தது. பரிசு வந்த தொகை 8000 பவுன். அவ்வளவையும் இவர் சாந்திநிகேதனுக்கே கொடுத்து விட்டார்.

புகழ்ச்செல்வம்

தாகூர் எந்தக் கல்லூரியிலும் பட்டதாரி அல்லர். ஆகவே, இந்தியாவில் இவருடைய எழுத்துக்கு மதிப்பில்லாமல் இருந்தது. வெளிநாட்டார் இவரைப் பாராட்டி நோபல் பரிசு வழங்கவே இந்தியரும் இவரைப் பாராட்டத் தொடங்கினர். கல்கத்தா சர்வ கலாசாலை இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கித் தன் கௌரவத்தை நாட்டிற்று. உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் பல இடங்களிலிருந்து விரிவுரை நிகழ்த்த இவருக்கு அழைப்பு வரலாயிற்று.

> "ஆற்றவும் கற்றர் அறிவுடையார் அஃதுடையார்
> நாற்றிசையும் செல்லாத நாடில்லை—அந்நாடும்
> வேற்றுநாடாகா தமவேயாம் ஆயினல்
> ஆற்றறு வேண்டுவ தில்"

என்ற பழமொழிச் செய்யுளுக்கு ரவீந்திரர் சிறந்த எடுத்துக்காட்டானர். இவர் பல முறை அமெரிக்கா,

ஜப்பான், ஐரோப்பா நாடுகள் முதலியவற்றிற்கு அந் நாட்டு மக்களின் அழைப்பின் மேற்சென்று, ஆங்காங்கே அரிய சொற்பொழிவுகளை ஆற்றியிருக்கின்றனர். இங்ஙனம் இவர் ஏழு முறை பிரயாணம் செய்து வந்திருக்கிறார்.

1940-ம் ஆண்டு ஆகஸ்போர்டு பல்கலைக் கழகத்தார் ரவீந்திரருக்கு டாக்டர் என்ற பட்டம் வழங்கத் தீர்மானித்தார்கள். அச்சமயம் இவர் நோய்வாய்ப் பட்டிருந்தார். எனவே, இங்கிலாந்து சென்று பட்டம் பெறும் நிலையில் இவர் இல்லை. ஆகஸ்போர்டு பல் கலைக் கழகத்தார் இதனை எண்ணி அப்பட்டம் வழங் கும் விழாவை இந்தியாவிலேயே நடத்த ஏற்பாடு செய்து இந்திய பெடரல் கோர்ட் நீதிபதியின் தலைமை யில் அதனை இவருக்கு 7—8—1940ல் வழங்கினார்கள். ஒரு பல்கலைக் கழகம் ஒருவருக்கு இந்த முறையிற் பட்டம் வழங்கினது இதுவே முதற் தடவையாகும்.

நாட்டன்பு

தாகூர் அரசியல் இயக்கத்திற் கலந்துகொள்ள வில்லையென்று சிலர் கூறுதல் கூடும். இக்கூற்று வலி யுடையதாகாது. தாகூருக்கு நம் நாடு விடுதலையடை யும் விஷயத்தில் மிக்க ஆர்வமுண்டு. தாம் வெளியிடங் களில் சொற்பொழிவாற்றச் சென்ற போதெல்லாம் இந்தியா உரிமை யிழந்து அல்லற்படுவதைக் குறித்துப் பேசி யிருக்கிறார்.


'ஜனகணமன அதிநாயக ஜெயஹே

பாரத பாக்கிய விதாதா' என்று இவர் அருளிச் செய்துள்ள அரும்கீதம் இப்பொழுது எங்கும் பாடப்

பெறுகிறது. இஃதொன்றே இவரது நாட்டன்புக்கு எடுத்துக் காட்டாகும்.

என்றும் நிலவும் தன்மை

1941 ஆகஸ்டு 7-ம் தேதி தம் எழுபத்தொன்ப தாம் பிராயத்தில் ரவீந்திர நாத தாகூர் மறைந்தார். இவர் மறைவைக் குறித்து உலகமே அனுதாபங் காட்டியது. இவருடைய பருஉடல் மறைந்ததேனும் இவரியற்றிய நூல்கள் உலகமுள்ளளவும் புகழுடன் விளங்குதல் கூடும்; அவை இன்று பல மொழிகளில் பெயர்க்கப்பெற்றுள்ளன. உலகில் பல்வேறு மக்களும் அவற்றைப் படித்து இன்புற்று வருகின்றனர். அவருடைய பரந்த முகமும் நீண்ட தாடியும் உயரிய தோற்றமும் அறிவு ஒளி ததும்பும் கண்களும் ஒவ்வொருவருடைய மனக்கண் முன்பு நின்று இன்றும் காட்சியளித்து வருகின்றன.



ஜகதீச சந்திர போஸ்

4. ஜகதீச சந்திர போஸ்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தோடு இந்தியாவில் விஞ்ஞான மறுமலர்ச்சி தோன்றியுள்ளது. சென்ற இருபத்தைந்து ஆண்டுகளில் இம்மறுமலர்ச்சி இந்திய சமூகத்துக்கு வெளிநாடுகளில் புகழையும் அந்தஸ்தையும் நல்கியிருக்கின்றது. வசதியொன்றும் அமையாத அன்னியர் ஆட்சியில் நம் விஞ்ஞானிகள் இவ்வளவு தூரம் முன்னேறியிருப்பது பாராட்டற் குரியதாகும்.

இந்திய விஞ்ஞான சிகாமணிகளில் ஒருவராகிய ஸர். ஸி. வி. ராமன் என்பவர் எழுதிய 'புதிய இந்தியாவில் விஞ்ஞானம்' (Science in New India) என்ற கட்டுரையில்,

"பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவின் விஞ்ஞான மறுமலர்ச்சிக்கு ஆதரவு தரவில்லை; வேறு துறைகளில் தாராளமாகச் செலவு செய்து வந்த துரைத்தனத்தா ரால், 'இந்திய விஞ்ஞான அறிஞர் கழகம்' (Indian Academy of Science) என்ற ஸ்தாபனத்துக்குப் பொருளுதவி கிடைக்கவில்லை; தனிப்பட்ட ஒரு சில அறிஞர்கள் தம் சொந்த முயற்சியினுலேயே விஞ்ஞா னத் துறையில் முன்னேறி யிருக்கிறுர்கள். ஒரு நூற் றுண்டுக்கு மேல் ஆங்கிலேயர் நம்மை ஆண்டுவந்ததன் காரணமாக நம்மில் பலரிடை, 'மேனுட்டு விஞ்ஞானி களே நம்மவரிலும் உயர்ந்தவர், அங்கேயுள்ள விஞ் ஞான அமைப்புக்களே சிறந்தவை என்ற தப்பெண் ணம் நிலவி வருகிறது. லண்டனிலுள்ள அரசாங்க

விஞ்ஞானக் கழகத்தின் (Royal Society) அங்கத்தின ரென்பதற்கு அறிகுறியாகத் தம் பெயரின் பின் மூன்று எழுத்துக்களைச் (F. R. S.) சேர்த்துக் கொண்டுள்ள வர்களைவிட, அந்த எழுத்தில்லாதவர் அறிவிற் குறைந் தவர் என்ற பிழை உணர்ச்சி தோன்றியுள்ளது. இது வெறும் மயக்கமே யாகும்; அந்தக் கழகத்தின் அங்கத் தினரான பிரபல ஆங்கிலேய விஞ்ஞானிகள் விஞ்ஞா னத்தையோ அதன் ஆராய்ச்சியையோ அத்துணைச் சிறப்பாகக் கருதுவதில்லை; பிற நாடுகளை ஆளும் உரிமை தங்களுக்கே உண்டு என்ற மனப்பான்மையே அவர்கள்பால் ஊறிக் கிடக்கின்றது" என்று எழுதி யுள்ளார்.*

அரசியலாரின் உதவியில்லாத காலத்தில் இந்திய விஞ்ஞானிகளுக்குத் தம் முன்னேற்றத்தில் பல தொல் லைகள் குறுக்கிட்டன. அவற்றை யெல்லாம் பொருட் படுத்தாது பொறுமையுடன் உழைத்து முன்னேறிய வரின் பெருமை பொன்னெழுத்துக்களால் எழுதத் தக்கதாகும். அத்தகைய ஒரு சில மேதாவிகளில் **ஜகதீச சந்திர போஸ்** என்பவரும் ஒருவர். அவர் சரித் திரத்தைப் படிக்கும்போது நமக்கு மேலே கூறிய வற்றின் உண்மை புலனாகும்.

இளமைப் பருவம்

ஜகதீசர் வங்காளத்தில் விக்கிரமபுரம் என்னும் ஊரில் 1858ம் ஆண்டு நவம்பர் மாதம் கடைசி நாளிற் பிறந்தார்.

---

*இக்கட்டுரை ஹிந்துப் பத்திரிகையில் 15—8—47ல் வெளிவந்துள்ளது.

அவருடைய தந்தையார் பகவான் சந்திர போஸ் என்பவர் வங்காளத்தில் ரெவின்யூ இலாகாவில் வேலை பார்த்து வந்தார். அவர் நடுத்தர அந்தஸ்துடைய குடும்பத்தைச் சேர்ந்தவர். தேசப்பற்றும் மொழிப் பற்றுமுள்ளவர். அவர் தம் மகனுருடைய கல்வியில் கருத்துடையவராக இருந்தார். போஸ் தாம் விரும்பிய துறையில் கல்வி பயின்றிருப்பாராளுல் பிற்காலத்தில் அவர் ஐ.ஸி.எஸ். பரீட்சையில் தேறி நிரம்பப் பொருள் குவித்தவர்களின் கூட்டத்தில் தாமும் ஒருவராகச் சுக வாழ்வை மேற்கொண்டிருக்கலாம். ஆனுல் அந்த வாழ்வு அவருக்கு உலகில் நிலைத்த புகழைக் கொடுத்திராது; உலகிற்கும் நல்ல பயனை அளித்திராது. தந்தை யார் அவரை ஐ. ஸி. எஸ். பரீட்சைக்கு அனுப்பாமல் உலகிற்குப் பயன்படும் வழியைப் பின்பற்றச் செய்தார். தாய்மொழிப் பற்றையும், நம் நாட்டின் பழம்பெருமை யினிடத்து மதிப்பையும், தேச மக்களுக்குச் செய்ய வேண்டிய சேவை உணர்ச்சியையும் போஸ் பெறுமாறு அவர் தம் தந்தையார் கருத்துக்கொண்டார்.

அக்காலத்தில் நாட்டில் ஆரம்பப் படிப்பைப் புகட்ட இரண்டு விதமான பள்ளிகள் இருந்தன. நாட்டு மொழியைப் பழைய முறைகளில் கற்பிக்கும் திண்ணைப்பள்ளிகள் ஒருவகையன. பள்ளிக்குச் செல்லும் சிறுபருவத்திலேயே ஆங்கிலம் கற்பிக்கும் மேனுட்டுமுறைப் பள்ளிகள் மற்ருெரு வகையன. நடு அந்தஸ்துடையோரிற் பலரும், செல்வர்களும் தம் பிள்ளைகளை ஆங்கிலப் பள்ளிகளுக்கே அனுப்பி வந்தனர். ஆனுல் பகவான் சந்திரரோ தம் புதல்வரை ஒரு திண்ணைப்பள்ளிக்கு அனுப்பி வைத்தார். இப்

பள்ளியில் போஸ் வங்கமொழியையும் அதன் வழியாக இராமாயண, பாரதக்கதைகளையும் இளமையிலேயே நன்கு அறிந்து கொண்டார். பிற்காலத்திலும் இவர் பால் தாய்மொழிப் பற்று ஓங்கியிருந்தது. இவர் ஏழை எளியவரிடம் நன்கு பழகி, வகுப்புவேற்றுமையுணர்ச்சியற்ற விரிந்த நோக்கமுடையவரானமைக்கு ஆரம்பப் படிப்பே ஓரளவில் காரணமென்னல் வேண்டும்.

ஆரம்பப்படிப்பு முடிந்ததும் போஸ் ஒரு கிறிஸ்தவக்கல்லூரியில் சேர்ந்து உயர்தரப் படிப்பையும் கலாசாலைப் படிப்பையும் முடித்துக்கொண்டு பட்டதாரியானர்.

சிறுவயது முதற்கொண்டு பொருள்களைக் கூர்ந்து கவனிப்பது இவருக்கு வழக்கமாயிற்று. குதிரைச் சவாரி செய்வதில் அளவற்ற விருப்பம் இருந்தது. கேள்வி கேட்டுப் பல செய்திகளை உணர்ந்துகொள்ளும் இயல்பு இவர்பால் சிறு பிராயத்திலேயே அமைந்திருந்தது.

கல்லூரியில் இவர் ரஸாயனத்தையும் பௌதிக சாத்திரத்தையும் இஷ்ட பாடமாக எடுத்துக் கொண்டார். அவற்றில் இவருக்கு அளவற்ற வேட்கை இருந்தது. இதனை இவர் தந்தையார் நன்கு அறிந்திருந்தார்.

இங்கிலாந்தில் மேற்படிப்பு

போஸ் மேற்படிப்புக்காக இங்கிலாந்து செல்ல ஆர்வங்கொண்டார். தந்தைக்கு அது விருப்பமேயாயினும் அவர் கையில் போதிய பணம் இல்லை. தாய்

தம் நகைநட்டுகளை விற்றுப் பணமுடையை ஒருவாறு சரிசெய்தார். போஸ் இங்கிலாந்தில் ஐ. ஸி. எஸ். படிக்க விரைந்தார். தந்தையார் பொது ஜனங்களுக்குப் பயன்படத்தக்க ஆசிரியர் பதவியையோ மருத்துவர் பதவியையோ தம் மகனுர் பெறவேண்டுமேயொழிய ஐ. ஸி. எஸ் பரீட்சைக்குப் பயிலக்கூடாதென்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். அதனுல் ஜகதீசர் மருத்துவக் கல்வியைப் பயிலத் தீர்மானித்து லண்டன் சென்ருர்.

இந்தியாவில் பி. ஏ. பயின்றவர்கள் இங்கிலாந்தில் மெட்ரிகுலேஷனுக்குத் தயாராக வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. அதன்படி. இவர் அவ்வகுப்பில் பயிலலானுர். பௌதிக நூலும் பூகர்ப்பசாத்திரமும் (Geology) இவருக்குப் புதிய பாடங்களாக இருந்தன. அவற்றில் இவருக்கு ஊக்கம் ஓடியது. இவர் கருத்துடன் கற்றுத் தேர்ந்து தம் இருபத்தைந்தாம் பிராயத்தில் 1884-ல் பட்டதாரியானுர். அடுத்தவாண்டில் **பி. எஸ். ஸி.** யையும் முடித்துக் கொண்டார்.

போஸ் லண்டனில் மருத்துவக் கல்விக்குப் பயின்று வந்தார். முறைசுரம் (Malaria) அடிக்கடி பிடித்ததின் காரணத்தால் ஒரு வருடத்தின் முடிவில் அம்முயற்சியை இவர் விட்டொழித்து, கேம்பிரிட்ஜ் சென்று விஞ்ஞானத்தை மேற்கொண்டதாகத் தெரிகிறது.

உத்தியோகம் ஏற்றல்

அக்காலத்தில் இந்தியாவில் ரிப்பன் பிரபு இராஜப் பிரதிநிதியாக இருந்தார். இங்கிலாந்து அரசியலில் செல்வாக்குப் பெற்றிருந்த ஒருவர் போஸுக்கு ஏற்ற

உத்தியோகம் கொடுக்குமாறு ரிப்பன் பிரபுவுக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். வங்காள சர்க்காரில் போஸுக்கு ஏதேனும் உயர்ந்த உத்தியோகம் வழங்கும் படி வைஸிராய் வங்க கவர்னருக்கு எழுதினார். கல்வி இலாகாவில் இவருக்கு ஒரு பதவியைக் கொடுக்குமாறு கவர்னர் ஏற்பாடு செய்தார்.

கல்வி இலாகாத் தலைவர் ஓர் இந்தியருக்கு உயர் பதவி தர ஒருப்படாதவராய் ஆங்கிலேயரான பௌதிக நிபுணர் ஒருவர் நீண்ட காலம் ரஜாவின் பேரில் சென்றிருந்து காலியாக விருந்த இடத்தை இவருக்கு 1885-ல் கொடுத்தார். ஆங்கில நிபுணர்களுக்கும் இந்திய நிபுணர்களுக்கும் சம்பள விஷயத்தில் வேற்றுமை இருந்து வந்தது. முன்னவர் பெறும் தொகையில் மூன்றில் இரண்டுபங்கே பின்னவருக்கு அளிக்கப்பட்டு வந்தது. போஸ் தற்காலிகமாக வேலைபார்த்துவர நியமிக்கப்பட்டமையின் அத்தொகையிலும் பாதியையே பெற வேண்டியவரானார். இவ்வளவும் கல்வியதிகாரி யின் சூழ்ச்சியால் விளைந்தது.

போஸ் சிறந்த மானி. உயர்ந்த சம்பளம் பெறுவதற்குத் தம்பாலுள்ள தகுதியைக் கூறிச் சம்பளத்தை வாங்கிக் கொள்ள மறுத்துவிட்டார். மூன்றாண்டுகள் சம்பள மின்றியே கல்லூரியில் பணியாற்றி வந்தார். தந்தையும் ஒரு வியாபாரத்தில் நஷ்டமடைந்து கடன் பட்டிருந்த சமயம் அது. போஸுக்குத் திருமணம் நிறை வேறியிருந்தது. குடும்பச் செலவுகளைச் சரி செய்வதில் துன்பம் தோன்றிய அந்நாளில் இவர் ஒரே பிடியாக உறுதியுடன் சம்பளம் வாங்காமல் இருந்தது இவரது வீரத்துக்கோர் அறிகுறியாகும். இறுதியில் கல்வியதி

காரி இவருடைய குணத்தை மெச்சி உயர்ந்த அளவில் கணக்குச் செய்து மூன்றுண்டுகளிற் சேரவேண்டிய சம்பளத் தொகையை ஒரு தடவையில் செலுத்தினுர். அதனைக் கொண்டு போஸ் தம் தந்தை பட்ட பழங் கடன்களைத் தீர்த்தார் என்று கூறுவர்.

வாழ்வின் குறிக்கோள்

புகைப்படமெடுப்பும் (Photography), ஒலிப் பதிவும் (Sound recording) ஜகதீசருக்குப் பொழுது போக்காயிருந்தன. இவர் விடுமுறை நாட்களில் பல விடங்களுக்குச் சென்று இயற்கைக் காட்சிகளைப் பட மெடுத்து வந்தார். வகுப்பில் மாணவர்களுக்கு விளங் கும்படி பாடம் சொல்வது, பரிசோதனைகளைக் காட்டு வது, ஓய்ந்த நேரங்களில் விஞ்ஞானத் துறைகளில் ஆராய்ச்சி செய்வது ஆகிய இவை இவருக்கு வழக்க மான தினசரி அலுவல்களாயின. இவற்றுள் விஞ் ஞான ஆராய்ச்சி இவருடைய வாழ்வின் குறிக்கோளா யிற்று. தம் பிறந்த நாளன்று, கழிந்த ஆண்டில் விஞ் ஞானத் துறையில் தாம் செய்த வேலையையும், வரும் ஆண்டிலும், தொடர்ந்த பல வருஷங்களிலும் செய்ய வேண்டிய வேலையின் திட்டத்தையும் ஆராய்ச்சி செய் வது இவரது இயல்பு. வாழ்க்கையில் முன்னேற விரும்புகின்றவர் ஒவ்வொருவரும் ஓர் இலட்சியத்தை மேற்கொண்டு ஒழுகிவருதலோடு தம் பிறந்த நாளன்று இறந்த கால வேலையின் பலா பலத்தையும் வருங்காலத் திற் செய்யவேண்டிய வேலை ஏற்பாட்டையும் பற்றி இவரைஎடுத்துக்காட்டாகக்கொண்டு ஆராயவேண்டும்.

விஞ்ஞானத் துறையில் முன்னேறவேண்டுமென்ற குறிக்கோளோடு 1894-ம் ஆண்டு தம் பிறந்தநாளில்

போஸ் மின்சார அலைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வ தென்று உறுதி கொண்டார். அடுத்த வருடம் லண்ட னிலிருக்கும் அரசாங்க விஞ்ஞானக் கழகச் சஞ்சிகைக்கு மின்சார ஒளி முறிவு (Electric refraction) என் பதைப்பற்றி ஒரு கட்டுரை எழுதினர். அது பலராலும் பாராட்டப் பெற்றது. அக்கழகத்தார் ஜகதிசருக்கு இவர் தம் ஆராய்ச்சியை மேலும் தொடங்கிச் செய்வ தற்கு வசதியாக ஒரு தொகையை உதவினர்கள். இதன் பின்னரே போஸின் பெயர் பலருக்குத் தெரிய லாயிற்று. 'நம்மவருள் ஒருவருடைய பெருமையை அறிந்து முதலில் பாராட்டும் இயல்பு நம்மிடமில்லை; பிறநாட்டார் அவரைப் பாராட்டுவாரேயானல் பிறகு உள்நாட்டில் பலரும் அவரைப் புகழத் தொடங்குவர்' என்பதற்குப் பல எடுத்துக்காட்டுகளை நாம் காட்டுதல் கூடும். அத்தகையவற்றுள் போஸை நம் நாட்டார் பாராட்டத் தொடங்கியதும் ஒன்று. லண்டன் விஞ் ஞானக் கழகத்தார் ஜகதிசருக்கு ஒரு தொகையை வழங்கவே, வங்க அரசாங்கமும் இரண்டாண்டுகள் கழித்து இவருடைய பணிக்கு ஒரு தொகையை வழங்கியது.

சொந்தத்தில் ஆராய்ச்சிச்சாலை

இவர் வேலை செய்துவந்த மாகாணக் கல்லூரியில், விஞ்ஞான ஆராய்ச்சிச்சாலை (Laboratory) மிகச் சிறியதாகவே யிருந்தது. மிகவும் அவசியமான உப கரணங்கள் (Apparatuses) கூட அதிலில்லை. தம் பரிசோதனைகளைச் செய்வதற்கு வழியில்லாமல் ஜகதிசர் இடர்ப்பட்டு வந்தார். ஆகவே, அவர் தம் வருவாயில் சிறுகச் சிறுகப் பொருள் சேர்த்துச் சொந்தத்தில் தமக்

கென்று ஓர் ஆராய்ச்சிசாலையை அமைத்துக் கொண்டார். தம் பரிசோதனைக்கு வேண்டிய கருவிகளை உள்ளூர்த் தொழிலாளிகளைக்கொண்டு தாமே தயாரித்துக்கொண்டார். இந்தியர் ஒருவர் தம் ஆராய்ச்சிக்குரிய கருவியை மேல்நாடுகளிலிருந்து வருவித்துக் கொள்ளாமல் சொந்தத்திலேயே கருவிகளை எளிமையும் நுண்மையும் அமையுமாறு அமைத்துக்கொண்டது இதுவே முதல் முறையாகும். இவர் பிற்காலத்திலும் இவ்விதமே பல நுட்பமான கருவிகளை இந்தியாவிலேயே செய்துகொண்டார். இக் கருவிகளை வெளிநாட்டு விஞ்ஞானிகள் பாராட்டியுள்ளார்கள்.

முதல் ஆராய்ச்சி

ஜகதீசரின் ஆராய்ச்சித் திறனையும் முடிவுகளையும் கண்டு வியப்பார் இந்தியாவில் இலராயினர். இவருக்குப்போதுமான அளவில் விளம்பரம் இல்லாத குறையே இதற்குக் காரணம். ஆகவே, இவர் தம் பரிசோதனைகளை லண்டன் விஞ்ஞானக் கழகத்தின் முன்னிலையிற் செய்து காட்ட எண்ணியிருந்த சமயம் 1897-ல் அங்கிருந்து இவருக்கு மின்சார அலைகளைப்பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்துமாறு அழைப்பு வந்தது.

இச்சமயம் இவர் கம்பியில்லாத் தந்தி (Wireless Telegraphy) அமைக்கும் முறையைக் கண்டறிந்தார். அதனை நிரூபித்துக் காட்டுவதற்குள் இங்கிலாந்துக்கு வரும்படி அழைப்பு வந்ததனால் அதனை இவர் இடையில் நிறுத்திவிட்டுச் சென்றார். அதற்குள் இத்தாலிய விஞ்ஞானி மார்க்கோனி கம்பியில்லாத் தந்தியைக் கண்டு பிடித்துவிட்ட செய்தி வெளிவந்து விட்டது. கம்பி

யில்லாத் தந்தியை மார்க்கோனி முதலில் கண்டு பிடித்தார் என்ற பெயர் கிடைத்ததற்குக் காரணம் நம் ஜகதீசருக்கு வாய்ப்பில்லாமற் போனதினலேயே.

லண்டன் விஞ்ஞானக் கழகத்தில் இவர் ஆற்றிய அரிய சொற்பொழிவு பலரது உள்ளங்களைக் கவர்ந்தது. ஒலிஅலைகளை வேண்டியபடி குறுக்கவும் நீட்டவும்வல்ல கருவிகளை இவர் கண்டுபிடித்த விவரங்களைக் கேட்கக் கேட்கப் பல விஞ்ஞானிகள் இவரை மதிக்கலாயினர். பிரான்ஸிலிருந்தும் ஜெர்மனியிலிருந்தும் விரிவுரை நிகழ்த்த இவருக்கு அழைப்பு வந்தது. அந்த நாடுகளுக்குச் சென்று பல பாராட்டுகளைப் பெற்று இந்தியா வந்து சேர்ந்தார்.

இரண்டாம் ஆராய்ச்சி

மின்சார அலைகளை இவர் தொடர்ந்து ஆராய்ந்து சிறிது காலத்தில் தாவரங்களும் பிராணிகளும் மின் எதிர்ப்புக்களைத் திருப்பித்தருதலை (Electric Response in Plants & Animals) கண்டறிந்தார். இந்த ஆராய்ச்சி பௌதிக சாத்திரத்துக்கும் சரீர சாத்திரத்துக்கும் தொடர்புடையதாகும். இதுகாறும் சரீர சாஸ்திரிகளோ பௌதிகசாஸ்திரிகளோ இதனைக்கண்டவரல்லர். தாவரங்களுக்கும், இரும்பு முதலிய உலோகங்களுக்கும் உணர்ச்சி உண்டென்று ஜகதீசர் இந்த ஆராய்ச்சியின் பயனாகக் கண்டறிந்தார். உடற் கூறுபாட்டில் உலோகங்கள் முதல் பிராணிகள் ஈறாக யாவும் ஓர் ஒருமைப்பாட்டைப் பெற்றிருப்பதை உலகுக்கு எடுத்துக்காட்ட விரும்பினர். இதன் பொருட்டு இவர் இரண்டாம் முறையாக 1901-ல் இங்கிலாந்து

சென்று விஞ்ஞானக் கழகத்தில் பரிசோதனைகளோடு விரிவுரை நிகழ்த்தினார்.

துன்பங்களில் குறுக்கீடு

அக்கூட்டத்துக்கு ஏராளமான பௌதிக சாஸ்திரிகளும் உடல்நூற் புலவரும் வந்திருந்தனர். பௌதிக நூல் வல்லார் யாவரும் இவருடைய ஆராய்ச்சித் திறனை வியந்து பாராட்டினர். உடல் நூற் புலவருக்கு அஃது உண்மைக்கு மாறுபட்டதாகத் தோன்றியது.

கூட்டத்தில் இருந்தவரில் ஸர் ஜான் பர்டன் ஆண்டர்சன் (Sir John Burdon Anderson) என்பவர் ஒருவர். அக்காலத்தில் இங்கிலாந்திலிருந்த உடல்நூற் புலவரில் சிறந்த மேதாவியாகக் கருதப்பட்டவர் அவர். யாவரும் அவரைச் சரீர சாத்திரத்தின் பிதாமகர் என்பர். அவர் தாமும் போஸ் சென்ற துறையில் மின்சாரத்துக்கும் உடல்நூலுக்குமுள்ள தொடர்பை நன்கு ஆராய்ந்து வந்தவரே. ஜகதீசர் தம் கட்டுரையை வாசித்து முடித்தவுடன் ஆண்டர்சன் எழுந்து "போஸ் பெரிய பௌதிக சாத்திர நிபுணர் என்பதில் ஐயமில்லை; அவர் தம்முடைய சாத்திரத்தோடு நின்றிருந்தால் நன்றாக இருந்திருக்கும்; அப்படியின்றி உடல் நூல் விஷயத்தில் இறங்கித் தப்பையும் தவறையும் ஓர் ஆராய்ச்சியாகக் கூறியிருப்பது வருந்தத்தக்கது" என்று கூறினார். அங்கிருந்த உடல் நூற் புலவரில் சிலர் அவரைப் பின்பற்றி நின்றனர். ஜகதீசர் அஞ்சவில்லை. அந்தச் சபையிலேயே எழுந்து நின்று தம் கட்டுரையை ஆண்டர்சன் மொத்தத்தில் தப்பு என்று சொல்வதில்

பாவில்லை என்றும், ஆராய்ச்சி முறையில் இன்ன இடத்தில் தவறு இருக்கிறதென்பதை எடுத்துக்காட்ட முடியுமானால் எடுத்துக்காட்ட வேண்டுமென்றும் கூறினார். ஆண்டர்சன் தாம் இவ்விஷயத்தைப் பல வருஷம் ஆராய்ச்சி செய்திருப்பதாகவும் மின் எதிர்ப்புக்கள் தாவரங்களில் இல்லை என்றும் கூறிச் சென்றார்.

இந்தச் சம்பவத்தின் பிறகு, விஞ்ஞானக் கழகம் ஜகதீசரின் கட்டுரையை வெளியிட மறுத்து விட்டது. 'கீழ்நாட்டார் இவர்' என்பதே இவ்வளவுக்கும் காரணம்.

மேல்நாட்டு விஞ்ஞானிகள் கீழ்நாட்டு விஞ்ஞானிகளிடம் காட்டும் மனப்பான்மைக்கு ஜகதீசர் வருந்தினார்; என்றாலும், தம் ஆராய்ச்சியை எங்ஙனமேனும் புதிய பரிசோதனைகளால் அவர்களுக்குக் காட்டி உண்மையை விளக்கவேண்டுமென்று உறுதி கொண்டார். ஒரு பரிசோதனைச் சாலைக்குச் சென்று தம் ஆராய்ச்சிகளை மற்றொரு முறை பரிசோதனை செய்து உண்மையை ஊர்ஜிதப் படுத்திக்கொண்டார்.

அவர் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கையில் மூன்று விஞ்ஞானப் பிரமுகர்கள் யதேச்சையாக அவரிடம் வந்தனர்.

ஜகதீசரின் பரிசோதனைகளை அவர்கள் நேரிற் கண்டு வியந்தனர். அவர்களில் ஒருவர் விஞ்ஞானக் கழகத்துக்குத் தலைவராகவும், மற்றொருவர் காரியதரிசியாகவும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருந்தனர். அதனால் அவர்கள் ஜகதீசர் தம் பரிசோதனைகளை விஞ்ஞானக் கழகத்தில் செய்து காட்டினால், உடல்நூற்

புலவர் அதன் உண்மையை அறிவார்களென்று கூறிப் பிரசங்கத்துக்கு ஏற்பாடு செய்தார்கள்.

இந்தமுறை அங்கே கூடியிருந்த உடல் நூற்புலவர் எல்லாம் ஜகதீசர் கண்டறிந்த உண்மைகளை அப்படியே ஏற்றுக்கொண்டனர். ஆனால் இச்சமயம் மற்றோர் இடையூறு வந்து முளைத்தது.

ஜகதீசர் விரிவுரை ஆற்றிவிட்டு இந்தியா வந்து விட்டனர். இங்கிலாந்திலிருந்த இவர் நண்பரும், லின்னியன் கழகத்தின் அமைச்சருமான ஹோவ்ஸ் (Howes) என்பவர் இவருக்குச் சில நாளில் ஒரு கடிதம் எழுதினர். அதில் ஜகதீசர் கண்டுபிடித்த புதிய ஆராய்ச்சியை இவருக்கு முன்னதாக இங்கிலாந்தில் ஒருவர் கண்டறிந்திருப்பதாக விஞ்ஞானக் கழகத்துக்கு அறிவித்துள்ளார் என்ற செய்தி கண்டிருந்தது. ஜகதீசர் விஞ்ஞானக் கழகத்தில் 1901-ல் முதல்முறை பிரசங்கத்தைக் கேட்டுவந்த ஒரு விஞ்ஞானி விஷயங்களைக் கிரகித்துச் சென்று தான் அவற்றைக் கண்டறிந்ததாக வெளியிட்டிருந்தான்.

உண்மை புலனானமை

ஜகதீசர், ஹோவ்ஸின் கடிதம் பெற்றவுடனேயே விஞ்ஞானக் கழகத்தாருக்கு, இந்த ஆராய்ச்சி விஷயத்தில் பல விஞ்ஞானிகள் ஒன்றுகூடித் தக்கபடி விசாரணை செய்து ஆராய்ச்சியை முதலில் கண்டறிந்தவர் தாமா, பொய்யரான அந்த விஞ்ஞானியா என்று கண்டு பிடித்துக் கூறுமாறு வேண்டினர்.

கழகமும் இவருடைய வேண்டுகோளுக்கு இசைந்தது. ஜகதீசரின் ஆராய்ச்சி வரலாற்றை முன்னமேயே பலர் கேள்விப்பட்டதுண்டு. அதனால் உண்மை அறியக் கூடிய கமிட்டியார் ஜகதீசரே அந்த ஆராய்ச்சிக்குத் தந்தையாரென்று முடிவு கட்டினார்கள். பொய் கூறிய விஞ்ஞானியின் மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளச் சில நண்பர் ஜகதீசரை வேண்டினார்கள். ஆனால் இவரோ தம் பெருந்தன்மையினால் அவர் மீது யாதொரு நடவடிக்கையையும் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. ஜகதீசர் தாவரங்களுக்கு உணர்ச்சியுண்டென்று தாம் கண்டறிந்ததை உலகம் ஏற்றுக்கொள்ளுமாறு செய்த வரலாறு இது.

மூன்றும் ஆராய்ச்சி

இதன்பின் ஜகதீசர் தாவரங்களிலுள்ள உயிர் இயக்கங்களைக் குறித்து மேலும் மேலும் ஆராய்ச்சி செய்து பல உண்மைகளை எளிதில் விளக்கும் வகைகளைக் கண்டறிந்தார். அதன் பொருட்டுப் பல கருவிகளை இந்தியாவிலேயே அமைத்துக் கொண்டார். இவ்வளவும் முடிந்ததும் இங்கிலாந்துக்கு வந்து தாவர உயிர் உணர்ச்சித் தத்துவங்களைக் குறித்துத் தாம் செய்த புதிய ஆராய்ச்சிகளை விளக்குமாறு, இவருக்கு விஞ்ஞானக் கழகத்திலிருந்து அழைப்பு வந்தது. 1914-ல் இவர் இங்கிலாந்து சென்று கழகத்தில் சொற்பொழிவாற்றினார். இது மூன்றும் முறையாக அங்கே இவர் செய்த விரிவுரையாகும். இம்முறை இவர் இங்கிலாந்தில் வேறு பல கழகங்களிலும் சர்வ கலாசாலைகளிலும் பிரசங்கங்களைச் செய்துவிட்டு அமெரிக்காவின் அழைப்புக்கிணங்கி அங்கேயும்

சென்றார். இவர் புகழ் உலகெங்கும் பரவியது. சென்றவிடமெல்லாம் உபசாரமும் வரவேற்பும் காத்திருந்தன.

பெற்ற கௌரவங்கள்

தொடக்கத்தில் ஜகதீசர் வங்காள மாகாணக் கல்லூரியில் பௌதிக நிபுணராக எடுத்துக் கொள்ளப் பெற்றார். அதன்பிறகு இவர் தம் சொந்த முயற்சிகளால் விஞ்ஞானத் துறைகளில் படிப்படியாக மூன்று விதமான ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். முதலாவது மின்சார அலைகளைப் பற்றியது. கம்பியில்லாமலே ஒலிகளை அனுப்புவது இதன் பயனாகக் கண்டறியப்பட்டது. மின்சாரத்துக்கு உயிருள்ளவற்றிலும் உயிரில்லனவற்றிலுமுள்ள எதிர்ப்பு வினைகளின் ஆராய்ச்சி இரண்டாவதாகும். தாவரங்களிலுள்ள திசுக்கள் (Tissues) பிராணிகளின் திசுக்களைப்போன்றனவே என்பது மூன்றாவது ஆராய்ச்சியாகும். இந்த மூன்று உண்மைகளில் முதல் உண்மையால் வந்த புகழில் மார்க்கோனிக்கே அதிகமான பங்கு கிடைத்திருக்கிறது. மற்ற இரண்டையும் இவரே முதலில் கண்டறிந்தார் என்ற புகழ் என்றும் அழியாது.

1895-ல் இவர் கட்டுரை விஞ்ஞானக் கழகப் பத்திரிகையில் வெளிவந்தபின் இவருக்கு மதிப்பு ஏற்பட்டது. மேற்படி கழகத்திலிருந்தும் சொற்ப நிதி கிடைத்தது. லண்டன் பல்கலைக் கழகத்தார் இவருக்குடாக்டர் பட்டம் வழங்கித் தம் அபிமானத்தை காட்டினார்கள். மூன்றுமுறை விஞ்ஞானக் கழகத்தில் பேசும் பேறு எவருக்கும் கிடைத்ததில்லை; அந்தப்

பெற்றை இவர் பெற்ருர். 1900-ல் பாரிஸ் நகரில் கூடிய விஞ்ஞான காங்கிரஸுக்கு இந்திய சர்க்கார் இவரைப் பிரதிநிதியாக அனுப்பி மேன்மைப் படுத்தினூர்கள் பிறகு கல்கத்தா சர்வகலாசாலையார் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கினூர்கள். உலகிலுள்ள பல சர்வகலாசாலைகள் விரிவுரை நிகழ்த்தும்படி இவரை அழைத்து உபசரித்திருக்கின்றன. இவர் 1913-ம் ஆண்டில் வயது முதிர்ச்சியினுல் அலுவலிலிருந்து ஓய்வு பெற்றிருத்தல்வேண்டும். ஆனுல் அரசியலார் பின்னும் இரண்டாண்டுகள் இவ்வேலைக்காலத்தை நீடித்ததுமல்லாமல், இவர் வேலையைவிட்டு நீங்கியபின் முழுச் சம்பளத்தையும் பென்ஷனுக வழங்கி வந்தார்கள். இவருக்கு இந்திய அரசியலார் 1903-ல் ஸி. ஐ. இ (C. I. E.) என்ற பட்டத்தையும், 1911-ல் ஸி. எஸ். ஐ (C. S. I.) என்றபட்டத்தையும், அளித்து மரியாதை செய்தனர். அலகாபாத் சர்வகலாசாலையார் 1928-ல் டாக்டர் பட்டம் அளித்தனர். 1928-ல் இவர் பிறந்த நாள் வெகுவிமரிசையாகக் கொண்டாடப் பெற்றபோது, உலகின் பல பாகங்களிலிருந்து பல மேதாவிகளின் பாராட்டுச் செய்திகள் வந்துகுவிந்தன. ஜகதிசரின் பெருமை அத்தகையதாகும்.

இவர் ஏற்படுத்தியவை

தம்முடைய ஆராய்ச்சிகளைப் பரப்பவும், மேலும் மேலும் தொடர்ந்து ஆராய்ந்து பல புதுமைகளைக் கண்டறியவும், இவர் கல்கத்தாவில் ஆராய்ச்சிக் கழகம் ஒன்றை 1917-ம் ஆண்டில் தம் பிறந்தநாளன்று திறந்து வைத்தார். இந்து அவர் பெயரால் வழங்கி வருகிறது. இதற்கு மிகுந்த பொருளை நிதியாக வைத்திருக்கிருர்.

வெளிநாடுகளிலிருந்தும் பலர் இங்கே வந்து பயின்று வருகிறார்கள்.

இதனைத் தவிர இங்கிலாந்தில் இரண்டிடங்களி லும், வங்காளத்திலேயே சிம்ஜேரியா என்னும் ஊரி லேயும், ஐரோப்பியரும் வந்து பயிலுவதற்கு வசதி யாக இமயமலைப் பிரதேசத்தில் டார்ஜிலிங் என்ற இடத்திலுமாக ஆராய்ச்சிக் கழகங்களைச் சிறிய அளவில் நிறுவியிருக்கிறார்.

இவர் 1937 நவம்பரில் காலமாகும் வரை நேரி லிருந்து இக்கழகங்களை நடத்தி வந்தார். இவரிடம் நேர்முகமாகப் பயிற்சிபெற்ற மாணவர்கள் இப் பொழுது இவைகளை நடத்தி வருகிறார்கள். இந்தியா வுக்கு உரிமை கிடைத்து விட்டது. இனிமேல் நம் நாட்டு விஞ்ஞானம் ஓங்குதல்கூடும். விஞ்ஞானத் துறையில் ஒளிபெற்று முன் வருவோருக்கு இனிமேல் தடைகள் இரா.

ஆகவே, நாட்டில் இக்கழகங்களின் வாயிலாகவும், பிற வாயிலாகவும் இந்திய விஞ்ஞானம் வளர்ச்சியுறு தல் கூடும். இது விஞ்ஞான யுகம். விஞ்ஞானத்தில் உயர்வுபெறும் நாடே, இந்த யுகத்தில் பலவித எதிர்ப் புக்களைச் சமாளித்து வளர்ச்சியுறவியலும். வருங்கால இந்திய விஞ்ஞானம் உலகில் அமைதியை நிலைநாட்டத் துணைநிற்பதாக!

5. ரவிவர்மா

கலைகள் பல. அவை அறுபத்து நான்கு என்று நூல்கள் கூறும். கலையை இந்த எண்ணிக்கையுள் கட்டுப்படுத்தல் இயலாது. மனத்திற்கு மகிழ்ச்சியளிப்பதும் நுண்ணுணர்வினுல் கைவரப் பெறத் தக்கதுமாகிய எதுவும் கலையே. மனத்துக்கு மகிழ்ச்சி புலன்களின் வழியே பெரிதும் புலனுகின்றது. இசையின்பம் செவிப்புலனுல் தோன்றுகின்றது. ஓவியம், சிற்பம் போன்றவை கட்புலனுல் அறிந்து இன்புறத் தக்கன வாகும். கலைஞனுக்கு அக்கலையை ஆக்குவதில் இன்பம்; அதனைப் புலன்களின் ஊடே நுகர்வதில் பிறருக்கு இன்பம். எனவே, கலையின் சிறப்பு ஆக்குவோன், நுகர்வோன் என்னும் இருதிறத்தாரையும் பொருத்தது. இந்தியா கலைகளுக்குப் பேர்போன நாடு. இதன் பழங் கலைகள் சிறப்புள்ளவை. இங்கே ஓவியக்கலை ஒன்றையே எடுத்துக்கொள்வோம். ஓவியம், சித்திரம் என்பன ஒரு பொருட்சொற்கள்.

ஓவியக்கலையும் ரவிவர்மாவும்

தமிழ் நாட்டில் உயர்ந்திருந்த சித்திரக்கலை ஆங்கில அரசியல் இங்கே வந்தபின் ஆதரிப்பாரின்றி மறைந்தது. சித்திரம் எழுதுவோர் வாழ்க்கைநிலை மாறிப் பெயர் தெரியாமல் மழுங்கினர். ஆங்கில அரசியல் அமைப்பு நேர்முகமாக நம்நாட்டு ஓவியத்துக்கு அழிவு தேட வில்லையென்ருலும் அரசாங்கத்தின் ஆதரவை இக்கலை இழந்தது. மேல் நாட்டு ஓவியம் இந்தியா முழுவதும் பரவியது.



ரவிவர்மா

புதிதாகக் கடல்தாண்டி வந்த ஓவியத்தால் நம் நாட்டு ஓவியம் கெடுவதை முதலில் உணர்ந்தவர் வங்க மக்கள். அவர்கள் ஓவியக்கலையில் புதிய இயக்கம் ஒன்றை எழுப்பிப் பழங்கால ஓவியத்தை உயிர்ப்பித்தலில் வெற்றிபெற்றனர்.

தென்னாட்டில் இவ்விடத்துக் கலையை உயிர்ப்பிக்க முயன்றவருள் ரவிவர்மா ஒருவர். இவர் பேர்பெற்ற ஓர் ஓவியர். தென்னாட்டில் 19-ம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்த ஓவியர் மணிகளுள் தலைசிறந்தவர். இவருடைய படங்களை, மன்னர் மாளிகைகளிலும் ஏழை மக்களின் குடிலிலும் காணலாம்.

ரவிவர்மாவின் வரலாறு

ரவிவர்மா திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சார்ந்தவர். அரச குடும்பத்தினர். அதனால் ராஜா ரவிவர்மா என்ற பெயர் படைத்தவர். இவர் கிள்ளிமனூர் என்ற இடத்தில் கி. பி. 1848-ல் பிறந்தார். இவர் தந்தையார் ராஜவர்மா என்பவர்.

ரவிவர்மா பிறந்த குடும்பத்தினர் அனைவரும் ஓவியப் புலமை வாய்ந்தவர். இவருடைய தந்தையார் தாய்மாமன் இருவரும் ஓவியத்தில் கைதேர்ந்தவர்கள். எனவே, ரவிவர்மா தந்தைவழி, தாய்வழி இரண்டிலு மாக இத்திறமையைப் பெற்றார் என்றல் மிகையாகாது. இவருடைய சகோதரர் **ராஜ ராஜவர்மா** என்பவரும் சகோதரி **மங்களாபாய்** என்பவரும் பல ஓவியங்களை வரைந்து புகழ்பெற்ற கலாமணிகள். ரவிவர்மாவின் வடிவத்தை இவர்கள் இருவரும் தனித்தனியே தீட்டியுள்ளபடங்கள் திருவாங்கூர் அரண்மனைக் கண்காட்சிச் சாலையில் இன்றும் உள்ளன.

ரவிவர்மா சிறுவயதிலேயே நல்லறிவு வாய்ந்தவராகத் திகழ்ந்தார். உற்றுப் பார்க்கும் வழக்கம் இவரிடை அமைந்திருந்தது. காலையிலும் மாலையிலும் வானத்தில் நிறங்கள் மாறிவருவதை நீண்டநேரம் தினமும் கவனித்து வந்தார். இயற்கையினிடத்து இவருக்கு ஆர்வம் மிகுந்திருந்தது. தென்னாட்டில் கோவில்களுக்கு யாத்திரை செய்து வந்த காலங்களில் அங்கேயுள்ள சிற்பங்களையும், ஓவியங்களையும் கூர்ந்து கவனித்து உடனிருந்த தம் உறவினரிடம் பல கேள்விகள் கேட்பாராம்.

உற்றுப்பார்க்கும் வழக்கத்தோடு சிந்தனை செய்யும் பயிற்சியும் இவருக்கு இளமையிலேயே அமைந்திருந்தது. இராமாயணம், பாரதம், சாகுந்தலம் முதலியவற்றிலுள்ள கதைகளை இவர் கேட்டு வருங்கால் தம் மனஉலகில் அவற்றின் பாத்திரங்களைப்பற்றிச் சிந்தித்து, உள்ளமாகிய தாளில் அழகமைய அவற்றை அமைப்பாராம். தந்தையார் ஓவியம் தீட்ட அமைத்திருக்கும் நிறக்குழம்புகளைக்கொண்டு, சின்னஞ் சிறு வயதில் இவர் தாம் விரும்பிய சித்திரங்களை வரைந்தாரென்றும், அவற்றுள் சில அழகாகவிருந்தன வென்றும் கூறுவர்.

ரவிவர்மா தொடக்கத்தில் தம் தாய்மாமனிடத்தில் ஓவிய வித்தையைப் பயின்றார். அதன் பின் சில மாதங்கள் திருவாங்கூர் வந்து தங்கியிருந்த ஓர் ஆங்கில ஓவியரிடம் ஆங்கில முறையைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. தென்னாட்டு ஓவியக்கலையை ஆங்கில முறையையொட்டி இவர் புதுப்பித்ததற்கு இப்பயிற்சி காரணமாயிற்று.

1873-ம் ஆண்டில் சென்னையில் கூடிய கலைகளின் பொருட்காட்சிக்குத் தம்முடைய சித்திரங்களில் ஒன்றை இவர் அனுப்பினார். நாயர் பெண்மணியின் ஓவியம் அது. அந்த ஓவியத்திற்கே கவர்னரின் தங்கப்பதக்கம் அவ்வாண்டில் வழங்கப்பெற்றது. பிறகு ஐரோப்பாவில் வியன்னா நகரில் ஒரு கண் காட்சிக்கு இவர் அனுப்பிய பல ஓவியங்களிலும் மேற்குறித்த ஓவியத்திற்கே சிறந்த பரிசளிக்கப்பட்டது.

இவருடைய ஓவியங்கள்

இவர் ஓவியங்களில் பழமையும், புதுமையும் கலந்து தோன்றும். பழமையானது புதுமையினால் சிறப்புற்றும், புதுமையிலிருந்த குறைபாடுகள் பழமையினால் நீங்கியும் இவருடைய சித்திரங்கள் விளங்குகின்றன. இவர் எழுதிய படங்கள் பல அச்சாகி வந்துள்ளன. இவர் பெயர் அவைகளில் பொறிக்கப் பட்டிருக்கும்.

பழங்காலத்தார் சமயச் சார்பாகவே ஓவியம் தீட்டினார் அல்லவா? ரவிவர்மா பழமையோடு நிற்க வில்லை. புதிய புதிய படங்களையும் உண்டு பண்ணினார். சகுந்தலை, முனிவர் ஆச்சிரமத்தின் அருகில் தன் தோழி களுடன் இருந்துகொண்டு தன் காதலனுக்குக் கடிதம் எழுதும் சித்திரம் பலரால் பாராட்டப்படுவதொன் ருகும். 'தமயந்தியும் அன்னமும்' என்பதும் அத்தகை யதே. இந்தப்படங்களில் கலைத்திறனைப் பற்றித் தனித் தனியாக இரண்டு புத்தகங்கள் ஒரு ரசிகரால் ஆங்கிலத் தில் வெளியிடப் பெற்றுள்ளன. ரவிவர்மாவின் பெருமையை விளக்க இவை உதவுகின்றன. இப் புத்த கங்களை மேல்நாட்டுக் கவிஞரும் விரும்பிப் படித்து

வருகிறார்கள். 'விராடன் சபை,' 'ருக்மாங்கதனும் மோகினியும்' முதலியனவும் இவர் வரைந்தனவே. இவற்றைத் தவிர, சில அரசர்களையும் அவர் சமஸ்தானத்தில் இருந்த ரெஸிடெண்டுகள், திவான்கள் முதலியவர்களையுங்கூட ஓவியத்தில் வரைந்திருக்கிறார்.

பல சுதேச சமஸ்தானங்களிலிருந்து இவருக்கு அழைப்பு வந்தது. அங்கங்கே சென்று தம் ஓவியத் திறமையை இவர் காட்டினார். கி. பி. 1885–87க்கு இடையில் இவர் மைசூரில் தங்கியிருந்து அரண்மனையில் உத்தேசமாகப் பதினான்கு படங்களை வரைந்துள்ளார். இவையாவும் இதிகாசக் கதைகளைப் பற்றின.

ரவிவர்மா வரைந்த சித்திரங்கள் பலவற்றுக்கு ஆதாரமாகவுள்ள கவிகள் வடமொழி நூல்களிற்காணப் படுகின்றன. அவற்றை அறிந்துகொண்டே இவர் தம் சித்திரங்களை அமைத்தாரென்று அறிஞர் கூறுவர். மனத்துக்கு மகிழ்ச்சி ஊட்டுதலில் ஓவியமும் காவியமும் ஒன்றே. ஒன்று கண்ணுக்குப் புதுமையை நல்குகின்றது; பிறிதொன்று செவிக்கு விருந்தாகின்றது. இதுவே இரண்டினிடையுள்ள வேற்றுமை. ரவிவர்மாவின் படங்கள் பல, இக்கூற்றுக்கு எடுத்துக் காட்டாக வுள்ளன.

ஒரு விசித்திர வரலாறு

ரவிவர்மாவைப் பற்றி விசித்திரமான ஒரு வரலாறு வழங்குவதைச் சிலர் கேட்டிருத்தல் கூடும். ஒரு சமயம் இவர் தாம் அருமையாக வளர்த்த ஒரு நாயின் உருவை ஓவியத்தில் அமைக்க முயன்றாராம். படம் முடிந்தது. இவர் படமெழுத நினைத்த சமயம் நாயின் வாயில் நுரை

வந்து கொண்டிருந்தது. அந்த மாதிரியை மட்டும் நன்றாக அமைக்க இவரால் இயலவில்லை. பலமுறை வாயின் பாகத்தை அழித்தழித்து வர்ணம் தீட்ட முயன்றார். வெற்றி கிடைக்கவில்லை. அலுப்பினால் தூரிகையை அப்படத்தின் மீது வீசி யெறிந்துவிட்டு இவர் சாய்வு நாற்காலியில் சாய்ந்தார். சில நிமிஷங்கள் கடந்த பின் இவர் தொடங்கியதை எவ்விதமேனும் முடித்தல் வேண்டுமென்ற உறுதிகொண்டு எழுந்து தூரிகையை எடுத்தார். எடுத்ததும் மறுபடியும் அழித்தெழுத நாயின் வாயை நோக்கும் போது நுரைவடிவம் சரிவர அங்கே அமைந்திருத்தலைக் கண்டாராம். தாம் அரிதில் முயன்ற போது அமையாததொன்று தம் முயற்சி இன்றித் தூரிகையை வெறுப்போடு விசியெறிந்த சமயம் அமைந்தது தெய்வ அருளாலேயே என்றெண்ணி இவர் பெரிதும் மகிழ்ந்தாராம்.

பாரதியாரின் பாராட்டு

ராஜா ரவிவிர்மா 1906-ம் ஆண்டில் இவ்வுலகை நீத்தார். அவர் பிரிவை எண்ணிக் கலை உலகம் முழுவதும் துன்பத்துள் ஆழ்ந்தது. நம் தேசியகவி பாரதியார் ரவிவர்மாவிடம் அளவற்ற அன்பு பூண்டவர். ஒரு துறையில் கலையறிவு நிரம்பப்பெற்றவருக்கு மறு துறையிலுள்ள கலையின் ஒளி நன்றாகப் புலனாகுமன்றோ! ரவிவர்மா இறந்த ஞான்று பாரதியார் பாடியபாடல்களில் மூன்றை இங்கே காண்க. அவை நம் ஓவியர் மணியின் பெருமையை நன்கு புலப்படுத்துகின்றன.

"மலரினில் நீல வானில்
மாதரார் முகத்தில் எல்லாம்
இலகிய அழகை ஈசன்
இயற்றினன் கீர்த்தி இந்த
உலகினில் எங்கும் வீசி
ஓங்கிய இரவி வர்மன்
அலகிலா அறிவுக் கண்ணால்
அனைத்தையும் நுகரு மாறே"

ஈசன் மலர்களிலும், நீல வானிலும், மகளிர் முகத்திலும் அழகை இயற்றியது, அவ்வழகை ரவிவர்மா பருகு வதற்கென்பது இக்கவியின் பொருள். ரவிவர்மாவின் புகழ் உலக முழுவதும் வீசுதல் இதில் காட்டப் பெற்றுள்ளது.

"மன்னர்மா ளிகையில் ஏழை
மக்களின் குடிலில் எல்லாம்
உன்னரும் தேசு வீசி
உளத்தினைக் களிக்கச் செய்வான்
நன்னர் ஓவியங்கள் தீட்டி
நல்கிய பெருமான் இந்நாள்
பொன்னணி உலகு சென்றான்
புவிப்புகழ் போதும் என்றான்"

என்ற பாடலில் பாரதியார் கூறுவதை நோக்குக. ரவிவர்மாவின் ஓவியங்கள் செல்வர், வறியர் யாவரா லும் பாராட்டப்படுவது இக்கவியிற் கூறப்பட்டது.

மண்ணுலகில் இனி ஈட்டத் தகுந்த புகழ் இல்லை யென்று கருதி அவர் விண்ணடைந்ததாக நம் புலவர் சாற்றுதல் காண்க.

"அரம்பையூர் வசிபோல் உள்ள
அமரமெல் லியலார் செவ்வி
நிறம்பட வகுத்த எம்மான்
செய்தொழில் ஒப்பு நோக்க
விரும்பியே கொல்லாம் என்று
விண்ணுல கடைந்து விட்டாய்
அரம்பையர் நின்கைச் செய்கைக்(கு)
அறிவதங் கறிவை திண்ணம்,"

தம் மனக்கண்ணால் வரைந்த அரம்பை, ஊர்வசி முதலாயினாரின் உருவம் நன்கு அமைந்தவைதாமா வென்று ஒப்புநோக்கும்பொருட்டே ரவிவர்மா விண்ணுலகம் சென்றாரென்றும், இவருடைய படங்கள் அம்மாதரின் இயல்பான அழகினும் மேம்பட்ட அழகுடையனவென்றும் இப்பாட்டிற் பாரதியார் புலப்படுத்தியுள்ளார். ரவிவர்மாவின் கலையை ரசிகர்கள் ஒருநாளும் மறக்க முடியாது.

6. ரமாபாய் சரசுவதி

உலகில் எந்த நாட்டின் சரித்திரத்தையும் நோக்கு வோருக்கு, வீரர்களோ, கல்விமான்களோ, சீர்திருத்தக் காரர்களோ ஆண் சமூகத்திலே மிகுதியாகத் தோன்றி யுள்ளமை புலனாகும். பெண் பாலாரிலும் இத்தகை யோர் தோன்றுவதுண்டு. பழஞ் சரித்திரங்களில் சில பெண்களின் அருஞ்செயல்கள் காணப்பெறுகின்றன அல்லவா! மகளிரின் எண்ணிக்கை இத்துறைகளில் குறைவாக உள்ளதாயினென்? விண்மீன்களிடையில் மிளிர்வது ஒரு திங்கள்தானே! திங்களின் ஒளியினு லன்றோ உலகம் இன்புறுகிறது.

ஷேக்ஸ்பியர் தாம் யாத்த ஆங்கில நாடகங்களில் பெண்பாலாரையே உயரிய மேதாவிகளாகக் காட்டி யுள்ளாரென்று அறிஞர் கூறுவர். இந்து காவியங் களிலும் புராணங்களிலுங்கூட பெண்மணிகளே ஆட வரைவிடப் பல கூறுகளிற் சிறந்து விளங்குகிறார்கள். பண்டைச் சங்க நூல்களிலிருந்து தமிழ்நாட்டு மகளிரின் ஆற்றலையும் நாம் அறிகிறோம்.

ரமாபாய்

இந்தியாவில் சென்ற நூற்றாண்டில் தோன்றிய பெண்பாலாரில் உலகமறிந்து பாராட்டத்தக்கவர் பலர். அன்னாருள் பண்டிதை ரமாபாய் என்பாரும் ஒருவர். இந்திய மகளிரின் பெருமையை ரமாபாய் உலகுக் குணர்த்தி யுள்ளார். வெளிநாடுகளில் பெண்பாலார் உள்ளங்களில் இந்தியப் பெண்மணிகள் இன்று சிறந்த



ரமாபாய் சரசுவதி

இடம் பெற்றிருப்பதற்குக் காரணமாகவுள்ளவர்களிற் காலத்தால் முதன்மையாக எண்ணப்பட்டவர் ரமாபாயே.

ரமாபாய் வைதிகப்பற்று மிகுதியாகவுள்ளவ ரென்று கருதப்படும் மறையவர் மரபினர். நவீன சீர் திருத்தங்களுக்கு இப்பற்று ஒரு தடையாக உள்ள தாகும். அங்ஙனமிருந்தும் அவர் சீரிய சீர்திருத்த வாதியாக விளங்கினர். "பெண்கள் வடமொழியைப் பயிலலாகாது. வேதங்கள் பெண்பாலாருக்கு மறைந்து கிடக்கின்றன. வட மொழியின் அமைப்பு, ஆண் பாலாரே அதனைக் கற்றுத் தேர்ந்து பேரறிஞராகத் தக்கவாறு அமைந்துள்ளது" என்று சிலர் கூறுவர். ஆனல் ரமாபாய் அவர்களோ அம்மொழியை நன்முகக் கற்று அப்புலமையின் காரணமாகப் 'பண்டிதை', 'சரசுவதி' என்ற பட்டங்களை வடமொழி அறிஞர் கூட்டத்தினிடமிருந்து பெற்றுள்ளார். கல்வி அமைப்பு வெறும் ஏட்டுக் கல்விக்குமட்டும் துணை செய்வதாக இருத்தல் ஒல்லாது. கல்வி ஒருவரது அறிவுக்கும், மனதுக்கும், உடலுக்கும் பயிற்சி யளிப்பதாக அமைய வேண்டுமென்றுகொண்டு இக்காலத்தவர் அதற்கேற்ப நல்ல திட்டங்களை நம் நாட்டில் அமைத்து வருகிருர்கள். ஆனல் ரமாபாய் அவர்களோ இதனை முப்பது நாற்ப தாண்டுகளுக்கு முன்னரே நிறுவி, அத்தகைய கல்வி முறை, கற்பாரின் வாழ்க்கைக்கு ஏற்புடையதாக இருப் பதைக் காட்டியிருக்கிருர். கால வெள்ளத்தில் அவர் மிதந்து செல்லவில்லை. காலரீதியை அவர் மாற்றி யமைத்தார். இக்காரணங்களால் அவர் இந்தியமணி களில் ஒருவராவர். அவரது வரலாறு இந்தியப் பெண் ணுலகுக்கு ஓர் அணியாக மிளிர்கின்றது.

ரமாவின் தந்தை

ரமாபாயின் தந்தையார் அனந்த சாஸ்திரிகள் மங்களூர் அந்தணர் வகுப்பினர். அவர் தம் தாய்மொழி மகாராட்டிரம். அவர் வடமொழியில் நிரம்பிய புலமை பெற்றிருந்தார். புராணப் பிரசங்கமே அவரது ஜீவனோபாயம். வைதிக சிரத்தையுள்ள ஊர்கள் தோறும் சென்று சில மாதங்கள் தங்கியிருந்து, வடமொழிப் புராணத்தைத் தம் இனிய குரலில் வாசித்து, அதற்கு விரிவான உரையைக் கேட்போர் வியந்து மேலும் விரும்புமாறு போதித்து, அந்தந்த ஊரார் தரும் உபாயமான பொருள்களால் வயிறுவளர்த்து வந்தார். குடும்பம் பெரிது; வருவாய் குடும்ப வாழ்க்கைக்குப் பற்ருது. எனினும் போதும் என்ற உள்ளம் அவர்பால் இலங்கியதால் அவருக்கு வாழ்விற் கசப் பேற்படவில்லை. பெண் கல்வியைப்பற்றி எவரும் சிறந்த நாட்டம் கொள்ளாத அக்காலத்தில் அவர், பெண்களும் ஆண்மக்களைப் போலக் கற்கவேண்டுமென்று கருதினர். தம் மக்களுக்கு இல்லத்திலேயே வடமொழிக் கல்வி புகட்டி வந்தார். ரமாபாய்க்குக் கல்வி விரைவில் பிடிபட்டது. தந்தையாரால் புதல்வியார் மிகுந்த புலமை பெற்றுர்.

தந்தையின் மரணமும் ரமாவின் தவிப்பும்

உலகில் எவருக்கும் வாழ்க்கைநிலை ஒரு படித்தாக அமைவதில்லை. அமைதி, புயல்; பகல், இரவு; நிழல், வெயில்—இந்தவகை இயற்கையிலும் மாறுபாடுகள் இருக்க மனித வாழ்க்கையைப்பற்றிக் கேட்பானேன்! அனந்த சாஸ்திரிகளை முதுமை அணுகியது. புராணப்

பிரசங்கம் செய்ய அவரால் இயலாமல் போயிற்று. காலமும் பஞ்சத்தின் ஆட்சிக்குட்பட்டது.

இவரிருந்த பாகத்தில் அப்பஞ்சத்தின் கொடுமை அதிகமாயிற்று. பஞ்சத்துக்கு அனந்த சாஸ்திரிகள் முதல் பலியானார். அவரை ஒட்டி அவருடைய மூத்த புதல்வியும் மனைவியும் காலக்கோளுக்காளாயினர். அந்தப் பஞ்சத்துக்கு எஞ்சிப் பிழைத்தவர் அக்குடும்பத்தில் இருவரே. ஒருவர் பதினெட்டுப் பிராயத்தினராக இருந்த ரமாபாய்; மற்றொருவர் ரமாபாயின் தமையனார்.

நாழியரிசி மக்களைப் படுத்தும் பாட்டைப் புலவர் கூறி நாம் அறியவேண்டியதில்லை. அனுபவத்திற் காண்கின்றோம். ரமாபாயும் அவருடைய சகோதரரும் ஊர் ஊராக அலைந்து திரிந்தார்கள். அவர்களுக்கு உணவு கண்டவிடம் சொர்க்கலோகம்; கூழ் கண்டவிடம் கைலாசம்; புண்ணிய தல யாத்திரை செய்து வந்தவர்களுக்கு அக் காலத்தில் உணவுப் பஞ்சம் அதிகமாகத் தோன்றவில்லை. தலங்களுள்ள வழியெங்கும் அன்ன சத்திரங்கள், அறச்செயலின் ஆஸ்தையுள்ள சில செல்வர்களின் உதவி இவை இரண்டும் சொற்பமாக வயிறுவளர்ப்பதற்கு அக்காலத்தில் போதியனவாக இருந்தன.

நாடோடி வாழ்க்கை

ரமாபாயும் அவர் சகோதரரும் வட இந்தியா முழுவதும் கால்நடையாக நடந்து சென்றார்கள். அங்கே நிகழ்ந்தவற்றைக் கண்டார்கள். ஆனந்தங் கொண்டார்கள். பணக்காரனுக்குக் கவலை; பரதேசிக்குக் கவலையேது! பரதேசி வாழ்க்கை ரமாபாய்க்குப்

பெரும் வாய்ப்பாக அமைந்தது. அவர் தம் கலைக்கண்களுக்கு இந்து சமூகத்தில் இருந்து வந்த குறைபாடுகள் எளிதிற் புலனாயின. ஆடவர் பலர் வேடக்காரரே ஒழிய அவர்களுக்கு மகளிர்பால் நாய எண்ணமில்லை யென்பதை அறிந்துகொண்டார். மதத்தின் பெயராலும், சாதியின் பெயராலும் ஆட்சி பூண்ட கொடுமை எளியார்களை அங்கங்கே வாட்டியதை அவர் கண்டார். பெண்பாலார் ஆண்பாலாரைவிட, அதிகமாக அல்லலுறுவதை அறிந்துகொண்டார். அவர்களுக்கென்று ஒரு நிலையத்தை அமைக்கவேண்டுமென்ற எண்ணம் ரமாபாய்க்கு இந்த யாத்திரைக் காலத்தில் உதயமாயிற்று. ஆயினும் அதனைப்பற்றி அவர் உறுதியாக அந்நிலையில் சிந்திக்கவில்லை. எளிய நிலையில் எவருக்கும் அங்ஙனம் சிந்திக்க இடமேது?

இரண்டு ஆண்டுகள் நாடெங்கும் சுற்றி அலைந்து இறுதியில் உடன்பிறந்தோர் இருவரும் வங்காளத்தை அடைந்தனர். கல்கத்தாவில் இவர்கள் சிறிதுகாலம் தங்கலானார்கள்.

பட்டம் பெறுதல்

கல்கத்தாவில் ரமாபாய் அங்கங்கே வடமொழியில் பல சொற்பொழிவுகளை ஆற்றினார். இவர் பெயர் செய்தித் தாள்களின் வாயிலாகப் பரவியது. அறிஞர் பலர் இவரைக்காண வந்தனர். இவருடைய புலமையை அவர்கள் விரைவிற்கண்டு கொண்டார்கள். நிரம்பிய புலமை வாய்ந்தோருக்குச் '**சரசுவதி**' என்ற பட்டம் வழங்குவது நம்மவர் வழக்கம். ரமாபாய்க்கு வங்க அறிஞர் அப்பட்டத்தை வழங்கினார். **பண்டிதை ரமாபாய் சரசுவதி** என்று அன்றுமுதல் இவர் அழைக்கப்பெற்றார்-

மண வாழ்க்கை

இப்பொழுது ரமாபாய்க்கு வயது இருபத்தொன்று. ரமா மணஞ் செய்துகொள்ள வேண்டியவர் ஆனார். வங்காளத்திலேயே வழக்கறிஞராக இருந்த அந்தணரல்லாத ஓர் இளைஞரை மணந்து கொண்டார்.

மணமான ஓராண்டில் ரமாவுக்கு ஒரு பெண் மகவு பிறந்தது. குழந்தை பிறந்த சில தினங்களில் கணவர் காலமாய்விட்டார். ரமா தன்னந்தனியானார்.

இதுகாறும் இவர் தமக்கென வாழ்ந்தவர். இதன் பின் வருங்கால முழுமையும் இவர் பிறர்க்கென வாழ்வதையே நோன்பாகக் கொண்டொழுகலானார். ஆகவே, இவருடைய வாழ்க்கையின் ஒருபகுதி இங்கே முடிவு பெறுகின்றது.

ரமாபாயின் சேவை

கணவர் இறந்தபின் ரமாபாய் தம் குழந்தையுடன் கணவற்கிருந்த சொற்ப உடைமையோடு பம்பாய் வந்து சேர்ந்தார். பற்றுக்கோடற்ற பெண்களுக்கு ஓர் இல்லத்தை அமைக்க முயன்றார். இந்து மகளிர் ஒருவர் அந்நாளில் வெளிப்போந்து பொதுநலத் தொண்டாற்றியதில்லை; சமூகக் கட்டுப்பாடு இவர்கள் வெளியே வர இடந்தரவில்லை. ஆகவே, ரமா இல்லம் நிறுவும்படி விழைந்தபோது மகாராஷ்டிரத்திலிருந்த செல்வரோ அறிஞரோ அவர் முயற்சிக்கு ஆதரவளிக்கவில்லை. ஒரு சிலர் அம்முயற்சியைத் தகைக்கலாயினர். ரமாபாய் பெண்பாலாரைக் கூட்டிப் பல சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். ஆரிய மகிளா சமாஜம்

என்னும் கழகத்தை நிறுவினார். இவர் செய்து வந்த தொண்டினைப் பாராட்டுவோர் பலராயினர். பெண்களின் முன்னேற்றத்துக்கு ரமா தம் விரிவுரைகளில் அவசியமென்று கூறி வந்த செய்திகளைப் பலர் சிந்திக்கலாயினர். ரமாபாயின் சேவையில் மிகுதியாக ஆர்வங் காட்டியவர் கிறிஸ்துவர்களே.

இங்கிலாந்தில் பயிற்சி

ரமாவுக்கு அதுகாறும் ஆங்கிலம் தெரியாது. பாதிரியார் ஒருவரிடம் இவர் அம்மொழியைக் கற்றுக் கொள்ளலானார். வயது வந்தவர், ஒரு மொழியை விரைவில் கற்கவேண்டுமானால் அவர் அம்மொழி வழங்கும் நாட்டிற்குச் சென்று சிறிது காலம் வசித்தல் நன்று என்பதை ஒருவர் வாயிலாக ரமா உணர்ந்தார். இங்கிலாந்து சென்றார். கிறிஸ்துவச் சங்கத்தார் சார்பில் நிறுவப்பெற்ற ஒரு இல்லத்தில் இருந்து வந்தார். அங்கே சிலருக்கு இவர் ஆரிய மொழியைப் புகட்டினார். அதனால் வரும் ஊதியத்தைக்கொண்டு காலங்கழித்து வந்தார். ஆங்கில மொழியையும் அம்மொழியின் வாயிலாக நிலநூல், சரித்திரம், கணக்கு, உடல்நூல் முதலியவற்றையும் பயின்றார்.

மதமாற்றம்

ரமாபாயின் மனம் இங்கிலாந்து வாசத்தின்போது விவிலிய நூலில் அதிகமாக ஈடுபட்டது. கிறிஸ்துவரின் தொழுகைமுறை முதலியன ரமாபாயின் மனதைக் கவர்ந்தன. சில நாளில் இவர் கிறிஸ்துவராகிவிட்டார். இவர் கிறிஸ்துவரானமைக்குப் பலவேறு காரணங்கள் சொல்லப்படுகின்றன. அவை எங்ஙனமாயினும் ஆக;

இவருக்கு அம்மதத்தினிடம் பிற்காலத்தில் மிகுதியான ஈடுபாடு அமைந்திருந்தது என்பதை எவரும் மறுக்க இயலாது.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் அறிந்தவை

ஆங்கிலப் படிப்பை முடித்துக் கொண்டு ரமாபாய் அமெரிக்கா சென்றார். அங்கே கல்வி முறையைக் கூர்ந்து கவனிக்கலானார். ஏட்டுக் கல்வியோடு அந் நாட்டார் தொழிற் கல்வியையும் இணைத்துக் கல்விப் பயிற்சியை வாழ்வுக்குரிய சிறந்த பயிற்சியாக அமைத் திருக்கும் ஆற்றைக் கண்டு வியந்தார். தாம் அங்கே தங்கி தொழிற் கல்வியில் சிலவற்றைப் பயின்றார். பிற்காலத்தில் இந்தியாவில் இவர் ஓர் இல்லம் அமைத்து அதனைச் செவ்வனே நடத்துவதற்கு அமெரிக்காவில் ரமாபாய் பெற்ற அனுபவம் பெரிதும் துணைபுரிந்தது.

இந்தியாவைப் பற்றிய பிரசாரம்

இந்திய மாதர் படும் அவதிகளை அமெரிக்காவில் ரமாபாய் விரிவுரைகளின் மூலம் பரப்பினார். உரிமை இழந்த, திக்கற்ற இந்தியமாதருக்குப் புரியும் புனிதத் தொண்டு எத்தகைய புண்ணியமாகுமென்று எல்லோர் மனத்தும் படும்படி பேசினார்; செய்தித்தாள்களில் எழு தினார். இத்தகைய சேவையை உண்மைக் கிறிஸ்துவரே மேற்கொள்ளத் தக்கவர் என்று பிரசாரம் செய்தார்.

இல்லம் அமைத்த வரலாறு

இப்பெண்மணியாரின் முயற்சிகள் வீணாகவில்லை. கனிந்த உள்ளமுள்ள அமெரிக்கர் சிலர் ஒன்றுகூடி **ரமாபாய் சங்கம்** என்ற கழகத்தை நிறுவினார்கள். ரமா பாய் இந்தியாவில் செய்துவரும் சேவைக்கு ஆண்டு

தோறும் தம்மால் இயன்ற பொருளுதவி செய்துவரப் பலர் கையொப்பமிடுவதன் வாயிலாக வாக்களித்தார்கள். பெரும் பொருளோடு ரமா இந்தியா திரும்பினார்.

ரமாபாய் பம்பாயில் பெண்களுக்கென்று ஒரு பள்ளியை நிறுவினார். அங்கே அப்பள்ளிக்குப் போதிய ஆதரவு கிடைக்கவில்லை. இந்துக்கள் பல இன்னல்களை இழைத்தனர். ஆகவே, ரமா தம் சேவைக்குப் பூனா நகரத்தை ஏற்ற இடமாகக்கருதி அங்கே சென்றார். **சாரதா சதனம்** என்ற பள்ளியை அங்கே நிறுவினார். பூனாவிலும் இவருக்குத் தடைகள் பல குறுக்கிட்டன.

பூனாவுக் கருகில் 20 மைல் தூரத்தில் நிலவளம் நீர்வளம் குடிவளங்கள் எதுவும் இல்லாத ஓரிடம் ரமாபாயின் மனத்துக்கு உகந்ததாகத்தோன்றியது. அதனை அவர் விலைக்கு வாங்கினார். கிணறுகள் தோண்டி நீர்வசதியை அமைத்தார். நிழல்தரு மரங்களையும், கனிமரங்களையும், சிங்காரத் தோட்டங்களையும் புதியனவாகத் தோற்றுவித்தார். சிறு குடில்களை அமைத்துப் புதிய ஊர் ஒன்றை அங்கே உண்டு பண்ணினார். 'அபலை' என்று கூறப்படும் ஒரு பெண்பாலாரிடம் அமைந்திருந்த ஆற்றல்தான் என்னே! அவருடைய அரிய அறிவின் திறத்தை என்னவென்பது! அந்த இடத்துக்கு அவர் 'முக்தி' என்ற பெயரைத்தந்தார். துப்புரவில்லாதவர்க்கும், கணவரை இழந்தவர்க்கும், சமூகக் கொடுமைகள் காரணமாக ஒதுக்கப்பட்டவர்க்குய் நிழல் தரக்கூடிய நிலையமாக 'முக்தி' இலங்கியது.

ஏற்பாடுகள்

ரமாபாயின் அடுத்த வேலை ஆள் திரட்டுதல் இடுக்கண்பட்டுழலும் இல்லங்களில் இருந்தோ சமூகத்தாரின் கட்டுகளிலிருந்தோ பெண்கள் தாமாக வெளிக் கிளம்புவது அரிதென்றும் அதற்குப் போதிய அளவில் பிரசாரமும் உதவியும் இன்றியமையாதனவென்றும் அவர் கண்டார். அவற்றுக்கு ஆவனவற்றைச் செய்து வந்தார்.

ரமாபாய் எவரையும் கிறிஸ்துவராக்க முயலவில்லை. கிறிஸ்துவரின் எண்ணிக்கையை இந்தியாவில் பெருக்குவது அவரது எண்ணமும் அன்று. ஏழைகளின் சேவைக்குக் கிறிஸ்துவ உலகம் பண உதவி செய்ய முன்வந்து நிற்பதை அறிந்து ரமாபாய் அவ்வுதவியை நல்ல துறையிற் பயன் படுத்தினர்; அவ்வளவே. ஆனால் ரமாபாய்க்குக் கிறிஸ்துவ மார்க்கத்திலிருந்த அன்புக்கோ ஆர்வத்துக்கோ எல்லைகோல இயலாது. 'நான் எவரையும் கிறிஸ்துவராகும்படி கட்டாயப்படுத்தினதில்லை; கட்டாயப்படுத்துவதும் என் நோக்கமன்று' என்று அவர் தம் மொழிகளாலேயே கூறியிருக்கிறார். முக்தியிற் புகுந்த பெண்கள் பலர் தாமாகவே கிறிஸ்துவ மார்க்கத்தை விரும்பி அதிற் சேர்ந்தனர். பலர் அதில் பயிற்சி பெற்று இந்துக்களாகவே வெளியேறினர்.

சிறுமியர்க்குக் கல்வி, கற்கும் பிராயம் கடந்த பெண்களுக்குப் பிழைப்புக்கேற்ற தொழில், ஒன்றுக்கும் உதவாதார்க்கு உணவும் உறை விடமும், திக்கற்ற குழந்தைகளுக்கு விடுதி, ஒழுக்கந்தவறிய பெண்களுக்கு அவர்கள் நல்வழிப்பட்டுத் தம்பிற்கால வாழ்க்கையைச்

செப்பஞ் செய்து கொள்ள வசதிகள் இவ்வளவும் முக்தியில் இருந்தன. சலவைச்சாலை, நூல் நூற்றல், சாயம் ஏற்றல், நெசவு, தையல் வேலை, அச்சுச்சாலை, பாற்பண்ணை, காய்கறி, பழத்தோட்டவேலை இவ்வளவும் அங்கே ஏற்படுத்தப்பட்டன.

ரமா பல புத்தகங்களை எழுதினார். சில பத்திரிகைகளை வெளியிட்டார். முக்தியை நிலையான ஸ்தாபிதமாக்கும் பொருட்டு அரும்பாடுபட்டு வந்தார். அவருக்குக் கிடைத்து வந்த பொருளுதவி எல்லாம் வெளி நாட்டிலிருந்தேயாகும். இடையில் பொருள் முட்டுப்பாடும் ஏற்பட்டது. அச்சமயம் அவர் அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா முதலிய இடங்களுக்குச் சென்று பெரும் பொருளைத் திரட்டி வந்தார்.

இறுதி நாட்கள்

ரமாவின் இறுதி நாட்கள் அவருக்கு மகிழ்ச்சி தருவனவாக அமையவில்லை. அவருக்கு ஒரே பெண் குழந்தை இருந்ததாக முன்பு சொன்னோம். அக்குழந்தை மனோரமா என்ற பெயரினது. இங்கிலாந்தில் மனோரமா உயர்ந்த கல்வியைக் கற்றுத்தேர்ந்து முக்திக்கு வந்து சேர்ந்தாள். தாயாரிடம் சேவைக்கு வேண்டிய பயிற்சியைப்பெற்று வந்தாள். பிற்காலத்தில் ரமாபாய்க்கு மிகவும் உதவியாக இருக்க வேண்டியவள் அவளே. அத்தகையவள் திடீரென்று இறந்துபட்டாள். ரமாபாய்க்கு இதனால் ஏற்பட்ட அதிர்ச்சி அவரை நோய் வாய்ப்படச் செய்தது. ஓராண்டில் அவரைக் காலன் வாய்ப்படவும் செய்தது. ரமாபாய் தாம் இறந்துவிடப்

போவதை இரண்டொரு மாதங்களுக்கு முன்பேஅறிந்து கொண்டு, தமக்குப்பின் ஏற்பாடுகள் எல்லாம் முக்தியில் எங்ஙனம் நடைபெற வேண்டும் என்பதை நேரிய முறையில் தீர்மானித்து வைத்தார்.

இன்று 'முக்தி' நிலைகொண்ட பெரிய ஸ்தாபனமாக விளங்குகின்றது. ஓர் இந்தியப் பெண்மணியின் புகழை அது உலகிற்கு விளக்கிக் கொண்டு திகழ்கின்றது.


7. ஜே. என். டாட்டா

உலக முழுவதும் கைத்தொழில் தொன்றுதொட்டுக் கையினுலேயே இல்லங்களில் செய்யப் பெற்றுவந்தது. தொழிற் புரட்சி முதன் முதலில் மேல்நாடுகளில் தோன்றியது. இத்தொழிற் புரட்சிக்குக் காரணமாக இருந்தவை பொறிகள். கி. பி. 18-ம் நூற்றுண்டே பொறியுகத்தின் தொடக்கமாகும். பொருள்களை எந்திரங்களில் குறைந்த உழைப்பினுல் சிறிய கால அளவில் பெருவாரியாகக் கையினுற் செய்யப்படுவனவற்றைக் காட்டிலும் கண்கவரத்தக்கனவாகச் செய்யும் முறைத் தொடக்கமே பொறியுகத்தின் தொடக்க மென்பது. பொருள்கள் கையினுற் செய்யப்படும் முறை மாறி எந்திரங்களால் செய்யத் தொடங்கியதனையே நாம் தொழிற்புரட்சி (Industrial Revolution) என்கிரேம்.

ஆலைத்தொழில் தோன்றியபின் குடிசைகளிற் பொருள்கள் செய்யப்படும் முறை 'சாலைத் தொழில்' என்று வழங்கப்பட்டது. இக்காலத்தில் கைத்தொழில் என்ற சொல், வேற்றுமையின்றி ஆலைத் தொழில், சாலைத்தொழில் இரண்டிற்கும் வழங்குகின்றது.

டாட்டாவும் தொழிற் வளர்ச்சியும்

எந்திரத் தொழிலுக்கு இந்தியாவில் முதன் முதலில் விதை யூன்றியவர் **டாட்டா** என்பவர். அன்னுர் தொழில் விளைவையும் தம் வாழுளிற் கண்டார். அதனை இந்தியாவில் விஞ்ஞான முறையில் நம் நாட்டின் பொருள்களைக்கொண்டே வளர்த்து ஓங்கச்செய்யச் சில திட்டங்களை நிரந்தரமாக அமைத்துச் சென்றுர். அவர் பரு



ஜே. என். டாட்டா

உடல் என்றோ மறைந்தது: அவர் அமைத்த திட்டங்கள் வளர்பிறைபோல் பெருகி அவருக்கு என்றும் அழியாப் புகழை இந்தியாவில் மட்டுமின்றி உலக முழுவதும் நிலைபெறச் செய்திருக்கின்றன. உலகம் புகழும் இந்திய மணிகளுள் டாட்டாவும் ஒருவர் என்பது சொல்லாமல் விளங்கும்.

இளமைப் பயிற்சி

ஜாம்ஷட்ஜி நஸர்வாஞ்சி **டாட்டா** என்பது இவர் முழுப்பெயராகும். இவர் பரோடா சமஸ்தானத்திலுள்ள நல்சாரி என்ற ஊரில் 1839-ம் ஆண்டிற் பிறந்தார்: பார்ஸி வகுப்பைச் சேர்ந்தவர், பார்ஸிகள் இயற்கையிலேயே வர்த்தக நுணுக்கங்களை யறிந்தவர்கள்.

டாட்டாவின் தந்தையார் வியாபாரத் தந்திரங்களை யறிந்து வாணிகத்தை மேற்கொண்டார். அவர் டாட்டாவுக்கு இளமையிலேயே அத்தொழிற்பயிற்சி அளித்தார். சிறுவயதில் டாட்டா தம் கலாசாலைப் படிப்பை முடித்துக்கொண்டு வர்த்தகத் துறையிலிறங்கினுர். தந்தையாரின் வாணிகத்தின் தொடர்பாகச் சீனுவுக்குச் சென்றுர். இங்கிலாந்தில் இவர் நண்பர் ஒருவர் நிறுவியிருந்த பாங்கின் நடைமுறைப் பொறுப்பை மேற்கொண்டு அத்தேசம் சென்றுர். சிறுபிராயத்திலேயே கிழக்கிலும் மேற்கிலும் பிரயாணம் செய்ததனுல் டாட்டாவுக்கு உலக அனுபவம் தொடக்கத்திலேயே அமைந்துவிட்டது.

அனுபவத்தின் விளைவு

இந்த அனுபவத்தால் அவர் கண்டறிந்தது யாது? இந்தியா பிற நாடுகளுக்குக் கச்சாப் பொருள்களை (Raw

materials) அற்பவிலைக்கு அனுப்பிவிட்டு, அந்நாடுகளில் அவற்றைக்கொண்டு பொறிகளிற் செய்யப்பெற்ற செய்பொருள்களை அதிக விலைகொடுத்து வாங்கி வருவதை, இவர் உணர்ந்துகொண்டார். இச்செயலால் நம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்து வருவதோடு, நாட்டின் பொருள்நிலையும் குன்றி விடுகிறதேயென்று மனங்கவன்றார். இதன் விளைவாக இந்தியாவிலேயே எந்திரசாதனங்களை வைத்துத் தொழில் நடத்தும் ஆலைத்தொழில் முறைதோன்றியது. நாட்டில் சுதேசி இயக்கத்துக்குக் கால்கோலியவர் டாட்டா என்று கூறல் ஏற்புடைத்தாகும்.

எம்பிரஸ் மில்

தொடக்கத்தில் டாட்டா, நாகபுரியில் 'எம்பிரஸ் மில்' என்ற பஞ்சாலையை ஏற்படுத்தினர். அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் பொறிகளை அமைத்து நடத்துவதற்குப் பம்பாயே தகுந்த இடம் என்று கருதி வந்தனர். பொறிகளுக்கு அருகில் பருத்தியும், நிலக்கரியும், போக்குவரத்துச் சாதனங்களும் ஒருங்கே அமையவேண்டுமென்பதே மேல்நாட்டு யாத்திரையின் அனுபவத்தால் டாட்டா கண்டுகொண்டார். 'எம்பிரஸ்' மில்லில் பலர் பங்குதாரர்களாக இருந்தார்கள். நூற்றுக்கு 20 விகிதத்தில் அப்பொறி ஊதியமளித்து வந்ததுமுண்டு. ஆனால் அந்த எந்திரம் மெல்லிய நூலை நூற்க உதவாதென்பதை டாட்டா கண்டுகொண்டார். ஊதியம் டாட்டாவின் இலட்சியமன்று. மேல் நாட்டாரைப்போல் மெல்லிய நூலை நூற்கும் எந்திர சாதனத்தை அமைக்கவேண்டுமென்று இவர் எண்ணினர். அதனால் எம்பிரஸ் மில்லை விற்றுவிட்டார். வர்த்தகத்

நுறையிலிருந்த மற்றவருக்கும், டாட்டாவுக்குமிடையே ஏற்பட்டுள்ள கருத்து வேற்றுமை இதுதான்.

செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

என்னும் குறட்பாவிற் கூறியபடி. டாட்டா செயற்கரிய வற்றைச் செய்ய எப்பொழுதும் நாட்டமுள்ளவராக இருந்தார்.

சுதேசி மில்

மெல்லிய நூல் இழைகளை இழைக்கும் பொறியை அமைக்கக் கருதி இவர் 'சுதேசி மில்' என்றதனை ஏற்படுத்தினர்.

ஒரு பழைய ஆலை பன்னிரண்டரை லட்சம் ரூபாய்க்குக் கிடைத்தது. மிகப் பழமையாக இருந்ததனல் அது செப்பனிடுவதில், வாங்கிய விலையைப் போல், நான்கு பங்கு நஷ்டத்தை உண்டாக்கி விட்டது. அதனல் அவர் மனம் தளர்ந்து விடவில்லை. பழைய வற்றை வாங்குவதை விடப் புதியவற்றையே கொள்ள வேண்டுமென்ற பாடத்தைச் 'சுதேசி மில்' கற்பித்ததை அவர் பெரிய ஊதியமாகக் கருதினர்.

புதியன புகுத்தல்

இந்தியப் பஞ்சு மெல்லிய இழைகளை இழைக்க உதவாதெனக் கண்ட டாட்டா, எகிப்திலிருந்து உயர்ந்த ரகப் பருத்தியை வருவித்து இந்தியாவில் பயிராக்க முயற்சித்தார். மற்றவர்களுக்குத் தோன்ருத அரிய கருத்துக்கள் இவருக்கு எளிதில் தோன்றி வந்தன. புதிய

வற்றை நிலைகொள்ளச் செய்வதில் அவர் உள்ளம் ஈடு பட்டமைக்கு வேறுசில எடுத்துக்காட்டுகளைக் கூறலாம்.

மைசூரில் பட்டுப்பூச்சி வளர்ப்புமுறை தொடங்கப் பட்டது. அதனை நிர்வகிப்பது சாத்திய மன்றென்று கருதிக் கைநழுவவிடும் சமயம், டாட்டா பட்டுப்பூச்சி களை வளர்ப்பதில் திறமை வாய்ந்த ஜப்பானிய வேலைக் காரர்களை அழைத்துவந்து அத்தொழிலைக் காப் பாற்றினர்.

இந்தியாவில் எந்திரத்தொழில் நன்கு பெருக வேண்டுமானல் அதற்கு நிலக்கரி உள்நாட்டிலேயே கிடைத்தல்வேண்டும். நிலக்கரி ஓரளவிலேயே கிடைத்து வந்தால் மின்சாரத்தின் உதவியால் பொறிகளை இயக்கு தல் நன்றென இவர் கண்டார். பம்பாய் மாகாணத்தில் ஓரிடத்தில் ஓர் நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சார உற்பத்தி செய்ய டாட்டா எடுத்துக்கொண்ட சிரமத்திற்கு அள வில்லை. இறுதியில் வெற்றி கிடைக்குமென்பதும் அவருக்குத் தெரிந்திருந்தது. ஆனல் அந்த வகையில் ஏற்பட்ட பயனை அவர் உயிருடனிருந்து காணமுடிய வில்லை. அவர் அடிகோலிய மின்சாரத் திட்டம் இற்றை நாளில் சிறப்புற்றிருக்கிறது.

மேல்நாடுகளில் இருப்பனபோல இந்தியாவில் பிரயாணிகள் தங்குவதற்கு இன்றியமையாத வசதி களுடன் ‘ஹோட்டல்’ ஒன்றும் கிடையாதே என்று, எவரோ சொல்லக்கேட்டு இவர் பம்பாயில் ‘டாஜ்மஹால்’ என்ற பெயரால் ஓர் ஹோட்டலைக் கட்டினர். அது உலகப் பிரசித்தியடைந்திருப்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

தொடக்கத்தில் நம் நாட்டில் பொறிகளில் வேலைசெய்யத் தொழிலாளர் கிடைப்பது அரிதாக இருந்தது. கிராம வாழ்க்கையே விரும்பிய தொழிலாளிகள் நிரந்தரமாக நகரங்களில் தொழிற்சாலையில் வேலைசெய்ய விரும்பவில்லை. அடிக்கடி அவர்கள் ரஜாப் பெற்றும், பெறாமலும் திருவிழா முதலியவற்றின் பொருட்டுக் கிராமங்களுக்குச் சென்றுவிடுவது வழக்கமாயிருந்தது. தொழிலாளர் பிரச்னையை முதன்முதலில் இந்தியாவில் தீர்க்க வழிகோலினவர் டாட்டா தான். தொழிற்சாலையிலுள்ள இடங்களில் தொழிலாளர் குடும்பத்துக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தார். அவர்களின் குழந்தைகளுக்குக் கல்வி புகட்ட ஏற்பாடு செய்தார். பெண்களுக்கு மருத்துவ உதவிகளை அமைத்தார். ஆண்டுதோறும் தொழிலாளருக்குச் சகாய நிதியை அளித்து வரலானார். அவர்கள் நலம் தம் நலமாகவே கருதி வந்தார். அவர் காட்டிய வழியையே பிற்காலத்தில் இங்கே பலர் பின்பற்றலானார்கள்.

கப்பல் வர்த்தகம்

அயல் நாடுகளுக்கு இந்தியா அனுப்பும் பருத்தி நூற்பொதிகளை மேல்நாட்டுக் கப்பல்கள் ஏற்றிச் சென்றன. அவை அதிகமான கூலியை வாங்கிவந்தன. அது நியாயமன்றென்று டாட்டா கூலியைக் குறைக்கும்படி முயற்சித்தும் பயன் காணவில்லை. அதனால் அவர் ஜப்பான் கப்பல் ஒன்றை ஒப்பந்தத்தின்பேரில் வாங்கினார். நூல் வியாபாரிகளை மேல்நாட்டுக் கப்பல்களில் நூல் அனுப்புதலைப் புறக்கணிக்குமாறு தூண்டி ஒற்றுமைப்படுத்தினார். பஞ்சு பேலுக்கு ரூ. 12–ஆக இருந்ததை இவர் ரூ. 2-8-0 ஆகக் குறைத்தார். மேல்நாட்டுக்

கப்பற்காரர் இத்துறையில் போட்டியிட்டனர். அவர்கள் பேலுக்கு ஒரு ரூபாயாகக் குறைத்துப் பிறகு இலவசமாக ஏற்றிச் செல்லவும் துணிந்தார்கள். இந்தப் போட்டியினால் நால் வர்த்தகர் பலர் அற்பக் கூலியைக் கருதி டாட்டாவின் கட்டுப்பாட்டுக்கு உட்படவில்லை. இடையில் மேல்நாட்டுக் கப்பற்காரர்கள், 'நூலை ஏற்றிச் செல்ல டாட்டாவின் மேற்பார்வையிலுள்ள கப்பல் நெருப்புப் பாதுகாப்புக்கு ஏற்றதில்லை' என்று கூறினர். அரசாங்கமும் மேல்நாட்டுக் கப்பல்களுக்கே சலுகை காட்டியது. டாட்டாவின் கப்பல் வர்த்தக ஏற்பாடு இடையில் முறிந்ததேனும் அவர் நோக்கம் பாராட்டத் தக்கதாகும்.

விஞ்ஞானக் கழகம்

டாட்டா அமைந்த திட்டங்களில் மிகவும் போற்றத்தக்கது பங்களூரில் அவர் அமைத்துள்ள விஞ்ஞானக் கழகமாகும். இந்திய மாணவர்களை விஞ்ஞானத் துறையில் பயிற்றுவதே இக்கழகத்தின் நோக்கம். இக்கழகத்தைத் தம் சொந்த மாகாணமாகிய பம்பாயில் அமைக்கும்படி சிலர் கோரினார்கள். டாட்டா பங்களூரே தகுந்த சீதோஷ்ணமுள்ள இடம் எனக் கருதி அதனை அங்கேயே நிறுவினார். அக்கழகத்தில் பார்ஸி மாணவருக்கு மிகுதியான சலுகை காட்ட ஏற்பாடு செய்யும்படி பார்ஸி சமூகத்தினர் தம் இனத்தவரான டாட்டாவைத் தூண்டினர். டாட்டா சுயநலங் கருதாது இந்தியாவிலுள்ள எல்லா வகுப்பாருக்கும் அதில் சமமான உரிமை இருக்குமாறு செய்தார். 'டாட்டா விஞ்ஞானக் கழகம்' என்று அதற்குப் பெயரிடச் சிலர் யோசனை கூறினர். டாட்டா அதற்கும் இணங்கவில்லை. இவரது பெருந்தன்மைதான் என்னே!

இரும்பு எஃகுத் தொழிற்சாலையுள்ள இடங்கள்

ஜாம்ஷெட்பூர், டாட்டா நகர் என்பவை அவர் அமைத்த அரிய திட்டத்தின் விளைவால் தோன்றியவை. எந்திரத் தொழில் வளர்ச்சிக்கு இரும்பு கிடைக்கு மிடத்திலேயே இந்நகரங்கள் ஏற்படவேண்டுமென்று அவர் அறிந்துகொண்டு தீர்மானித்த இடங்கள் இவை.

அரிய பண்புகள்

டாட்டாவின் அரிய குணங்கள் அவரை உலகத்தின் சிறந்த மக்களில் ஒருவராக்கின. திருமகளின் அருள் பலருக்கு எளிதில் கிடைத்துவிடுகின்றது. ஆதலினால் பணந்திரட்டுதல் பெரியதன்று. திரட்டிய பணத்தை உபயோகமுள்ள வழிகளில் தன்னலப் பற்றில்லாமல் செலவழித்தலே அரிய செயலாகும். டாட்டா பின் கூறிய அருஞ்செயல் செய்தவர்களுள் தலைசிறந்தவராவர். அவர் செய்துள்ள அறச்செயல்கள் இந்தியாவின் நன்மைக்காக நிரந்தரமாகச் செய்யப்பட்டவை. பம்பாய் மின்சாரத் திட்டம், பங்களூர் விஞ்ஞானக் கழகம், இரும்பு உருக்கும் தொழிற்சாலை இம்மூன்றும் டாட்டாவின் தீர்க்கதரிசனத்தால் முகிழ்த்தவை. அவர் ஒரு கர்ம யோகி; சுயநலமற்றவர்; சிறந்த தேசிய வாதி; முதிய நாட்டன்புடையவர் அவர் ஏற்படுத்திய மூன்று திட்டங்களும் சரிவர உருக்கொள்வதன் முன் அவர் காலமாகிவிட்டார். எனினும் அவற்றைச் சிறப்பாக நடத்துவதற்கு ஏற்றவர் யார் என்பதை நன்கு அறிந்து, அவர்கள் கையில் தம்

பணியை ஒப்படைத்துச் சென்றார். மனிதரின் தராதரத்தை அறியும் ஆற்றல் அவர்பால் இலங்கியது.

டாட்டாவின் சீரமைப்புகள் இன்று இந்தியாவுக்குத் தொண்டாற்றிவரும் உயரிய நிலையை நோக்குவார்க்கு அவர் இந்திய மணிகளுள் ஒருவராக இலங்கத் தக்கவரே என்பது புலனாகும்.



வ. உ. சிதம்பரம் பிள்ளை

8. வ. உ. சிதம்பரம் பிள்ளை

தமிழ்முனிவராகிய அகத்தியமுனிவர் வாழும் பொதியமலையிற் பிறந்து இடையறாது நீர்வளம் பெருக்கும் பொருநை நதி பாய்தலின் நெல்வளமும் ஏனைப் பல்வளமும் பழுத்தது பாண்டி நன்னாடு. வளைந்த செங்கோலைத் தன்னுயிர் கொடுத்து நிமிர்த்த நெடுஞ்செழியனும் அவன் மரபினரும் ஆண்டதும், சங்கப்புலவர் செந்தமிழ் வளர்த்ததும் இந்நாடே. செந்திற் குமரன் திருவருள் பெற்ற குமரகுருபரரும், மெய்கண்ட நூற்கு விருத்தியுரை கண்ட சிவஞானமுனிவரும் தோன்றியருளிய பெரும் பேறும் இந்நாட்டிற்கே உரியது. ஏசு மதத்தைப் பரப்ப இந்நாட்டிற்கு வந்த மேனாட்டு அறிஞர்களிற் சிறப்புடையார் பலர் வாழ்ந்து செந்தமிழ்த் தொண்டு புரிந்து பெருமை பெற்றதும் இப்பாண்டி நாடேயாகும்.

இங்ஙனம் முற்காலத்தும் இக்காலத்தும் சீர்பெற்று விளங்கும் செந்தமிழ்ப் பாண்டி நாட்டில் ஒரு பகுதியாகிய திருநெல்வேலி ஜில்லாவில் ஓட்டப்பிடாரம் என்னும் ஊரில் வாழ்ந்த உலகநாத பிள்ளை யென்னும் வேளாளர் குலப் பெரியார்க்கு, அவர் செய்த நல்வினைப் பயனால் தோன்றி உலக முழுவதும் ஒளிபரப்பிய மணியே, நம் சிதம்பரம் பிள்ளை யாவர். அவர் பிறந்த நாள் 1872-ம் ஆண்டு செப்டம்பர்-மீ 5-ம் நாள் என்ப.

கல்வியும் குணவிசேடங்களும்

இவர் இளமையில் தாய்மொழி பயின்று பின் ஆங்கிலக் கல்வியும், சட்ட நூற்கல்வியும் பெற்று, வழக்கறிஞராகி ஓட்டப்பிடாரத்திலேயே தம் வழக்கறிஞர்

வேலையை மேற்கொண்டு வாழ்ந்து வந்தார். விளையும் பயிர் முளையிலே தெரியும் என்னும் முதுமொழிக் கேற்ப இவருக்கு இளமையிலேயே மொழிப் பற்றும், நாட்டுப் பற்றும், மக்கட்குத் தொண்டு செய்ய வேண்டு மென்ற பேரவாவும் வளர்ந்து வந்தன.

அதனுல் இவர் ஏழைகளிடத்து இரக்கமும், மக்களிடம் உயர்வு தாழ்வு பாராட்டாத நடுநிலைக் குணமும், யாவருக்கும் உதவிசெய்ய வேண்டுமென்ற பேராவலுமுடையவராயிருந்தார். தாம் மேற்கொண்ட வழக்கறிஞர் வேலையைச் சிறிதளவும் தவறின்றி நடத்தி வந்தார். தாழ்ந்த குலத்தினராகக் கருதப்படும் முகக் கண் இழந்த ஞானி ஒருவரை வீட்டிலேவைத்துப் போற்றினர்.

''சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்''

என்பது மறைமொழி. நமது பிள்ளையவர்கள் சொல்லிய வண்ணம் செய்யும் ஆற்றல் பெற்று விளங்கினர்.

இல்வாழ்க்கை

இவருடைய வாழ்வு சிறந்து விளங்கியதற்குக் காரணம், இவருக்கு வாழ்க்கைத் துணையாக வந்த வள்ளியம்மை யென்னும் செல்வியின் அன்பும், மதி நுட்பமுமே என்பது மிகையாகாது.

''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்
பண்பும் பயனும் அது.''

வள்ளியம்மையும் சிதம்பரவள்ளலும், காதல் மனை யாளுங் காதலனுமாக வாழ்ந்ததனுல் மாறின்றி வாழ்க்கையை நடத்தி வந்தார்கள்.

வர்த்தக வளர்ச்சிக்குப் பாடுபடுதல்

"உள்ளுவ எல்லாம் உயர்வுள்ளல்" என்னும் மெய்மொழிக்கேற்ப இவருள்ளத்தே அடிக்கடி பல உயரிய எண்ணங்கள் தோன்றும். 'ஒரு நாட்டின் செழுமைக்கு அந்நாட்டின் வாணிபமும், செல்வப் பெருக்கமுமே இன்றியமையாதன' என்ற எண்ணம் இவருள்ளத்தே முகிழ்த்து மலரும் பருவமுற்றது. அக்காலத்தில் ஆங்கிலேயர்கள் தூத்துக்குடியிலிருந்து மரக்கல மூலமாகப் பிறநாடுகளுடன் வாணிபஞ் செய்து பெரும் பொருளீட்டுவதையும், அங்ஙனம் செய்யமுடியாமல் நம் நாட்டு வணிகர் பலர் வருந்துவதையுங்கண்டு, இவருக்கு ஆங்கிலேயரிடத்து அருவருப்பும், நம் நாட்டு மக்களிடத்து ஆர்வமும் வளர்ந்தன.

மரக்கலம் ஊர்ந்து பல நாடுகளை வென்று அடிமைப்படுத்தி வாழ்ந்த மன்னர்கள் வழியில் வந்த நாம் பிறநாட்டவர்க்கு அடிமையாகிப் பேதுறுவது என்ன இழிவு! நாமும் ஒரு மரக்கலங்கொண்டு வாணிபம் நடாத்தி வளமுற வாழவேண்டு மென்றெண்ணிப் பலரிடம்சென்று பொருளீட்டினார். பலர் முன்வந்து உதவினார்கள். ஆயினும் அப்பொருள் போதிய அளவு கிடைக்கவில்லை. 'யாதும் ஊரே, யாவருங்கேளிர்' என்னும் தூய மனப்பான்மை உடையராகலின் தமிழ் நாடகன்று வடநாடு போந்தார். அவ்விடங்களில் அவருக்குப் பலர் உதவிபுரிந்தனர். அதன் பயனாக இரண்டு மரக்கலங்களுடன் நம் நகர் அடைந்தார்.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."

என்பது பொய்யாமொழியன்றோ!

பிள்ளையவர்கள் பொருள் தேடக்கருதி வடநாடு சென்றிருந்தகாலை, அவருடைய ஒரே மகன் உயிர் துறந்தான்; மனைவியாரும் நிறைந்த கருப்ப முற்றிருந் தார். அதனால் அவரை ஒருதரம் ஊருக்குவந்துபோக அன்பர் பலர் எழுதினார்கள். தேசப்பணியே தம்கட னெனக் கொண்ட பிள்ளையவர்கள், "என் மகனையும் மனைவியையும் இறைவன் காப்பான்; அவன் என்னி னும் வலியன்" என விடையளித்துத் தம் பணியை மேற்கொண்டார். இதுவன்றோ தமிழன் வீரம்!

"யான் கப்பலுடன்வரின் மீண்டுந் தமிழகம் புகுவேன். அல்லனேல் ஆண்டே உயிர்விடுவேன்" என்று கூறிய வீரத்தமிழன், வெற்றியுடன் மீண்டதைக் கண்டு தமிழ் மக்களடைந்த மகிழ்ச்சிக்கு ஓர் அளவும் உண்டோ! வாயார வாழ்த்தினர் சிலர்; மாலை சூட்டி மகிழ்ந்தனர் சிலர்; 'ஆங்கில வாணிகம் அழிக' என்றார் சிலர்; 'ஓங்குக நாட்டின் உரிமை' என்றார் பலர்; இங்ஙனம் எழுந்த வாழ்த்தொலி கடலொலியினும் பெரியது.

பிள்ளையவர்கள் வாங்கிய கப்பலின் பெயர்கள் 'லாவோ,' 'காலியா' என்பனவாம். 'சுதேசிக்கப்பல் கம்பெனி' என்னும் பெயருடன் அக்கம்பெனியைப் பதிவு செய்து வர்த்தகத்தைத் தொடங்கினர். பல நண்பர்கள் உதவிசெய்தார்கள். பிரிட்டிஷ் வர்த்தகர் களால் இதற்குப் பல தடைகள் உண்டாயின. ஒரு

சிலர் ஆங்கில வர்த்தகர்கட்கும் உதவினர். ஆனால் அவரெல்லாம் பொது மக்களுடைய அருவருப்பைப் பெற்றனர். சிதம்பரம்பிள்ளையவர்களால் செலுத்தப் பட்ட கப்பல் இலங்கைக்கும் தூத்துக்குடிக்கும் வெற்றி யுடன் போய் வந்து கொண்டிருந்தது. அதனைக்கண்ட ஆங்கிலேயர் - சூழ்ச்சித்திறன் வாய்ந்தவராகலின்— "லட்சம் ரூபாய் தருகிறோம்: எங்களுடன் போட்டியிட வேண்டாம்" என்றுரைத்துப் பலதரம் முயன்றும், அம்முயற்சி வெற்றி பெறாமல் இவரிடம் விரோதங் கொண்டார்கள்.

அந்நாளில் வட நாட்டில் அரசப்பிரதிநிதியாக இருந்த லார்டு கர்சன் என்பவரால் வங்காளப் பிரிவினை ஏற்பட்டது. அதனால் வங்கநாட்டு மக்களுள் பெருங் குழப்பம் உண்டாயிற்று.

இங்ஙனம் தென்னாட்டில் சிதம்பரம்பிள்ளை அவர் களாலும், வடநாட்டில் அரசப்பிரதிநிதி செய்த பிரிவினையாலும் இந்திய மக்களிடையே நம் நாடு அடிமை ஒழிந்து உரிமை பெறவேண்டும் என்ற உறுதி யான எண்ணம் பரவத் தொடங்கியது. வங்கநாட்டுப் பிரிவினையால் அந்நாட்டு மக்களேயன்றி இந்தியமக்கள் அனைவரும் அரசாங்கத்தாரை வெறுக்கத் தொடங்கி னார்கள். வர்த்தகத்தின் மூலமாக நம் நாட்டின் பொருளைக் கவர்ந்து செல்வதே அரசாங்க நோக்க மென்பதைக் கண்டுகொண்டார்கள். பிறநாட்டுப் பொருள்களை வாங்கக்கூடாது. அவைகளை உப யோகிக்கவும் கூடாது என்ற எண்ணம் அறிஞர்களி டையே பரவ, அதனால் புலர் மேனாட்டுத் துணிகளைத்

நீக்கிரையாக்கினர். அங்ஙனஞ் செய்தவர்களில் முன்னணியில் நின்றவர் நமது சிதம்பரம்பிள்ளை அவர்களே.

அரசியற்பணி

இங்ஙனம் சிதம்பரம்பிள்ளை அவர்கள் வர்த்தகத் துறையிலும், சுதேசநாட்டுப் பொருள் வளர்ச்சியிலுமன்றி அரசியல் துறையிலும் புகுந்து பணியாற்ற விரும்பினர்; நமது இந்திய நாட்டின் வளமெல்லாம் அழிந்து கொடுமையே அறமாகி வளர்வதைக் கண்டு மனம் புழுங்கினர்; கொடுமை மலிந்த முடியரசை ஒழித்து, மக்களே நாட்டை ஆளுங் குடியரசை நிறுத்த எண்ணினர். அவ்வெண்ணத்தை நிறைவேற்றக் காங்கிரஸ் மகாசபையின் அங்கத்தினராஞர். பொதுப்பணியில் ஈடுபட்ட அவர் மனம் வழக்கறிஞர் வேலையை வெறுத்தது. அதனையும் கைவிட்டார்.

அரசாங்கத்தின் கொடுமைகளையெல்லாம் சாதாரண மக்களும் உணரவேண்டுமென்று அங்கங்கே சொற்பொழிவு செய்ய முற்பட்டார். திருநெல்வேலியில் "தேசாபிமான சங்கம்" என்று ஒரு கழகம் அமைத்தார். அந்நாளில் துறவியும், நிறைந்த தமிழறிஞரும், பழுத்த தேசபக்தரும், துணிந்த மனமுடையவருமாகிய சுப்பிரமணிய சிவா என்னும் பெரியார் திருநெல்வேலிக்கு வந்தார். தேசாபிமான சங்கத்தார் அவரை வரவேற்று வேண்டிய உதவி செய்தனர். அவர் பிள்ளை அவர்கட்கும் உற்ற துணைவராஞர்.

இருவரும் மிகத் திறமையுடனும் தெளிவாகவும் மக்கள் உள்ளத்திற் பதியுமாறும் பேசும் ஆற்றலுடையவர்கள். இவ்விரு பெரியார்களுடைய சொற்

பொழிவுகளால் மக்களுடைய நாட்டுப்பற்று ஓங்கி வளர்ந்தது. பலவகைத் தொழிலாளர்கட்கும் இவர்கள் பொன்மொழி புத்துயிர் அளித்தது.

காங்கிரஸ் மகா சபையின் உறுப்பினரான பிறகு, இவர் ஆண்டுதோறுங் கூடும் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்துக்குத் தவறுது செல்வார். அக்காலத்தில் காங்கிரஸ் மகாசபையைச் செல்வர்களும், செல்வாக் குடையோருமே நடத்திவந்தார்கள். அக்கட்சியினர் இருபிரிவினராக இருந்தனர். அவர்களை மிதவாதிகள், திவிரவாதிகள் என்பர்.

திவிரவாதிகளின் தலைவர் திலகர்பெருமானின் வழியையே பிள்ளையவர்களும் பின்பற்றினர். காங் கிரஸ் மகாசபைக்குத் தவருமற்போனதினுல் பல வட நாட்டுப் பெரியோர்களது நட்பு இவர்க்குக் கிடைத்தது. அவர்கள் நமது பிள்ளையவர்களைத் தென்னுட்டின் திலக மெனக் கருதினர்கள். ஆதலின் அவர்களிற் சிலர் தென்னுட்டிற்கு வந்து பிள்ளையவர்களைக் கண்டு சொற் பொழிவு செய்துபோவதுமுண்டு.

சிறைவாசம்

1908-ம்ஹு மார்ச்சுமீ 9உ காங்கிரஸ் மகா சபையின் தலைவர்களுள் ஒருவராய **பிபின் சந்திரபால்** சிறையிலிருந்து விடுதலையடைந்தார். அந்நாளைக் கொண் டாடத் திருநெல்வேலி முழுதும் பெருமுயற்சி நடந்தது. இதையறிந்த அரசாங்கமும் சிறிது கவலைகொண்டது. மார்ச்சு-மீ 9உ பொதுக்கூட்டம்; ஊர்வலம் முதலியன நடத்தக் கூடாதென்ற தடை யுத்தரவும் போடப் பட்டது. தடையுத்தரவு கேட்டவுடன் மக்கள் அதிக மாக அதிகார வர்க்கத்தினரை வெறுத்தனர்.

மாஜிஸ்டிரேட், பிள்ளையவர்களை அழைப்பித்து மார்ச்சு-மீ 9-உ ஊர்வலத்திலும் பொதுக் கூட்டத்திலும் கலந்து கொள்ளக் கூடாதென்று நேரிற் சொல்லியும், பிள்ளையவர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. ஒருபுறம் சுதேசிக் கப்பல் கம்பெனியின் நிர்வாக அங்கத்தினர்கள் ஒன்றுகூடிக் கம்பெனிக்கு மோசம் வராமற் காக்கவேண்டுமென்று கருதி அரசாங்கத்தின் விரோதம் அதிகப்படாமல் விலகுவதே நல்லதென்றார்கள். மற்றொருபுறம் இவர் தீவிர எதிர்ப்புச் செயல் காரணமாக அரசாங்கம் இவரைச் சிறை செய்யச் சமயம் பார்த்துக் கொண்டேயிருந்தது. சிதம்பரம் பிள்ளை எதையும் மதித்திலர். தம் மனத்திற்கு நன்றெனத் தோன்றியபடி மக்கட்கு ஆவன செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தார். மார்ச்சு-மீ 9-உ தடையையும் மீறிப் பொதுக் கூட்டத்தில் வீரமொழி பேசினார். இச்செய்கையால் தென்னாடு வடநாட்டினுஞ் சிறந்து விளங்கிற்று.

திருநெல்வேலி நகரம் முழுவதிலும் வெள்ளையரிடம் வெறுப்பும், சுதந்திரம் என்ற பேச்சும் அதிகாரிகளிடத்துக் கோபமும் அதிகரித்தன. தேசப் பற்றில்லாது அரசாங்கத்தின் போக்கை ஆதரித்து வந்தவர்கள் பலவகையிலும் இன்னலுக் காளானார்கள்.

கொஞ்சநாள் சிதம்பரம் பிள்ளை இட்டதே சட்டமாக இருந்தது. இதையறிந்த ஜில்லாக் கலெக்டர் சிதம்பரம் பிள்ளையையும், சிவாவையும் அழைத்து இயன்றவரையில் அவர்களைத் திருப்ப முயன்றார். ஒன்றும் பயன்படவில்லை. கடைசியாக, "ஜில்லாவைவிட்டு நீங்கள் வெளியேற வேண்டும்: ஜாமீன் கொடுக்க

வேண்டும்" என்று உத்தரவு போட்டார். அதையும் தேசபக்தர்களிருவரும் மறுத்தார்கள். அப்பொழுதே சிவாவும் பிள்ளையவர்களும் கைது செய்யப்பட்டனர்.

ஜில்லாவில் பெருங்குழப்பம்

சிதம்பரம் பிள்ளை கைது செய்யப்பட்ட செய்தி இரண்டு மூன்று தினங்களில் ஜில்லா முழுவதும் பரவிவிட்டது. யாவர்க்கும் உள்ளம் கொதித்தது. வியாபாரிகள் கடைகளை மூடினார்கள். தொழிலாளிகள் வேலை நிறுத்தஞ் செய்தார்கள்.

அங்கங்கே கூட்டங்களும் ஊர்வலங்களும் நடந்தன. தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டன. பல அரசாங்க அலுவலகங்கள் இடிக்கப்பட்டன. அரசாங்கத்தார் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர். பலர் சிறைப்பட்டனர். இங்ஙனம் பல தினங்கள் நடந்து குழப்பம் ஒருவாறு அடங்கியது. ஆயினும் மக்களின் உள்ளக் கொதிப்பு அடங்கவில்லை.

தண்டனை

1908-ஆம் ஜூலை மீ - 7உ சிதம்பரம் பிள்ளையின் வழக்கு முடிவுற்றது. ஜில்லா நீதிபதி அவர்மீது பல குற்றங்களைச் சுமத்தி 20 வருஷச் சிறைத் தண்டனை விதித்தார். பின் சென்னை நீதிமன்றத்தில் மறுபடியும் விசாரிக்கப்பட்டுத் தண்டனை பத்து வருஷமாகக் குறைக்கப்பட்டது. பிள்ளையவர்கள் சிறைச்சாலையைத் தவச்சாலையாகக் கொண்டார்.

அரசாங்கத்தார் சிறையிற் படுத்திய கொடுமைகளை விரித்தெழுதக் கை யெழவில்லை. நினைப்பினும்

நெஞ்சம் நிடுக்கிடுகின்றது. நாட்டின் நலத்துக்கே உழைத்த ஒரு தவமகனுக்கும் இது தக்கதோ!

விடுதலை

சிதம்பரச் செம்மல் சிறைவாசங் கடந்து விடுதலை பெற்ற நாள் 1912-ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆகும். விடுதலையடைந்தபின் சென்னையிற் சில ஆண்டுகள் வசித்தார். தம் நண்பராகிய சிவாவைத் தவிர வேறெவரும் அவரைக் கவனித்திலர். அக்காலத்தில் வறுமைப் பிணியால் சிறிது வாட்டமுற்றார். ஆயினும் பொதுப்பணி புரிதலில் சிறிதும் தளர்ச்சி எய்திலர். அரசாங்கத் துவேஷத்தால் சிறைப்பட்டதனால், **'வக்கீல் சந்நத்தும்'** பறிக்கப்பட்டது; தமது வறுமை நிலையைக் குறித்துத் தம் நண்பர் ஒருவர்க்கு,

> **''வந்தகவி ஞர்க்கெல்லாம் மாரியெனப் பல்பொருளும்**
> **தந்த சிதம்பரமன் தாழ்ந்நின்று-சந்தமில்வெண்**
> **பாச்சொல்லிப் பிச்சைக்குப் பாரெல்லாம் ஓடுகிறான்**
> **நாச்சொல்லும் தோளும் நலிந்து''**

என்றெழுதினரென்பர். இவ்வறுமையும் பிள்ளையவர்களின் பெருமிதங்கண்டு சற்று விலகத் தொடங்கியது. பறிக்கப்பட்ட 'வக்கீல் சந்நத்து' நீதிபதி இ. எஸ். வாலஸ், ஐ. சி. எஸ், அவர்கள் உதவியாற் கிடைத்தது. பின் சென்னையிலிருந்து தூத்துக்குடி சேர்ந்து மீண்டும் தம் வழக்கறிஞர் வேலையை மேற்கொண்டு தம் இல் வாழ்க்கையை இனிது நடத்தினார்.

குண நலன்

அன்பு, அறம், உழைப்பு, ஊக்கம், கொடை முதலிய குணங்கள் அனைத்தும் அவரை உறுதியாகப்

பற்றின. 'வறுமையை ஒழி, உரிமைக்குப் போரிடு, சிறைக்கு அஞ்சாதே' என்பதே அவர் கொள்கை.

செய்நன்றி மறவாத நம் பிள்ளையவர்கள், சுதேசிக் கப்பல் வளர்ச்சியில் ஊக்கங் காட்டிய தமது நண்பர் ஆறுமுகம் பிள்ளையின் பேரைத் தம் மகனுக்கு வைத்தார். ஒருநாள் தம்மிடம் வந்துவேண் டிய ஒருவருடைய வேண்டுகோளுக் கிணங்கி அவர் மகனுடைய திருமணத்துக்கு ரூ. 1000 கொடுத்ததும் இந்நாளிலேயாம். இவைபோல்வன பல.

தமிழ்ப்பணி

சிதம்பரம்பிள்ளை தமிழன்பு மிக்கவர்; சங்கநூற் பயிற்சியுடையவர்; மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்; உண்மை உரைகாணும் உரம் பெற்றவர்; பலருக்குத் தமிழ்ப்பாடம் போதித்தவர்; திருக்குறள் மணக்குடவர் உரையை நன்கு பயின்றவர்; அதனை அச்சியற்றியவர். இவரிடம் திருக்குறள் படித்தவர்களில் கனம் ஸி. ராஜ கோபாலாச்சாரியரும் ஒருவர் என்பர். ஆங்கில மொழி யிலுள்ள பல அரிய நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டார். அவை: 'மனம்போல வாழ்வு', 'அகமே புறம்', 'வலிமைக்கு மார்க்கம்' முத லியன. திருக்குறள் அறத்துப்பாலை ஆங்கில மொழி யில் பெயர்த்தார். தொல்காப்பியம் இளம்பூரணர் உரை, இன்னிலை ஆகிய இவைகளைத் தமிழ் மக்களுக்குப் பயன்படும்படி பதிப்பித்தார்.

வாழ்க்கை முடிவு

வழக்கறிஞராக வாழ்ந்து, வாணிபத் துறை வளர்த்து, பொதுப்பணி புரிந்து, தேசத் தொண்டிற்

பிறந்த நாட்டின் உரிமைக்கே உழைத்து, சிறைபுகுந்து மீண்டு, வறுமை வாய்ப்பட்டு, அதனையுங் கடந்து வாழ்க்கை நடத்தி, தமிழ்ப்பணி புரிந்து, தங்குலப் பெருமை குன்றாது நிலவிய பிள்ளையவர்கள் 1936-ம் ஆண்டு நோய்வாய்ப்பட்டு இவ்வுலக வாழ்வை நீத்தனர்.

மாணவர்களே, நீங்களும் சிதம்பரம் பிள்ளையவர்களின் சீரிய குணங்களை மேற்கொண்டு, மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும் உடையவர்களாக வாழ்விர்களாக!

———



ஜவாஹர்

9. ஜவாஹர்

ஜவாஹர் சிறந்த அரசியல் வாதி. உலக சரித்திரத்தில் சிறந்த இராஜ தந்திரிகளாக விளங்கும் அறிஞரில் ஒரு சிலரே இவருக்கு நேர் ஆவர். உரிமைக்காக நெடுங்காலம் போராடிய பாரத நாடு பலருடைய தியாகத்தினால் உதிரம் சிந்தாமலதனை எய்தியது. கிடைத்த சுதந்திரத்தைக் காப்பாற்றுவதில் பல துன்பங்கள் குறுக்கிட்டுள்ளன. சீனக் கொள்கை, பாகிஸ்தானுக்கும் இந்திய யூனியனுக்கும் கூற்றுவனாகத் தோன்றியுள்ளது. உள் நாட்டிலேயே சதி செய்வோரின் சூழ்ச்சிகள், அவர்களை மறைமுகமாகத் தூண்டும் விசைகள், தொழிலாளி முதலாளிப் பூசல்கள், வேலை நிறுத்தத் தொல்லைகள், கள்ள வியாபாரம், மோசடி முதலிய சூதுகள், உணவு துணிப் பஞ்சம், பொருளாதார வீழ்ச்சி, பண வீக்கம், மற்றும் எத்தனையோ இன்னல்கள் நாட்டில் குமுறிக் கொண்டிருக்கின்றன!

காலத்துக்கேற்ற தலைவர்

இந்த நிலையில் ஜவாஹர் அரசியல் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டிருக்கிறார். பெரும் புயலினால் கொந்தளிக்கும் கடலிலே காரிருளில், கரை காணாது அல்லலுறும் ஒரு கப்பலின் தலைமையை ஏற்றுள்ள ஒரு மாலுமித் தலைவனைவிட ஜவாஹரின் கவலையும் பொறுப்பும் மிகுந்துள்ளன. இந்த நிலையிலும் எதிர் காலத்தைப்பற்றிய நம்பிக்கை எண்ணத்தோடு, நீதி வழியையும் சத்தியத்தையும் மேற்கொண்டு, அணுவளவும் பிசகாமல் அமைதியுடன் அல்லும் பகலும் ஓயாமல் இவர் உழைத்து வருகிறார்.

உலகம் ஜவாஹரை நன்கு அறிந்திருக்கிறது. இவருடைய ஒப்பற்ற திறமையையும் நேர்மையான வழியையும் போற்றிப் புகழ்கிறது. இவரும் வெளி நாடுகளில் அங்கங்கே நிகழும் அரசியல் நிகழ்ச்சிகளையும் அந்தந்த நாட்டுத் தலைவர்களையும் நேர்முகமாக அறிந்தவர் ஆவர்.

இந்தியாவின் குறிக்கோள் யாது? உலக அமைதிக்கு இது எங்ஙனம் துணை செய்யக்கூடும்? இதன் வலிமை கேவலம் ஆயுத பலத்ததா? இல்லையேல் விஞ்ஞானத்தை அவ்வழியில் துணையாகக்கொண்டு தன்னல எண்ணத்துடன் போர் செய்ய முயலும் நாடா? இவைகளுக்கு எவரும் விடை பகரத் தேவையில்லை. நம் ஜவாஹர் தம் நடைமுறையில் இவ்வினாக்களுக்கு விடை இறுத்து வருகிறார். உலக மேதாவிகளில் ஒருவராகக் கொண்டு இவர் சரிதை பொன் எழுத்தில் ஒரு காலத்தில் எழுதப்பெறும்.

ஜவாஹரின் தகுதி

ஜவாஹரால் தோன்றியது சாதாரண குடும்பத்தில்லல. செல்வத்திலும், அறிவிலும், பதவியிலும், ஒழுக்கத்திலும் உயர்ந்த குடியிற் பிறந்தவர் இவர். மன்னர் மரபிற் பிறக்காதது ஒன்றே குறை; என்றைக்கோ இவர் 'முடிசூடா மன்னர்' என்ற பெயரைப் பெற்று விட்டார். சிறுவயதில் இவர் கற்ற கல்வியும், பல நாடுகளுக்குச் சென்று வந்ததனல் பெற்ற அநுபவங்களும், ஓர் அரசியல் அறிஞருக்கு அமைய வேண்டிய திறத்தில் அமைந்துள்ளன. அரசாங்கத்துடன் செய்து வந்த போராட்டங்களில் 1919-ம் ஆண்டிலிருந்து கொள்கை மாருமல் காங்கிரஸின்

சார்பில் இருந்துகொண்டு தடியடி, தண்டனை, சிறை முதலியவற்றைப் பல முறை பெற்றிருக்கிறார். நான்கு முறை காங்கிரஸ் தலைவராக இருந்து நிர்வாகத்திறமை கைவரப் பெற்றுள்ளார்.

இவர் குடும்பத்தில் இவருடைய தந்தையார் தாயார், சகோதரிமார், மனைவி, மகள் யாவரும் தமக்கென வாழாமல் நாட்டின் நலத்துக்காகவே உழைத்துப் புகழ்பெற்றவர்கள். "மகனறிவு தந்தையறிவு" என்பார்கள். ஜவாஹரின் திறத்தில் இது பொய்யாயிற்று. தந்தையைவிட மகனார் எத்தனையோ மடங்கு பல விதங்களிலும் மேம்பட்டவராவர்.

இளமைப் பருவம்

தகுந்த அயர்லாந்து ஆசிரியர் மூலம் வீட்டிலேயே இவருக்குக் கல்வி போதிக்க இவர் தந்தையார் ஏற்பாடு செய்தார். விஞ்ஞானம் இவருக்கு உகந்த பாடமாயிற்று. விஞ்ஞானப் பரிசோதனைக் கருவிகள் யாவும் நிரம்பிய பரிசோதனை அறை ஒன்றை இவர் பொருட்டுத் தந்தையார் அமைத்துக் கொடுத்தார். குதிரை ஏற்றத்தையும் சிறுவயதில் ஜவாஹர் கற்றுக் கொண்டார்.

உயர்தரப் படிப்பும் கலாசாலைப் படிப்பும் இங்கிலாந்தில் பிரபுக்களின் பிள்ளைகளுக்காக ஏற்பட்ட ஸ்தாபனத்தில் இவர் பெற்றார். இவரை ஐ. ஸி. எஸ். படிப்பிக்க முதலில் தந்தையார் விரும்பினார். ஆனால் அதற்குரிய வயது நிரம்பப் பெறாத சிறுவராக இருந்ததனால் இவர் பாரிஸ்டர் பரீட்சைக்குப் படித்து அதில்

தேதி இந்தியா திரும்பினர். அப்பொழுது இவருக்கு வயது இருபத்துமூன்றுதான். விஞ்ஞானத்தில் இவருக்கு நுட்பமான அறிவு ஏற்பட்டது. 1947 டிசம்பர் 13-ம் தேதி இத்துறையில் அலகாபாத் பல்கலைக் கழகம் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியமை இங்கே குறிக்கத்தகுந்த தொன்ருகும்.

வாழ்க்கை மாறுதல்

ஜவாஹர் குடும்பமே மேல்நாட்டு நாகரிக மயக்கில் மூழ்கியிருந்தது. நடை உடை பாவனைகள் எல்லாம் மேல்நாட்டு ரீதியில் அமைந்திருந்தன. மகாத்மா காந்தியின் பழக்கம் ஜவாஹருக்கு 1919-ல் கிடைத்தது. அதுமுதல் இவர் தீவிரவாதியானர். இவர் தந்தையார் மிதவாதியாகவே இருந்தார். அதனை இவர் விரும்பவில்லை. இதனல் அரசியல் துறையில் இருவருக்கும் மனவேறுபாடு இருந்து வந்தது. இந்தியாவின் உயிர் கிராமங்களே. கிராமங்கள் வறுமை நீங்கிச் சீர்மையுறுவதே இந்தியாவின் சீர்மையாகும் என்ற கொள்கையை இவர் காந்தியடிகளிடமிருந்து உணர்ந்து கொண்டார். பின்னர் நேரில் நாட்டைச் சுற்றிப் பார்த்து இந்தக் கொள்கையில் பின்னும் உறுதி கொண்டார். இவருடைய நடை உடை பாவனைகளும் மாறின. நேரு குடும்பமே எளிய வாழ்க்கையை மேற்கொண்டது.

துன்பத்திற்குமேல் துன்பம்

1920-ல் இருந்து இன்றுவரை இவர் நாட்டுக்காகவே உழைத்து வருகிருர். சொந்த நலத்தை ஒருக்காலும் இவர் கருதினர் அல்லர். இந்நெடுங் காலத்தில் இவர் அடைந்த பலன் துன்பத்தின்மேல்

துன்பமே. ஒரு முறைகூட, சிறையிலிருந்து விடுதலை பெற்று இவர் அமைதியாக ஓராண்டு இருந்ததில்லை. விடுதலையான சில மாதங்களுக்குள் ஒரு காரணத்தைக் கற்பித்து அரசியலார் இவரை மீண்டும் சிறைக்கு அனுப்பி வந்தனர். குடும்பத்திலும் இவர் இன்பங் கண்டார் அல்லர். இவர்தம் அருமை மனைவியார் கமலா நேரு நெடுங்காலம் நோய்வாய்ப்பட்டிருந்து, 1936-ம் ஆண்டில் காலமானார். அக்கால முதல் இவர் இல்லறத் துறவியாகவே-பிரம்மச்சாரியாகவே இருந்து வருகிறார்.

பூரண சுதந்திரவாதி

இந்தியாவுக்குப் பூரண சுயராஜ்யம் வேண்டும் என்ற தீர்மானத்தை முதலில் கொண்டு வந்தவர்கள் இவரும், இவருடன் ஒருமனப்பட்டு உழைத்து வந்த நேதாஜியுமேயாவர். இந்தத் தீர்மானம் 1928-ல் கொண்டுவரப்பட்டது. அடுத்தவருஷம் லாகூரில் கூடிய காங்கிரஸுக்கு இவரே தலைமை வகித்து இந்தத் தீர்மானத்தை அனைவரும் ஏற்கச் செய்தனர்.

இந்தியாவுக்கு மட்டும் சுதந்திரம் வேண்டும் என்னும் சுயநலம் இவர்பாலில்லை. ஒரு நாடு மற்றொரு நாட்டை அடிமைப்படுத்தி ஆளக்கூடாதென்ற அடிப்படைக் கொள்கையை உடையவரிவர். இந்த நோக்கத்தோடு இவர் ஆசியா நாடுகளை எல்லாம் ஒன்றுபடுத்தும் துறையில் பல ஆண்டுகளாக முயற்சித்து வருகிறார். சென்ற ஆண்டில் டில்லியில் ஆசியா மக்கள் மகாநாடு இவர் தலைமையில் நடைபெற்றது. அதில் இவர் ஆற்றிய தலைமைப் பேருரை பிறநாடுகளில்

ஆதிக்கம் செலுத்திவரும் ஐரோப்பா, அமெரிக்கா நாடுகளைக் கலங்கச் செய்தது.

கொள்கை மேம்பாடு

ஜவாஹர் பொதுவுடைமைத் தத்துவத்தில் மிருந்த பற்றுடையவர் என்று பலர் கருதுவர். ரஷ்யாவின் போக்கை ஒட்டிய பொருளாதாரத்தையோ மேல்நாடுகளின் பொருளாதார முறையையோ இவர் இந்தியாவில் புகுத்த விரும்பவில்லை. அவை நம் நாட்டின் இயல்புக்கு ஏலாதென்பதை இவர் சில இடங்களில் வெளியிட்டுள்ளார்.

செல்வத்திலாயினும் சரி, ஜாதி மத அந்தஸ்திலாயினும் சரி, ஏற்றத் தாழ்வுகள் இருந்து வருவதை இவர் கண்டித்து வருகிறார். அரசியல், பொருளாதாரத் துறையில் மதம் தலைகாட்டுவதை இவர் வெறுக்கிறார். இங்ஙனம் ஒரு தேசம் குறுகிய நோக்கங் கொள்ளுமானால் அது தன்னை உலகத்தின் மற்றப் பாகங்களிலிருந்து பிரித்துக் கொண்டு அல்லலுறும் என்பது இவரதெண்ணம். இது முக்காலும் உண்மையே. "எல்லோருக்கும் சம உரிமையும் முன்னேறுவதற்கேற்ற சம சந்தர்ப்பங்களும் அமையவேண்டும்" என்று இவர் பல மேடைகளில் பேசி இருக்கிறார். ஸோவியத் முறையை விடக் கூட்டுறவு முறையில் இவர் கருத்து ஊன்றியிருக்கிறது.

ஜவாஹர் இந்த இருபத்தாறு ஆண்டுகளில் செய்து வந்த சேவையை எல்லாம் சேர்த்து நோக்குவோமாயினும், இந்த ஆண்டில் இவர் செய்த தொண்டுக்கு அவ்வளவும் இணையாகாது என்னல் வேண்டும். நாடு

இவரிடம் நம்பிக்கை கொண்டுள்ளது. இவருடைய திறமையிலோ, போக்கிலோ எவருக்கும் ஐயமில்லை.

"**நாஜிக் கொள்கை, பாஸிஸ்ட் கொள்கை** இவைகளை ஒழிக்க உலக மகா யுத்தம் கிளம்பியது. அது அவற்றை அழித்ததென்னவோ உண்மை. பலாத்காரமும் துவேஷமும் எங்கே வளர்ச்சி அடைகின்றனவோ அங்கே நாஜிக் கொள்கையும் பாஸிஸ்ட் கொள்கையும் தலை காட்டக் கூடும்" என்றும், "இன்று இந்தியாவில் சிலர் இந்த இரண்டினையும் விரும்பிக் கிளர்ச்சி செய்கிறார்கள். இவ்வித நிலைமை நாட்டைப் படுகுழியில் வீழ்த்தி விடக் கூடும்" என்றும் இவர் பிரசாரம் செய்து வருகிறார். தேசியம், மதம் என்ற பெயரால் பரவிவரும் இந்த இரண்டு கொள்கைகளையும், வேர்பறித்து, அறநிலையில் அமைதியை நிலைநாட்டுவதிலேயே இவர் கண்ணுங் கருத்துமாக உள்ளார். உலகத்திலே பல இடங்களில் உள்ள அறிவாளிகள் இக்காரணத்தால் ஜவாஹரைப் பாராட்டுகிறார்கள். இவர் மிகப் பெரிய அரசியல் வாதி; எஃகு உள்ளம் படைத்த நீதிமான்; உலக சமாதானத்துக்கு அடிகோலுபவர் என்பதை அவர்கள் அறிவார்கள்.

சுயசரிதம்

ஜவாஹரின் சரித்திரத்தை இவரே எழுதிய சுய சரித்திரத்திலிருந்து நாம் உணரவேண்டும். எள்ளளவும் பொய்யில்லாமல் உள்ளனவற்றை உள்ளபடி எல்லோர் மனமும் விஷயங்களை ஏற்குமாறு அது அமைந்துள்ளது. 1936-ஏப்ரல் திங்களில் அது வெளி வந்தது. அடுத்த நான்கு மாதங்களில் ஏழு பதிப்புக்கள் விலையாகி எட்டாம் பதிப்பு வெளியாயிற்று.

ஆங்கிலத்தில் எழுதப் பெற்றது அது. வேற்று நாட்டு மக்கள் இவர்பால் வைத்துள்ள பற்றுதலினால் லட்சக் கணக்கான பிரதிகள் விலையாகி இருக்கின்றன.

இறுவாய்

இந்திய மணிகளில் ஜவாஹர்லால் நேருவும் ஒருவர் என்று நாம் சொல்லப் புகுவது சிறுமையே ஆகும். உலக மணிகளில் இவர் ஒருவர் என்பதே ஏற்புடைத்தென்னலாம். வாழ்க ஜவாஹர்! வாழ்க அவர் திட்டங்கள்! அவர் வழியாக வந்த சுதந்திரம் அவர் அமைப்பினாலேயே உறுதியைப் பெறுவதாக!
